ஓம்

பரப்பிரம்மணே நமஃ

ஸ்ரீசேஷாத்திரிசிவனார்

அருளிச்செய்த

நாநாசிவவாதக்கட்டளை

இது

மாம்பலம் ஸ்ரீராமகிருஷ்ணமிஷின் ஹைஸ்கூல்

தமிழ்ப்பண்டிதர்

பிரம்ம ஞானனந்த சுவாமிகள் என்கிற

T. C. பார்த்தசாரதி அய்யங்காரால்

எழுதிய

விருத்தியுரையும்

9 APR 1941
181.48

அ. முத்துவடிவேல் முதலியாரால்

பூமகள்விலாச அச்சுக்கூடத்தில்

பதிப்பித்தது.

1940

விலை] ரிஜிஸ்டர் காபிரயிட் [அணா 12

R65

அ. இரங்கசாமி முதலியார் ஸன்ஸ்
பூமகள்விலாச அச்சுக்கூடம்
நெ-24, தாண்டவராயப்பிள்ளை வீதி, சென்னை.

முகவுரை

"அரியது கேட்கின் வரிவடி வேலோய்
அரிதரிது மானிட ராத லரிது
மானிட ராயினுங் கூன்குருடு செவிடு
பேடு நீங்கிப் பிறத்த லரிது
பேடு நீங்கிப் பிறந்த காலையும்
ஞானமுங் கல்வியும் நயத்த லரிது
ஞானமுங் கல்வியும் நயந்த காலையும்
தானமுந் தவமும் தான்செய்த லரிது
தானமுந் தவமுந் தான்செய்வ ராயின்
வானவர் நாடு வழிதிறந் திடுமே"

என்ற ஔவை பிராட்டியாரின் வாக்கின்படி இவ்வுலகில் மக்கட் பிறப்பெடுத்தல் மிகவும் துர்லபம்; அவ்வண்ணம் புண்ணிய மிகுதியால் மக்கட் பிறப்பெடுத்தாலும், அடைவதற்கு அருமையான வேதாந்த ஞானத்தை அடைவது மிகவுங் கடினம். அம்மேலான ஞானப்பழம் பழுத்தோங்கும் கற்பகத்தருக்கள் இத்துணைய வென்று எண்ணிக் கணக்கிட்டுச் சொல்ல முடியாதனவாம். இவ்வுலகத்து அத்தருவினில் பழுத்துள்ள கனியை ஏறிக் கைப்பற்றிக் கனிவுறுவதற்குச் சோபானமாகவமைந்துள் எனை[illegible] பலவுண்டு. அவ்வகைய சோபானங்களில் முதன்மை [illegible]ற்றுநிற்பதில் நாநாஜீவவாதக்கட்டளையும் ஒன்றும். இந் நாநாஜீவவாதக்கட்டளையானது வேதாந்தம்கற்கும் பெரியோர்களின்

மனதில் அமைத்துக் கொள்ளவேண்டிய நித்தியாநித்திய வஸ்துவின் விவேகத்தை விசாலப்படுத்திப் பழுத்தொழுகும் தேவதருவின் கனியைச் சுலபமாகக் கைக்கொண்டு, தனியே இருந்து சுவைத்துச் சாரமல்லாத சம்சாரத்தை வெறுத்துக் கருணைக்கடலான கடவுளின் இணையடியைச் சேர்ந்து அனு பவிக்கச் செய்யும் தூண்டாத்தீபமாக அமைந்தது.

இச்சிறு புத்தகத்தின் உட்பிரிவும், வகையின் அமைப்பும் மாடியிற் செல்வான் ஒருவன் சிரமமல்லாமல் மாடியில் அடைவதற்கு அமைந்துள்ள படிகள் எவ்வகையில் அமைக்கப் பட்டிருக்கின்றனவோ, அதைப்போல் வேதாந்த சாஸ்திர மென்னும் மேன்மாடியை அடைய இதுவே தக்கதொரு சாதனமாக வுள்ளது. இந்நூல் பற்பலவர்களால் போற்றப் பட்டு வருவதெனினும், இதற்குச் சரிவர வமைந்த விரிவுரை யொன்று திருஷ்டாந்தங்களுடன் இருந்தால் நலமெனக் கொண்டு, நால்வகை ஆச்சிரமத்தும் நலம்படத் தோய்ந்த வர்களுள், கடைக்கண் நின்று ஒழுகும் மேலோரே இந்நூலை எடுத்துப் புகட்டுவதற்கும், புறத்தெடுத்து மொழிவதற்கும் அருகராவார் என்பது கொண்டு, அத்துணைய மேலோரின் துணையால் இந்நூல் வேண்டுவன விரித்தும் வெளிப்படுத்திய தென்க.

இங்ஙனம்

மாம்பலம்
17-10-40

T. C. பார்த்தசாரதி அய்யங்கார்.

ஓம் தத்ஸத்

நாநாசீவவாதக்கட்டளை

விருத்தியுரை

அருமறை யாகமத்தினுள தனிப்பொருளே
கருணையினா லவனி தன்னில்
திருவுருவாம் வந்தருளி மலமயக்காற்
செகநாட்டஞ் செறிந்து வாடும்
தெரிவிலியேன் றனக்கருள் நாட்டங் கொடுத்தென்
றனைமுன்னர்த் தெரித்துப் பின்னர்
ஒருவடி வாந்தனை யறிவித் தொன்றாக்கு
மருளிறையை யுன்னி வாழ்வாம்.

அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணைசொரூபனாய எம்பெருமான் திருவருட்சத்தியினால், அவன், அவள், அது என்று சொல்லும்வண்ணம் நானாவித நாமரூப பேத விசித்திர மாயா வினோத ஜாலமாய் விரிந்து மோக்ஷஸாதனங்கள் நிரம்பப் பெற்றுப் பொலிவுடன் பிரகாசிக்கும் பிரபஞ்சமாயும், அனாதி மாயாந்தகாரப் பேரிருளிற் சிக்கித் தம்மை மறந்தவர்களாகிச் சுழல்காற்றில் அகப்பட்ட துரும்பென கற்பிதாகாரமான உலகின் பாசச் சுழலில் அகப்பட்டு வரவு போக்கு என்னும் பிறப் பிறப்பாதி சம்ஸாரஸாகரத்தில் ஆழ்ந்தி வருந்தும் துன்பம் நீங்க, பவசாகரக்கடல் கடந்து முத்தி என்னுங்

கரையேறுவதற்காய்ச் சிவாநுக்கிரகத்தால் மேன்மை பொருந்திய மானிடதேகம் என்னும் தெப்பத்தைப் பெற்ற சீவர்கள் என்பது தோன்றவும்; பற்பல பிறவிகடோறுஞ் செய்து வந்த நிஷ்காம சத்கன்ம புண்ணியத்தின் மேலீட்டாற் சித்தசுத்தி முதிர்ந்து விவேகிகளாகி மாயா விநோதமாய் விளங்கும் தனுகரண புவன போகங்கள் அனைத்தும் கானல் நீரைப்போன்றதென விசாரணையாலறிந்து, இவையாவும் நிலையற்றதென்றும், நித்தியமாய் விளங்கும் பேரின்ப வீடாகிய புருஷார்த்தத்தை அடைவதே பிறவி எடுத்ததற்குப் பிரயோசனமென்று சந்தேகமில்லாமல் தெளிவுற் றுணர்ந்து, இனி, நிர்விகார சுயம்பிரகாச பரப்பிரம்மமாய் விளங்கும் எம்பெருமான் தனிப்பெருங் கருணையினால் அன்றித் தேகேந்திரிய பிராணாந்தக்கரணக் கூட்டங்களாகிய தத்துவங்களாலும், தத்துவத் தலைவர்களாகிய தேவர்களாலும் அறியப்படாததாய்ச் சர்வ சாட்சியாய்ப் பெருபோகச் செல்வமாய் நித்தியமாய் விளங்கும் மோக்ஷம் பெறவேண்டுமென்று தோன்றவும், அதனைப் பெறும் நேர் மார்க்கம் சாதன சதுஷ்டயமென் றறியாமல், மதிமருண்டு பற்பல மார்க்காதிகளிற் புக்கு யோகாதிகளி லூன்றியும் மருள் நீங்காமல் போக, உண்மை ஞானவாயிலாகப் பெறும் மோக்ஷ மென்னும் பேரின்ப வாழ்வைப்பெற முடியாதென வெண்ணி, பற்பல விஷயங்களிலே ஈடுபட்டிருந்த மனதைத் துவந்துவங்களினின்று ஆன்ம சொரூபத்தில் லயப்பட்டு நிவாத விளக்குபோல் பதைப் பற்று இருப்பதே பேரின்பவீடு. ஆதலால், தேசகாலமென்னும் பஞ்சாக்ஷர நிலையிற் புகுந்து, பத்துவகையதான நாதங்

களைக் கடத்தி, ஞானத்தில் கிரியை, ஞானத்தில் யோகம், ஞானத்தில் ஞானம் என்கிற படியையும் தாண்டு விப்பதாயும், இரவு பகல் அறியாமல் தூங்காமற் றூங்கச் செய்வதாயும், நினைப்பு மறப்பு என்னும் சகல கேவலமாகிய அறிவு அறியாமை அற்றுச் சொரூபாநுபூதியைக் கொடுத்துச் சுகாதீதநிலையிற் சும்மா இருக்கச் செய்வதாகிய சீவப்பிரம்ம ஐக்கியத்தை அறிந்து சுத்த சன்மார்க்கமாய நித்தியாநித்திய வத்து விவேகமும், இகமுத்திரார்த்த பலபோக விராகமும், சமாதி சட்கசம்பத்தியும், முமுக்ஷுத்துவம் என்கிற மெய்ஞ் ஞான சாதன சதுஷ்டய சம்பத்தை அடைந்த ஒரு அதி தீவிரபக்குவியானவன், மலச்சிறையில் கட்டுண்டவனுய்ப் பவத்துன்பப்பட்டு வெகுகாலம் தாயைத்தேடும் குழவியைப் போல், இக்கொடியதாகிய துன்பத்தை நீக்கி மோக்ஷ வின்பத்தை அளித்து இரக்ஷிப்பவர் எங்குளர் என்று பற்பல இடங்களிலும் தேடியலையலானான்.

அப்போது, பாலுக்குள் மறைந்து பூரணமாய் இருந்த நெய் கடைதலினால் தடித்து வெளிப்பட்டுத் தோன்றியது போல, தன்னுள் மறைந்து இருந்த சச்சிதாநந்த நித்திய பரிபூரண சிவசொரூபமே பாசவைராக்கியம், ஜீவகாருண்ணி யம், ஈசுவரபக்தி, பிரமஞானம் ஆகிய நான்கினுடன் கூடி விளங்கும் ஸ்ரீ சற்குரு சுவாமிகளே, அருளாசிரியாராக வரக் கண்டு கட்புலனுக்குத் தோன்ற, இவ்வண்ணம் தோன்றிய அருளாசிரியரின் திருவடிகளில் அனந்தமுறை கரசரண அவயவங்கள் நிலத்தில் தோயும்படி அட்டாங்க பஞ்சாங்க

தீர்க்க நமஸ்காரங்கள் செய்து, கண்களில் நீர்சோரப் பயபக்தி விசுவாசத்துடன் எழுந்து சிரத்தின்மிசை கரங்கள் கூப்பிப் பலவாறும்த் துதித்து நின்றவனைப் பார்த்து, அப்பா! நினக்கு உற்ற ஆபத்து என்ன? என்று வினவினன்.

சீஷன்:—சுவாமி! பலாபேக்ஷை சிறிதும் இல்லாமல் அடியேனைத் தடுத்து ஆட்கொள்ள வந்த கிருபாநிதியாகிய ஞானப்பெருங் கடலே! தேவரீரல்லாமல் மற்று யாவராலும் நீக்குதற்கு அரிய இப்பிறவித் துன்பமே அடியேனுக்கு உற்ற ஆபத்து என்று விண்ணப்பம் செய்தான்.

ஆசாரியன்:—அவனது பக்குவ தசையைக் கவனித்து, குழந்தாய்! உன் பிறவித்துன்பம் முயற்கோடு போன்றது, கிடையாதது. அது மலத்தால் நேர்ந்தது எனத் திருவாய் மலர்ந்தருளினர்.

சீஷன்:—அது எனக்கு விளங்கவில்லை. மலமாவது யாது? பிர்மமாவது யாது? நான் யாவன்? இவற்றை அடியேனுக்குத் தெளிவுண்டாகத் திருவுளம்பற்ற விரித்தருள வேண்டுமெனப் பிரார்த்தித்தான்.

அப்போது, ஒருபோதும் நீங்காது நிலைபெற்றிருக்கும் நிரதிசயானந்தமாகிய மோக்ஷார்த்தத்தை விரும்பியவராய் மெய்ஞ்ஞான சாதனங்கள் நான்கினையும் உடலாகப் பெற்று உடல் வெறுப்பும் உலக வெறுப்பும் மருவி மலபரிபாக மெய்திச் சத்தினிபாதமுற்று இலகும் அதிதீவிரதர பக்குவர்களாகிய அன்பர்களின் துயரறத் தடுத்து ஆளும்பொருட்டு

முன்னர்ச் சனகாதியரை ரக்ஷித்த வண்ணம் சர்வலோக பரிபூரண நிஷ்கள தேஜோமய சச்சிதாநந்த வடிவ பரப்பிரமம சகளீகரித்து அருளாசானுய்த் திருவுருவந் தாங்கிவந்த குருவானவர், அப்பா!

மலமாவது அஞ்ஞானம், மாயை, கன்மம் எனத் திரிவித மாக விருக்கும்; சூரியாதி அங்கிப பிரகாசங்களே வேண்டாது சகலத்தையுந் தோற்றுவித்துக்கொண்டு தானுஞ் சுயம்பிரகாச மாய்ச் சதா விளங்குகின்றபடியால், அஞ்ஞானமல ரகிதமாயும், சகலாதாரத்திற்கும் தன்னைத்தவிர வேருெருவர் இல்லாமல் தனித்த அத்துவிதமாய் விளங்குகின்றபடியால் மாயாமல ரகிதமாயும், தேசகால வஸ்து பரிச்சேதமின்றிப் பரிபூரண மாய் விளங்குகின்றபடியால் கன்மமல ரகிதமாயும் விளங்கு கின்றதே பிரமம்; அதனை ஒவ்வொரு பிறப்பிலும் உயிரை விடாமல் தொன்றுதொட்டுச் செய்துவந்த குரோதாதிகள், அந்தக்கரணத்தின் சூக்ஷுமாவஸ்தையின் சமஸ்காராதிகள், பதார்த்த விஷயமான மாறுபாடான சித்தத்தின் உற்பத்திக் குக் காரணமான வாஸனாதிகளே பரிபூரணத்தைக் காண வொண்ணாத திரையாக விருந்து தடுப்பனவாகு மென்றார்.

சீஷன்:—சுவாமி! அப்படியாயின் தொன்றுதொட்டு வந்த அசுத்த வாஸனையாவது யாது?

ஆசாரியன்:—மனோவன்மையினால் முன்பின் ஆலோசனை ஒருசிறிது மில்லாமல் உண்டாகும் காமக்குரோதாதிகளும், மனம் புத்தி சித்தம் அகங்காரம் என்கின்ற அந்தக்கரணங்

களினது சூக்ஷ்மாவஸ்தைகளின் காரியங்களும், திரிபதார்த்த ஞானத்தாலே செவ்வனே வெளிப்படுத்தப் பட்டனவாயும், அப்பதார்த்தங்களைப் பின்பற்றிச் சித்தத்தின் உற்பத்திக்குக் காரண மிருப்பதே அசுத்தவாசனை என்றறிவையாக. அன்றியும் சிலர் இதனை,

"வேறென் றெண்ணும லுள்ளபடி சுகமா
விருக்கவே யேழையேற் கருள் செய்" என்றும்,

"அளவிலாப் பாவகத்தா லமுக்குண்டிங் கறிவின்றி
வினைவொன்று மறியாதே வெறுவியனுய்க் கிடைப்பேனுக்கு"

என்றுங் கூறியபடியால் பாவனையுள்ள வரையில் பவம் நீங்காது என்பதும் தெரிவாய்.

சிஷன்:—தேவரீர் கூறிய அசுத்தவாசனையை அறிந்தேனாயினும், ஞானவிரோதியான மற்றைய வாசனைகளின் தன்மை என்னவோ?

ஆசாரியன்:—அவைகள், லோகவாசனை, தேகவாசனை, சாஸ்திரவாசனை என மூன்று வகையாகும். இவைகள் ஒவ்வொன்றும் சுருதியாதிகளில் ஞானத்தைப் பெறுவதற்குத் தடையெனவே சொல்லியுள்ளன. அவற்றுள், லோகவாசனையாவது:—உலகத்தில் ஸமஸ்தமான பேர்களும் தன்னை நிந்திக்காமலிருக்க வேண்டும்; சர்வதா தன்னையே தோத்திரம் பண்ண வேண்டும் என்று அபிமான பூர்வகமாகத் தோன்றுகின்றதேயாம். தேகவாசனையாவது:—ஆயசு, ஆரோக்கியம், அழகு சம்பாதிக்க வேண்டுமென்கிற ஒரு அபிமானமே

யாகும். சாஸ்திர வாசனையாவது:—சாஸ்திர பாடத்திலும், சாஸ்திரார்த்த ஞானத்திலும், சாஸ்திராநுஷ்டானத்திலும் விதனமுண்டாயிருப்பதேயாம். இதனால் தன் உண்மையான ஆத்மவிசாரம் சம்பாதிக்கக்கூடாது. அந்த விசனம் சாஸ்திர விஷயமான வாசனா சொரூபப் பிரதிபந்தகம் என அறிவாய்.

சிஷன்:—சுவாமி! இவ்வாசனையைத் தானே விடுதல் வேண்டுமென்கின்றீர்? இது வல்லாமல் வேறு வாசனைகளு முண்டோ?

ஆசாரியன்:—தன்னைப் பற்றித் தானே மிகவும் டம்பமாகப் பேசிக்கொள்ளுவதும், தன்னினும் வேறொருவர் இல்லையென்று கர்வங் கொள்ளுவதும், தன்னின் நிலைமையுணராமல் அகங்கரிப்பதும், தன்னைத் தானே மதித்துத் திரிதலாகிய மமகாரமுமாகி அசுத்த தன்மைவாய்ந்த வாசனையுமுண்டு. இவைகள்,

"அகர்வக் குரோத ஹஹங்காரம்
சதி சங்கம ப்ரலாபநம்
அப்ரியம் டம்ப மாற்சரியம்
ராஜஸம் குண லக்ஷணம்"

என்கிறபடி, ராஜஸ குணத்தினதும்.

"அஞ்ஞான மோஹ நித்ரஸ்யா
சாபல்யம் புத்தி ஹீநதா
பாபீஷ்டம் பரவா தித்யம்
தாமஸங் குண லக்ஷணம்"

என்கிறபடி, தாமஸ குணத்தினதும் ஆகும்.

இவ்வாசனைகள் ஒருவனுக்கு நீங்க வேண்டுமாயின், பலனை விரும்பிச் செய்வதாய காமிய கர்மம் பந்தத்திற்கு ஏது வாக நிற்பதனுல், அதனைத் தவிர்த்துப் பலனை விரும்பாது செய்வதாகிய நிஷ்காமிய கர்மம் அந்தக்கரண சுத்திக்கு ஏது வாகலின், முன்னதை விட்டுப் பின்னதைச் செய்தால் இவ்வாசனைகள் நீங்குமெனத் தெளிதி.

விட்சேபம்

சிஷன்:--சுவாமி! அடியேன் மனம் ஒரு இடத்திலும் நிலைபெறுமல் சதா அங்கு மிங்கும் சஞ்சரித்துக்கொண்டே யிருக்கின்றனவே. இதனை ஒரு நிலைப்படுத்துவது எவ்வித மென்று வினவினுன்.

ஆசாரியன்:—அப்பா! அது பிறவி முதல் துணைக்காரண மாக விருந்து உதவுவது. அது தாமதகுணத்தில் தலைமண்டிக் கிடப்பது. அதனை ஆவாணசத்தி மூடிக்கிடக்கும். அதற்கு முன்னர் விஷயஞானத்தை விளக்கி மூர்த்தியுபவாசனையில் புகும்படிச் செய்தல் வேண்டும். பிறகு ஞானசாதனமாக விருந்து உதவும் ஈசுரநாமோச்சாரணத்தில் பதியவிடல் வேண்டும். பின்னர், “ஸோஹம்” என்னும் அஜபாகாயத்திரி மந்திரத்தைத் திரிகரண சுத்தியாய் இவ்வஜபாமந்திரத்தை முறைப்படி தியானித்தால் சித்தசுத்தி யடைந்து பேறு பெறலாமாதலின், ஞானசாதனமாகியவற்றைப் பழகச்செய் தல் வேண்டும். இதனை,

"ஹகாரேண பஹிர்யாதி ஸகாரேண வஸேத்புநஃ
ஹம்ஸஹம் ஸேத்ய மும்மந்த்ரம் ஜீவோபஜதி ஸர்வதா
அஜபா நாமகாயத்ரீ யோகிநாம் மோக்ஷதாஸதா
அஸ்பா ஸங்கல்ப மாத்ரேண நரஃ பாபைஃ ப்ரமுச்யதே"

என்கிற தியானபிந்து உபநிஷத்திற் கூறியது அறிக.

பின்னர், அதற்குச் சொரூபஞானம் உண்டாகும்படி குருவைக்கொண்டு விளக்கிவைத்துத் திருத்தல் வேண்டும். ஏனெனில், குருசேவையாலே தான் மனம் ஒருவழிப்படும். பரமேசுவரனே குருவாக வருகிறுனென்பது ஆன்ருேர் வாக்கு. இதனை,

"குருவே சிவமெனக் கூறினன் நந்தி
குருவே சிவமென் பதுகுறித் தோரார்
குருவே சிவமாகிக் கோனுமாய் நிற்குங்
குருவே யுரையுணர் வற்றதோர் கோவே"

என்ருர் திருமூலரும்.

இதனல் பரமேசுவர பக்தியால் உண்டாகும் பலனிலும் குருபக்தியால் உண்டாகும் பயன் பெரியதாகும். உன் புத்தியின் வன்மையால் நோக்குவையேல், பரமேசுவர சேவை தர்மத்தின் உற்பத்தி வாயிலாக அந்தக்கரண சுத்தி வடிவ பலத்திற்குக் காரணமாக விருக்கிறது. ஆதலால், பரமேசுவர சேவை பிரத்தியட்சமாகாத பலத்திற்குக் காரணமாம். குரு சேவை தர்மாபேக்ஷை இல்லாமல் உபதேச வடிவ பலத்திற்குக் காரணமாக விருத்தலால் பிரத்தியக்ஷமாகக்கூடிய பலத்திற்குக் காரணமாம். அன்றியும், அது தர்மத்தின் உற்பத்திவாயிலாக

அந்தக்கரணசுத்தி வடிவபலத்திற்குக் காரணமாக விருத்த லால், அதிட்ட பலத்திற்குக் காரணமாம். பரமேசுவர சேவையால் பிரத்தியக்ஷமாகாத பலமும், குருசேவையால் காணக்கூடியதும் காணக்கூடாததுமான இருவகைய பலன் களும் உண்டாவதாக யிருக்கையாலே, பிள்ளாய்! பரமேச்சுவர சேவையினும் குருசேவை இன்றியமையாதது என அருளிச் செய்தனர்.

சீஷன்:—குருசேவை எத்தனை வகையாம்?

குரு:—அது நான்காகு வகையாம்.

சீஷன்:—அவற்றை விவரித்துரைத்தல் வேண்டும்.

குரு:—அவை ஆப்தம், அங்கம், ஸ்தானம், சற்பாவம் என்பனவாம்.

முறையே குருவிற்கு அநுகூலமாய காரியங்களைச் செய் தல் ஆப்தமென்றும், குருவினது பாதசிசுருஷையே அங்க மெனவும், குருவினது மனை நில முதலானவைகளைப் பழுது படா வண்ணம் காத்தல் ஸ்தானமா மெனவும், குருவைச் சாட்சாத் பரமசிவமெனக் கருதுதலே சத்பாவ மெனவும் அறிவை.

இதுவுமல்லாமல், குருவினிடத்தில் ஈசுவரபாவமும் அவரது வடிவத்தைத் தியானித்தலும் மன அர்ப்பணமெனவே கொள்ளுவையாக. இவ்விதம் சரீரம், வாக்கு, தனம் என்பன வற்றின் அர்ப்பணத்தால் உண்டாகும் குருசேவையினால் மல தோஷ நிவிர்த்தியும், மன அர்ப்பணத்தால் உண்டாகும் குரு

சேவையினல் விட்சேபதோஷ நிவர்த்தியு முண்டாகுமென்று அறிதல் வேண்டுமென்றார். இதனை,

"குருரேவ பரோதர்மோ குருரேவ பராகதி:
யஸ்யதேவே பராபக்திர் யதாதேவே ததாகுரௌ
ஸப்ரஹ்ம வித்பரம் ப்ரேயாதிதி வேதாநு ஶாஸநம்"

என்கிற சாட்டியாயனி யுபநிஷத்திலும், பிரமகீதை, வேதாந்த சூளாமணி, விஞ்ஞானசாரம், அருட்பிரகாசம், பதிபசுபாச விளக்கம், நிஷ்டாநுபூதி, வருங்காலத்திரங்கல், திருக்குத் திரிசிய விவேகம் முதலிய வேதாந்த நூல்களினுலும் அறிவாய்.

சீஷன்:—ஞானத்தினுல் அல்லாமல் ஏனைய சாதனங்களால் முக்தியுண்டாகாதெனப் பன்முறையுரைத்தீர். எத்தகைய ஞானத்தினுல் முக்தியுண்டாகும்? அந்த ஞானம் எவ்வாறு ஒழுகுபவனுக்கு உண்டாகும்?

குரு:—குழந்தாய்! நிஷ்காம கர்மத்தினுல் மலமும், ஈசுவரோபாசனையினுல் மனம் ஒருமுகப் படாமையும் நிவிர்த்தியாகிச் சொரூபாவரண மாத்திரம் உடையவனுகியும், பூரணமாய சாதன சதுஷ்டய முடையவனுகவும் யான் யார்? எனக்கு இந்தச் சம்ஸாரம் எவ்விதம் வந்தது? இது யாவரால் நிவர்த்தியாகும்? என்று சகலவித பிரபுத் தன்மையினை விட்டு மனைவி மக்கள் பொருளென்னும் ஈஷணாத்திரயங்கள் என்னும் மூன்றிலும் விலகி,

"கானவர் வலையிற் பட்டுக் கைதப்பி
யோடு மான் போல்"

என்றபடி விரைந்து சென்று சந்திப்பிற் குரிய பத்திரம் புஷ்பம் பலம் முதலியவற்றை ஏந்திய கரத்தையுடையவனுய்ச் சற்குருவை அடைந்து,

"சைதந்யம் ஶாஸ்வதம் ஶாந்தம்
வியோமாதீதம் நிரஞ்சனம்
நாதபிந்து களாதீதம் தஸ்மை
ஶ்ரீ குரவே நம:"

என்று அஷ்டமந்திர பூர்வகமாய்ச் சாஷ்டாங்க நமஸ்காரஞ் செய்து பின்னர் எழுந்து அடிமைத் தன்மையினுலே மிகுந்து கும்பிட்டுக்கொண்டு நின்று அடியேனுக்கு இப் பிறவித் துன்பம் எவ்வாற்றுன் ஒழியுமென்று வினவி குருநாதன் கடாக்ஷம் செய்யும்வரை சாயைபோல் விடாதிருப்பவனுக்கே பிரம்மாத்ம ஐக்கிய ஞானத்தினுல் முத்தியுண்டாகும். இந்த ஞானம் அந்தரங்க சாதனங்களாற் சித்திக்குமன்றிப் பகிரங்க சாதனங்களால் சித்தியாகாது.

சீஷன்:—அந்தரங்க பகிரங்க சாதனங்களை அடியேன் உள்ளத்தில் நன்ருகப் பதியுமாறு அருள்செய்ய வேண்டுகின்றேன்.

குரு:—குழந்தாய்! அது, நித்தியாநித்திய வஸ்து விவேகம், இகபரபோக விராகம், சமாதி சட்க சம்பத்தி, முமுக்ஷுத்துவம் என்கிற சாதன சதுஷ்டயம் நான்கும், சிரவணம், மனனம், நிதித்தியாசனம் என்கிற மூன்றும், தத்துவம் பதார்த்த சோதனம் ஆகிய இவைகள் எட்டும் பிரமாத்ம

ஞானத்திற்கு அந்தரங்கமான கருவி என்று அறிவை. கர்மோபாஸனாதிகள் பகிரங்க ஸாதனமென்று தெரிதி.

சீஷன்:—சுவாமி! சாதனங்களை இரண்டு வகையாக்கிச் சொன்னது என்? அதனைத் திருவாய் மலர்ந்து அருளுதல் வேண்டும்.

குரு:—அப்பா! நித்தியா நித்திய விவேகமாதிகள் எண் வகையும் ஒருவனது ஞானத்தை விகஸிக்கச் செய்வதற்குத் தகுந்த கருவியாயினபடியால் அவற்றை உள்ளாகிய கருவி யாவதென்றேம். கர்மோபாஸனைகள் உட்கருவிகளின் உற்பத்திக்குத் துணையாக விருந்து ஞானத்தைக் கொடுப்பதற்குச் சிறிது தூரத்தில் இருப்பதால் வெளியாய கருவி என்றும் விளம்பினும்.

சீஷன்:—சுவாமி! நீர் முன்னமே திருவாய்மலர்ந்துள்ள உபதேசாதிகளின் முடிவால் கர்மோபாஸனைகளைப் பற்றி அறிவேன். மற்றவைகளைத்தான் அறிய விழைகின்றேன்.

குரு:—கீழே சொல்லப் போகும் விஷயத்தால் அவற்றின் தன்மைகள் நன்றாக விளங்கும். அப்பா! மோக்ஷத்தை அடைவதற்கு எல்லோரும் அதிகாரிகளாகிவிடுவார்கள் என்று எண்ணாதே. எவன் அந்தக்கரணத்திலுள்ள மலத்தை நிஷ்காம கருமத்தாலும் விட்சேபத்தாலும் கடவுளுபாசனையாலும் போகும்வண்ணம் செய்துகொண்டு தனது உண்மையான உருவத்தை மூடிக்கிடக்கின்ற அஞ்ஞானத்தோடும் நான்கு வகையான கருவிகளுடனும் கூடி இருக்கின்றவனே

மோக்ஷத்திற்குத் தகுந்த அதிகாரியாவான். மற்றவர்கள் எக்காரணங் கொண்டும் அதிகாரியாகார்கள் என்பதை மனதிற் பதியவைத்துக்கொள்.

சீஷன்:—சுவாமி! சாதன சதுஷ்டயமுள்ளவனே அதிகாரி என்று சொல்லிவிட்டீர். அதெப்படி?

குரு:—குழந்தாய்! ஒவ்வொருவனுக்கு ஒவ்வொரு காரியம் விதிக்கப்பட் டிருக்கின்றது. அதனை அவனவன் செய்தால்தானே அதில் அவனுக்கு அதிகாரம் உண்டு. அதனைப் போல வேதாந்த விசாரத்திற்குச் சாதன சதுஷ்டய சம்பன்னத்துவம் உண்டானவனே அதிகாரி.

சீஷன்:—நித்தியாநித்திய வஸ்து விவேகமாவ தென்ன?

குரு:—நித்திய வஸ்து இன்ன தெனவும், அநித்திய வஸ்து இன்ன தெனவும் விசாரித்தறிதலாம்.

சீஷன்:—நித்திய வஸ்து யாது? அநித்திய வஸ்து யாது?

குரு:—பிரமமே நித்திய வஸ்து. அது ஒன்றுமே நாசமின்றி இருக்கும் வஸ்து. பஞ்சபூத பௌதிக முதலிய ஜகத்தெல்லாம் அநித்திய வஸ்து. ஏனெனில், அவைகள் நாசத்தை அடைவதாக யிருப்பதால்.

சீஷன்:—இம் மனனத்திற்குக் காரணம் என்ன?

குரு:—சித்தசுத்தியினால், நித்தியா நித்ய வஸ்து விவேக முண்டாகும்.

சீஷன்:—சொரூபம் யாது?

குரு:—குழந்தாய்! சாஸ்திராதிகளைத் துணையாகக் கொண்டு, தத்துவப் பொருளின் நிலையுடைத்து என்னு முண்மையும், மற்றை சீவ ஈசுவர ஜகத்தெல்லாம் நிலையுடைத் தல்ல வென்னும் உறுதி செய்து கொள்வதே சொரூப மென்பது.

சீஷன்:—காரியம் யாது?

குரு:—பிரம்மம் இருந்தால் தோன்றுதா? அப்பிரம்மம் பலபல உருவங்கள் கொண்டுலவுகின்றன வென்று பேசு கின்றனரே! இது யாதுபற்றி யிருக்கலாம் என ஸதா நினைத் திருத்தலையே காரிய மென்பது.

சீஷன்:—அவதியாவது யாது?

குரு:—ஈசுவரனையும் ஞானிகளையும் தவிர மற்றைச் சீவராசிகள் அனைத்தையும் திரிபதார்த்த நிச்சயந் தெரிய வொட்டாமல், நாஸ்தி, நபாதி என்னும் இருமுகத்தினால் மழைகாலத்து அமாவாசை நிசியின் குமரியிருளைப்போல மறைந்து நிற்கும் ஆவரணம் ஒழிய மறுபடியும் வந்து சூழ்ந்து கொள்ளாவண்ணம் பிரம்மசொரூபத்தைச் சிந்திப்பதேயாகும்.

இதற்குப் பலம் புண்ணியலோகப் பிராப்தியேயாக இவ் விதம் ஒவ்வொரு சாதனத்திற்கும், ஏது, சொரூபம், காரியம், அவதி, பலமென்னும் இவ்வைந்தும் வருமெனக் கொள்க.

சீஷன்:—சுவாமி! அந்தக்கரணசுத்தி யில்லாதவர்களுக்கு நித்தியா நித்திய வஸ்து விவேகமுண்டாகாமையினால் அந்தக்

கரண சுத்தியே நித்தியா நித்திய வஸ்து விவேகத்திற்குக் காரணமென்றும், பிரமமே நித்தியமாயுள்ளது ஏனையவை அநித்தியமா யுள்ளதென்று சாஸ்திரவாயிலாக நிச்சயித்தலே சொரூபமென்றும், சாஸ்திர வாயிலாக நித்திய மின்னது அநித்திய மின்னது என்று நிச்சயித்ததைச் சதா சிந்தித்துக் கொண்டிருத்தலே காரிய மென்றும், நாமரூப வடிவங்கள் யாவும் அநித்தியம் அவையின்றியது நித்தியமென்று நிச்சயித்தது எவ்வாற்றானும் நீங்காது நன்றாய்த் திடப்பட்டிருப்பதே எல்லை என்றும், புண்ணிய வுலகடைவதே பலனென்றும் என் மனதிற் பதியும் வண்ணம் கிருபைபுரிந்த தேவரீர் இக முத்திரார்த்த பலபோக விராகமாவது என்னை என்பதை விரித்துரைக்கப் பிரார்த்திக்கின்றேன்.

குரு:—இம்மையிலும் மறுமையிலும் அடையத் தகுவதாயுள்ள விஷய போகங்கள் எல்லாம் நிலையற்றன வென்றும் உண்மையில் துன்பத்தைத் தருவன வென்று அறிந்து அவற்றின்கண் ஆசையில்லாமல் இருக்கக்கடவை.

சீஷன்:—இகலோக பரலோக போகங்கள் எதனால் உண்டாகின்றன? போகமென்றால் என்ன?

குரு:—நல்வினையா லுண்டாகின்றன. இன்ப துன்பங்கள் புலப்படத் தோன்றல் போகமெனப்படும். சீவனது உடல் அதற்கிடமாம் என்று அறிவை.

சீஷன்:—சுவாமி! தேவரீர் அறிவித்தபடி, விஷயபோகங்களை விஷமென வெறுத்து ஒன்றிலும் ஆசையில்லாமல் இருக்கவேண்டுமென்பதைத் தெரிந்துகொண்டேன். இதனை,

"ஆசை யறுமின்க ளாசை யறுமின்க
ளீசனோ டாயினு மாசை யறுமின்க
ளாசை படப்பட வாய்வருந் துன்பங்க
ளாசை விடவிட வானந்த மாமே"

எனத் திருமூலர் திருவாய் மலர்ந்தருளியது காண்க.

இதற்கும் சப்தாதி விஷயங்களில் தோஷதிருஷ்டி உண்டாகாதபோது விராகம் உண்டாகாமையின், விஷயங்களி லுள்ள தோஷ திருஷ்டியே இகபரபோக விராகத்துக்குக் காரணமாம். ஆசையில்லாமல் விஷயங்களைப் பற்றற விடுத் தலே சொரூபமாம். வாந்தி யெடுத்த அன்னம் போன்று ஆசையில்லாமல் பற்றற விடுத்த விஷயங்களில் மீண்டும் ஸம்ஸ்காரவாயிலாக ஆசையுண்டாகாமல் இருத்தலே காரிய மாம். எங்கெங்கே நாமரூபமுண்டு, ஆங்காங்கே துக்கமுண் டென்று காண்டல் கருதுதல் உரைக்கின்ற வாயில்களினால் உணர்ந்து நாமரூபமுள்ள விடங்களை யெல்லாம் நரகமாகக் காண்டலே அவதியாகும். இதற்கும் புண்ணியலோகப் பிராப்தியே பலமாகும்.

சீஷன்:—சுவாமி! சமாதி சட்கசம்பத்தி யாவதென்ன?

குரு:—அது, சமம், தமம், திதிக்ஷை, உபாதி, சிரத்தை, சமாதியென்று ஆறு வகையாம். மூன்றாவது சாதனமான விது, சிறப்பாகிய இக்குணங்களையுடையதாய் இருத்தல் பற்றிச் சமம் முதலாகவுள்ள இந்த ஆறையும் பேறாகவுடைய தெனச் சொல்லப்பட்டது. சமாதி = சமம் + ஆதி எனப் பிரிந்து நிற்கும்.

சீஷன்:—சமமாவ தென்ன?

குரு:—உட்காரண மென்னும் அந்தக்கரணத்தை விஷயங் களில் புகாதவாறு தடுத்தல். அன்றி, பாகிய வியாபார மில்லாமல் மனத்தைத் திருப்பி வேதாந்த சிரவணத்தில் அழுந்தச் செய்வதுவுமாம்.

சீஷன்:—தமமாவ தென்ன?

குரு:—செவி முதலியவற்றைப் புறக்கரணங்களில் (சப் தாதி விஷயங்களில்) புகவொண்ணுமல் தடுத்து வைத்துக் கொண்டிருத்தலாம்.

சீஷன்:—திதிக்ஷையாவ தென்ன?

குரு:—காமக்குரோதாதிகளைத் தலையெடுத்துத் தாண்ட வஞ் செய்யாவண்ணம் அடக்கிச் சீதம் உஷ்ணம் பசி தாகம் முதலிய சம்பந்தங்களைப் பொறுத்துக்கொண் டிருத்தலாகும். இதுவல்லாமல் பிராரப்த வினைவசத்தால் எது எக்காலத்தில் வருமோ அக்காலத்தில் அதனை அநுபவித்துத் தீரவேண்டு மென்று எண்ணித் தனக்கு உரிமை உடையதாகப் பாவிக்கப் படும் பொருளானது தன்னை விட்டு நீங்குவதைப் பற்றி வருத்தமும், தனக்கு மேன்மை உண்டாகுகிற பொருளைப் பற்றி ஒருவிதமான மனச்சந்தோஷமும் இல்லாமல் சமபுத்தி யுடனே இருப்பதுவுமாகும். இதனை, "வேண்டுதல் வேண் டாமை இலான்" என்றதாம்.

சீஷன்:—உபரதியாவ தென்ன?

குரு:—ஸ்திரீ, தனம், ஜாதி, அபிமானம் முதலிய சாதனங்களோடு கூடிய சகல கர்மங்களை விட்டும், விஷய

போகங்களை விஷயமாகக் கருதியும், ஸ்திரீயை வெறுத்தும் இருத்தலாகும். அன்றி, விகிதமான கர்மங்களைப் புத்தி பூர்வகமாய் விடுகிறதென்றும் அதைச் சந்நியாஸமென்றுஞ் சொல்லுவார்கள். அன்றி, விகிதமான கர்மங்களில் கர்த்தத்வாபிமான பலாபேக்ஷையில்லாமல் சகல பாவகன்மங்களை விட்டுச் சகல புண்ணிய கன்மங்களைச் செய்து பகவத் பிரீதியாக்குகிறதுமாம்.

சீஷன்:—சிரத்தையாவதென்ன?

குரு:—பூர்வம் யாதொன்றினிடத்தில் இருந்த விசுவாசமெல்லாம் குருவினிடத்திலும் வேதாந்த வாக்கியத்தில் வைப்பதாம்.

சீஷன்:—சமாதியாவது என்ன?

குரு:—முன்னம் திரும்பின மனமும் இந்திரியங்களும் வாசனை வசத்தால் வரப்பட்ட விஷயத்தினிடத்தில் போம். அதுகளைச் சிரவணத்திற்கு எதிரான விஷயங்களில் செல்லவொட்டாமல் திருப்பிச் சிரவணத்தில் வைப்பது.

சீஷன்:—சுவாமி! சிரத்தை என்பதை நன்கு விளக்க வேண்டுகிறேன்.

குரு:—குழந்தாய்! சாஸ்திரம் குரு முதலியவற்றின் வாக்கியங்களில் உண்டாகும் சிரத்தையானது ஈசுவரன் குரு முதலியோர்களின் பக்தியில்லாமல் சிறிதும் உண்டாகாது. எவனுடைய உள்ளத்தில் முதலில் ஈசுவரன் குரு மற்றைய பெரியோர்களிடத்தில் நல்ல புத்தியாகப் பிரீதிவடிவான

பக்தியுண்டாகிறதோ, அவனுக்கே வேதம் முதலிய சாஸ்திரங்களிலும் குரு முதலியோர் வாக்கியங்களிலும் பக்தியநுசாரமாகச் சிரத்தையுண்டாகிறது. ஆதலால், பக்தி எதுவோ, அது ஞானத்திற்கும் ஞானத்தின் ஸர்வ சாதனங்களுக்கும் முக்கிய காரணமாம். இதனாலேயே சிரத்தை பக்தி பூர்வகமாக இருத்தலால் சர்வ ஸாதனங்களிலும் முக்கிய ஸாதனமாம்.

சிஷன்:—இதற்கும் காரண முண்டல்லவா?

குரு:—ஆம். உண்டு. இயம நியமாதிகள் இல்லாதபோது சமாதி சட்க சம்பத்தியுண்டாகாமையின், இயம நியமாதிகள் உண்டாகி இருத்தலே சமாதி சட்க சம்பத்திக்குக் காரணம். இதற்குச் சித்த நிரோதமே சொரூபம். விஷயவாகரக்ஷயமே காரியம். பிரவிருத்தி யற்றுச் சுழுத்தி அவஸ்தையைப் போல விஷயங்களை மறந்து இருத்தலே அவதி. புண்ணிய லோகப் பிராப்தியே பலன் என்றறிவாய்.

சிஷன்:—முமுக்ஷுத்வம் என்றால் என்ன?

குரு:—மோக்ஷ விருப்பத்திற்கு முமுக்ஷுத்வமென்று பெயர். அன்றி, மோக்ஷத்தை அறிந்து அடைய வேண்டுமென்கிற அதிதீவிரமாகிய மனதுடனே கூடியிருக்கிறது. இதற்கே மோக்ஷமாவது பிரமத்தை அடைதலும், துக்க நிவிர்த்தியுமாம். இங்கே முமுக்ஷுத்துவ மென்றது, வீடு பற்றிக் கொண்டபோது அதனுள் இருந்தவன் தனது மனைவி மக்கள் பொருள் முதலியவற்றைக் கவனியாமல் வெப்பத்தால் தபிக்கப்பட்ட தன் தேகத்தின் கண்ணுள்ள வெப்பத்தைத் தணிக்கும் வண்ணம் தண்ணீரை ஒருவரது பிரயத்தின

மில்லாமலே தேடுவது போலவும், பசியெடுத்தவன் அன்னத்தைத் தேடுவது போலவுமுள்ள இயல்பாகிய விருப்பமே ஈண்டு குறித்த முமுக்ஷுத்துவம். மலவிட்சேப முள்ளவர் இடத்துள்ள முமுக்ஷுத்துவம், அவைகளின் நீக்கத்திற்கும் சாதன சதுஷ்டயங்களைப் பெறுதற்கும் காரணமாக விருக்கின்றது.

சிஷன்:—சுவாமி! மேலே சொல்லியதை என் மனதிற் பதியும் வண்ணம் திருவுளம் பற்றுதல் வேண்டும்.

குரு:—குழந்தாய்! நீ பலபல விருக்ஷங்களைக் கவனித்திருக்கின்றாய் அல்லவா? நான் இப்போது, மோக்ஷஸாதனங்களின் சம்பத்தி ஒரு விருக்ஷமென வைத்துக்கொள். அவ் விருக்ஷத்திற்கு நிஷ்காம கர்ம முதலிய முயற்சிகளினுற் செய்யப்பட்ட சுத்தசித்தமே நிலம். ஈசுவரன் குரு முதலியோர்களின் பக்தி விதை. மந்த விவேகம் முளை. திடவிவேகம் அடிமரம். விவிதமான வைராக்கியம் கிளைகள். சமமுதலிய ஐந்து சாதனங்கள் புஷ்பங்களின் கொத்துக்கள். குருவாக்கிய சிரவணம் அதன்பேரில் உண்டாகும் ஆண் விருக்ஷத்தின் சேர்க்கை. சிரவண மனன நிதித்தியாசன முதலிய இதர சாதனங்கள் அப்பழச் சம்பந்தியான இதர முயற்சிகள். சிரத்தை பழம். முமுக்ஷுத்துவம் பழத்தின் பரிபாக தசை. ஞானம் அப்பழத்தின் ரஸம். அப்பழத்திலும் பயனற்றதாகிய பக்தி யென்னும் விதை இருக்கிறது. அந்தப் பழத்தின் ஞானமென்னும் இரசம் எதுவோ அது சிரத்தை என்னும் பழத்தின் அதீனம். சிரத்தை என்னும் பழம் உலர்ந்து

போனால், அதன் ஞானமாகிய இரசமும் உலர்ந்து போகும். ஆகவே, ஞானமென்னும் இரசம் சிரத்தை என்னும் பழத்தின் அதீனமாம். அப்பழத்தைத் தின்னுதல் வாயிலாக வயிற்றில் ஸ்தாபிக்கவே, அதன் இரசமும் வயிற்றில் நிலை பெறும். ஜீவித்து இருக்கும் அளவும் வித்துவான்கள் சித்தத்தில் சாஸ்திர குரு வாக்கியங்களால் நிச்சயிக்கப்பட்ட பொருளில் இயல்பான சிரத்தை இருக்கும். அதுவரையில் ஞான நிஷ்டையிருக்கும். அந்தப் பழத்தை அறிவில்லாதவன் பக்தி யென்னும் உருசியுள்ள விதையின் உபேக்ஷையோடு பக்ஷணஞ் செய்கிறான். அவனுக்கு அதிக இனிப்பு உண்டாகிறதில்லை. அறிவுள்ளவன் பக்தி யென்னும் விதையோடும் ஞானமாகிய ரசத்தோடும் அப்பழத்தைத் தின்கின்றான். அவனால் அதன் அதிக இனிப்பு அநுபவிக்கப் படுகிறது. இவ்வாறு கூறியதி லிருந்து சிரத்தை யென்னும் பழத்திற்கு முக்தியே இனிப்பா மென்று பாலபோதம் கூறியதை என்றார்.

சிஷன்:—சுவாமி! அறிந்தேன். தெரிந்தேன். ஆயின் முன்னர் கூறியவற்றிற்கு எல்லாம் ஏது எடுத்துக் காட்டினீர். இம் முமுக்ஷுத்துவத்திற்கு அது இல்லையோ வென்று வினவினான்.

குரு:—சாதுசங்க பழக்கம் இல்லாதபோது அத்தியந்த துக்கநிவிர்த்தியும் தடையற்ற ஆனந்தமுமாகிய மோக்ஷத்தின் கண் தீவிர இச்சை யுண்டாகாமையின் சாதுசங்கப் பழக்கமே முமுக்ஷுத்துவத்திற்கு முதற்காரணம். இரண்டாவது, மனைவி மக்கள் பொருள் இவைகளில் சிறிதேனும் இச்சை

யில்லாமல் மோக்ஷமாத்திரத்தில் உள்ள இச்சையே சொரூபம். மூன்றாவது, ஆனால் நற்கல்வி அறிவுடைமை வைராக்கிய மாதிகளையுடைய பிரம்மநிஷ்ட குருவை அடைதலே காரியம். நான்காவது, குருவிற்குச் செய்யும் தொண்டு ஒன்றையே கைக்கொண்டு மற்றக் கருமங்களை எல்லாம் விட்டுவிடுதலே எல்லை. புண்ணியவுலகு அடைதலே பலம். இந்த நான்கு சாதனமும் ஒருவனுக்குக் கூடியிருந்தால், அவனே ஆத்ம விசாரம் செய்வதற்குத் தகுந்தவன். இதுபற்றியே இதற்கு அதிகாரிகளும், உத்தமோத்தமர், உத்தமர், மந்தர், மத்திம ரெனப் பிரித்து, முறையே முன்னர் கூறிய ஏது சொரூபம் காரியம் அவதி என்பதைக் காரணமாக்கிய தென்றறிவை. இவ்விதம் பிரித்தமைக்குக் காரணம், முதலதிகாரி விரைவாக வும், இரண்டாவததிகாரி கொஞ்சம் மெதுவாகவும், மூன்றாவ ததிகாரி பல நாட்கள் சென்றும், நான்காவததிகாரி சதா விசாரஞ் செய்யவும் ஆத்மவிசாரம் சித்திக்கும் என்று தெரிதி.

சீஷன்:—இச்சாதன சதுஷ்டயங்களின் ஒன்றற்கு ஒன்று பெற்றுள்ள சம்மந்தம் என்ன?

குரு:—பிள்ளாய்! இவ்வியன்தருமானாலத்தே சுருதி இதிகாஸம் புராணம் முதலியவற்றைத் தெளிவாக அறிந்துள்ள பண்டிதர்களுக்கு நித்தியா நித்திய வஸ்து விவேகம் நன்றாகத் தெரியும். ஆயின், அவர்கள் விஷயத்தில் பேராசையுடைய வர்களாய்க் காமிய கருமங்களைச் செய்கிறபடியால், அவர்கள் ஆசை யொழிய இரண்டாம் சாதனமாகிய இகமுத்திரார்த்த

பலபோக விராகமென்னும் சாதனமும் தெரியவேண்டியிருக்கிறது. இவ்விரண்டு சாதனமுடையவர்கள் மனவடக்கம் புலனடக்கம் ஆகிய இரண்டும் இல்லாமல் கோபத்தையும் தாபத்தையும் உடையவர்களாய் இருக்கிறபடியால், அவர்களின் நிமித்தம் சமாதிசட்கசம்பத்தியும் இன்றியமையாததாகவிருக்கின்றது. இம்மூன்றுவது சாதனத்தைக் கைக்கொண்டவர்களும், மான்தோலை புயத்தில் அடக்கி வைத்துக்கொண்டு, சடைமுடியைத் தாங்கி, யோகியர் என்னும் பெயரை வைத்துக்கொண்டு, குடும்ப பந்தங்களை விடுத்து, விரக்தியும் உபசாந்தமும் உடையவர்களாய் ஒருவரிடம் சென்று ஒன்றையும் பெறுமல் இருக்கின்றார்கள். அவ்வாறு இருந்தும் அவர்கள் சிரவணத்தில் இச்சையில்லா திருத்தல்பற்றி நான்காவது சாதனமும் இன்றியமையாமல் வேண்டியே இருக்கிறது. இதன் சம்மந்த வெற்றுமையினை அறிவாய் என்று விளக்கி, இதனை,

> "ப்ரஹ்ம விஜ்ஞாந லாபாய பரஹம்ஸ
> ஸமாஹ்வய:
> ஶாந்தி ப்ராந்த்யாதிபி ஸ்ஸர்வை ஸ்ஸாதநை
> ஸ்ஸஹிதோ பவேத்" என்றும்,

> "சாதன மாகுஞ் சதுஷ்டயங்கள் சமைந்தவத்
> தன்மை யோர்க்கு
> நீதியாக வருமறைதா னின்றே யிவர்க
> ளறியு வணம்
> பூத மாயும் புவனங்கள் பிறவுமாகி
> யிருந் ததுவு

மேத மில்லா தொன்றாய பரமே
யென்றே யியம்பினதால்''

என்று பிரமகீதையிலும்,

"சீராரு ஞானத்தி னிச்சைசெலச் செல்ல
வாராத காதற் குருபரன் பாலாகச்
சாராத சாதக நான்குந்தன் பாலுற்றோ
ருராயு ஞானந்த னுமடி வைக்கவே''

"சற்குணம் வாய்மை தயாவிவே கந்தன்மை
சற்குரு பாதமே சாயைபோ னீங்காமை
சிற்பர ஞானந் தெளியத் தெளிவோர்த
லற்புத மேதோன்ற லாகுஞ்சற் சீடனே''

என்பனவாதிய திருமந்திரத்திலும்,

"மேலாஞ் சதுஷ்ட சாதனங்கண் மேவிநிறைந்த
பேர்க் குரைக்கின்
மேலா மதுநா மெனத்திடமாய் விளங்கு
மவையில் லாதவர்க்கு
மேலாம்பரமன் மான் மழுவாய் விளங்கி
யுரைத்தும் விளங்காது
மேலாஞ் சாதனங்கள்வா மேவ வேண்டுஞ்
சாது சங்கம்''

என அத்துவித வுண்மையிலும்,

"பூதகா ரியங்க ளெல்லாம் பொய்ம்மை மெய்ப்பூதநாத
னுதலால் புவனத் தாசை யந்தரத் தாசை யற்ப
மோதறு வகைச்சம் பத்து முயர்முத்தி விருப்பு மிந்தச்
சாதன னுன்குந்தானே சீடர்க்குச் சடல மென்ப''

என்கிற பசுபதிபாச விளக்கத்தும் விளக்கியுள்ளபடி அநுஷ்டித்து, விதிவிலக்குகளை அறிந்து, தாபத்திரியாக்கினியைத் தகித்து, எண்வகைய குருபேதத்தைச் செவ்வனே பரிந்து தெரிந்து விகித குருவை நாடித் தேடி, ஆப்தாங்க ஸ்தான சற்பாவாதிகளை நினைத்துச் சேவை செய்து,

"இந்நேர் நெறியிற் சாதனங்க ளிவைநான்
கினும்வந் தெய்தியதே
தன்னேர் குரவன் றனையடைந்து சாற்றுஞ்
சீடா சாரமுறை
அந்நேர் பிசகா தேவல்புரிந் தருடன்
மீதிற் சுரப்பளவும்
பின்னே திரிந்து மவன்கொடுக்கப் பெறவே
வேண்டும் விஞ்ஞானம்"

என்றபடி ஒழுகி,

"நரனல னிவனமை யாள வந்திடும்
பரசிவ மெனத்தினம் பணியத் தக்கவ
னிருவினை யாழியை யெளிதி னீந்துவாற்
றிருமலி முத்தியைச் சேருந் திண்ணியன்"

என்று அவனிடம் உபதேசம் பெற்று,

"நாஸ்திகாய க்ருதக்நாய துராசார ரதாயவை
மத்பக்தி விமுகாயா ஸச்சாஸ்த்ர கர்மேஷு முஹ்யதே
குருபக்தி விஹீநாய தாதவ்யம் நகதாசந

என்ற முக்திகோபநிஷத் வாக்கியத்திற்கும்,

"அறிவிக்க வேண்டா மறிவற் றயர்வோர்க்கு
மறிவிக்க வேண்டா மறிவிற் செறிவோர்க்கு

மறிவுற் றறியாமை யெய்திநிற் போர்க்கே
யறிவிக்கத் தம்மறி வாரறி வோரே" எனவும்,

"தொழிலறி வாளர் சுருதிகண் ணாகப்
பழுதறி யாத பரம குருவை
வழியறி வார்நல் வழியறி வாள
ரழிவழி வார்மற்றை யல்லா தவரே"

எனவும் திருவாய்மலர்ந்த திருமூலர் வாக்கிற்கும்,

"குருமார்க்க மில்லாத குருடருடன் கூடிக்
கருமார்க்கத் துள்ளே கருத்தழிந்து கெட்டேனே.

எனப் பட்டினத்தார் வாக்கிற்கும்,

"குருமொழியே மலையிலக்கு மற்றமொழி யெல்லாங்
கோடின்றி வட்டாடல் கொள்வதொக்குங் கண்டாய்''

எனத் தாயுமானவர் திருவாக்கிற்கும் எதிர்மறை இலக்கணி லாகி யிருந்து, விதிப்படி சரணமடைந்து, வணங்கி இணங்கி ஜீவகாருண்ணியம், பாசவைராக்கியம், பிரம்மஞானம், சற்குண ஸம்பன்னத்துவம் இவைகளாற் பொலிந்து, விவர்த்த மூன்றுந் தெரிந்து பிரபஞ்ச வொடுக்கத்தைச் செவ்வனே உள்ளபடி அறிந்து அறிவு செறிந்தவனே "நாஞஜீவ வாதக் கட்டளை'' என்னும் நனியுறு நூலை நானிலந் தன்னில் நாதன் தாள் வாழ்த்தி அறிவதற்கு அருகிய அதிகாரியாவான் எனத் திருவாய்மலர்ந்தருளினர்.

சிவமயம்

நாநாசீவவாதக்கட்டளை

விருத்தியுரை

[உட்பொருள் அமைப்பு]

'நாநாசீவவாதக்கட்டளை' என்னும் இந்நூலினுள் இலை மறை காய்மறைபோல் ஆங்கு மறைந்து புலனும் விசேஷ அர்த்தப் பொழில் யாதெனில், வேதத்திலுள்ள வாக்கியங்களெல்லாம் மூன்று பிரிவினையுடையதாக விருக்கும். அவை: விதிவாக்கியம், நிஷேதவாக்கியம், சித்தார்த்த போதகவாக்கியமென்பனவாம். விதி நிஷேதவாக்கிய சூனியமாய்ப் பிரமாத்தும வைக்கியப் பொருள் மாத்திரத்தைப் போதிக்கும் வாக்கியம் சித்தார்த்த போதகவாக்கியமாகும். (பெறப்பட்டுள்ள பொருளைப் போதிக்கும் வாக்கியம்) இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் என்னும் நான்கு வேதங்களிலும் கிரமத்தில் நான்குண்டு. அவை:—பிரஞ்ஞானம் பிரமம், அகம் பிரம்மாஸ்மி, தத்துவமஸி, அயமாத்மாப் பிரமம் என்பனவாம். இந்நான்கனுள் தத்துவமசி என்பது உபதேசவாக்கியம் ஏனைய அனுபவவாக்கியம். தத்துவமசி என்பது உபதேச வாக்கியம். இதுவே ஏனையவற்றுள் தலை சிறந்தது. அத் தத்துவமசி என்னும் வாக்கியம் சாமவேதத்தின் சாங்தோக்கிய உபநிஷத்திலுள்ள மகாவாக்கியம். அது தத் + துவம் + அசி என மூன்றுவகையாய்ப் பிரிக்கப்பட்டு, அதனைச் சாங்தோக்கிய

உபநிஷத்தில் உத்தாலகமுனிவர் தமது புத்திரனுகிய சுவேத கேதுவிற்கு ஜகத்தை யுண்டுபண்ணும் ஈசனைக்காட்டித் தத்துவமசி (அதுநீ) என்று போதித்தது, தத் என்பது, சர்வ சக்திமானும், சர்வஞ்ஞனும், விபுவும், சுதந்திரனும், பரோட் சனும், மாயையும், பந்தமோக்ஷ மில்லாதவனுமாய ஈசன். துவம் - அற்பசக்திமானும், அற்பஞ்ஞனும், பரிசின்னனும், அநீசனும், கர்மாதீனனும், அவித்தியா மோகிதனும், பந்த மோக்ஷமுடையவனும் பிரத்தியக்ஷனுமாய சீவன். இங்குத் தத்துவமசி (அது நீயாயிருக்கிருய்) என்பது பொருள். தத் + த்வம் + அஸி = அது நீயாய் இருக்கிருய். இதனையே உட்பொருளாகக்கொண்டு இந்நூல் விரிக்கப்பட்டிருப்பது.

ஆயின், இந்நூலுக்கு நாநாஜீவவாதக்கட்டளை எனப்பெயர் எழுந்துள்ள காரணமென்னையோ வெனில், நாநாஜீவவாதம் = பலவித ஜீவன்களைக் குறித்துஎழுந்த வாதங்கள் பொலிவத ஞய் அஃது காரணத்தாற் போந்த பெயராயிற்று. வாதம் = வாதித்தல்; சொற்போர் நிகழ்த்தல். இந்நூலினுள், ஏக ஜீவ வாதம், பிம்பப் பிரதிபிம்ப வாதம், ஆபாச வாதம், அவச்சேத வாதம், அசாத வாதம், சிருஷ்டி திருஷ்டி வாதம், திருஷ்டி சிருஷ்டி வாதம், நாநாஜீவவாதம் என்னும் இருநான்கு வாதங் களை மாத்திரம் சமயவாற்றுன் புகுத்தி எடுத்தாண்டுள்ளார். இவ்வாதங்கள் ஒவ்வொன்றும் வேதாந்த பரிபாஷாஞான முடையார்க்கே தெற்றெனப் புலனுவதென வறிக.

ஈண்டு கூறிய வாதங்கள் இன்னின்ன இத்தன்மைத் தென்ன விரிப்பாம்.

ஏகஜீவவாத மென்பது யாதோவெனில்:—இந்தச் சராசர வுலகமெல்லாம் ஒரு சீவனது கற்பனையேயாம். அஃது எவ்வா றென்றால், சொற்பனத்தில் காணப்பட்ட சாாசரப் பிரபஞ்ச மெல்லாம் சொற்பனத்தின்கண் கண்டபுருஷனை அல்லாமல் வேறொரு புருஷனால் எங்ஙனங் கற்பிக்கப்பட வில்லையோ அதுவேபோல சாக்கிரத்திலுள்ள சராசரமான உலகமெல்லாம் ஒரு ஜீவனுடைய கற்பனையே என்று வாதிப்பது.

பிம்ப பிரதிபிம்ப வாதம்:—பிம்பத்தை அல்லாமல் ஆரோபமே இல்லையெனக் கூறுதலாகிய வாதம். இதனை, பிம்பப் பிரதிபிம்பங்களுக்கு கைக்கிய முண்டென்னும் வாக்கியம் போல்வதென்றுங் கூறுவர். ஜீவன் பிரதிபிம்பமும் பிரஹ்மம் பிம்பமுமாகாது கடாகாசம் மகாகாசம் போல்வதா யிருத்தலின் அவ்விரண்டற்கும் சுபாவ சித்தமாயுள்ள ஐக்கியம் பிரதிபிம் பத்துக்கும் பிம்பத்திற்குமுள்ள வைக்கியம் போல்வதன்றாம். கண்ணாடி முதலியவற்றில் முகத்தின் பிரதிபிம்பம் பாதிக்கப் பட்டு முகத்துடன் அபேதப்படுதல் போன்று அந்தக்கரணம் அல்லது அவித்தையில் பிரதிபிம்பித்துள்ள ஜீவன் பாதிக்கப் பட்டுக் கூடஸ்தனுடன் அபேதப்படுகிறா னென்றும், கடா காசம் மகாகாசத்துடன் ஐக்கியப்படுதல் போன்று தனது யதார்த்த வடிவாய கூடஸ்தன் பிரம்மத்துடன் ஐக்கியப் படுகின்றா னென்றும் இங்கு அறிதல் வேண்டும்.

ஆபாசவாத மென்பது:—போலித் தோற்றமாம். வியவ கார திசையில் அந்தக்கரண பிரதிபிம்ப போலித்தோற்ற ஜீவ சேதனம் அநேகமுண்டு. அவனுக்குச் சகலவிதமான விவ

காரமே அல்லது சாக்ஷியாகிய தனக்கில்லை என வாதிப்பது. ஆபாஸம்=பொய்த்தோற்றம்.

அவச்சேத வாதமென்பது:—ஒரு வஸ்து மற்றொன்றாக வேற்றுமை அடைவதுவேயாம். அந்தக்கரண அவச்சின்ன சேதனம் ஒன்றே ஒழிய இரண்டாவதில்லை. அந்தக்கரணம் அசைந்தாலும் ஜீவன் அசையாவிடில், அவ்வசையாத் தன்மையதே சிவமெனச் சொல்லுவது.

அஜாத வாதம்:—இல்லாத வஸ்துவைப் பற்றிப்பேசுதலாம். சொரூபமொன்றே எக்காலத்தும் உள வென்றும், ஜகத்தானது ஒருக்காலத்தும் உண்டாகவே இல்லை என்றும் பேசுவது. இவ்வாறு முடிந்த நிலையினை அறிந்தவர்கள் பரஞானியர்களே யாவர். மற்றவர்களுக்கு இதனுண்மை புலனாகாது. அப்பரஞானியர்களும் தமது அநுபவத்தினாலை அறிந்தவையாம்.

சிருஷ்டிஞான வாதம்:—ஜகத்தானது வெகுகாலமாகத்தான் இவ்வாறு தோற்றப்படுகின்றதே யன்றி வேறில்லை என்பது. சிருஷ்டி-அந்த ஆத்மாவிலிருந்து ஆகாய முதலாயின வுண்டாயின வென்பது. நான் ஒரே மண்கட்டியை அறிந்தேன். அதனால் அதிலிருந்து உண்டான சகலமும் மண்ணென்றே அறியப்படுகின்றன. விகாரமும் பெயரும் வெறும் வாய்ப்பேச்சுத்தான்; மண் தான் சத்தியமானது. இதனை,

"யதாஸோம்யை கேநம்ருத்பண்டேந
ஸர்வம்ம்ருண்மயம் விஜ்ஞாதம்ஸ்யா

த்வாசாரம் பரணம் விகாரோ நாமதே
யம் ம்ருத்தி கேத்யேவ ஸத்யம்"

எனச் சாந்தோக்கிய உபநிஷத்தில் காண்க. அன்றி, இது பிரம்மத்தினது இரண்டாவதற்ற தன்மையை ஆதரிக்கின்றன வாம்.

திருஷ்டி சிருஷ்டி வாதம்:—எப்போது ஞானம் உண்டாகின்றதோ அப்போதுதான் ஜகத்து உண்டாகின்றது. அதற்கு முன்னர் அது இருக்கவில்லை என்பது ஒரு சாரார் வாதமாம். ஏனெனில், ஞானமுண்டாய விடத்தே உலகை அறியுந் திறமுண்டாயினமை பற்றி ஞானமில்லையேல் ஜகத் இல்லை.

நாநாஜீவவாதம்:—பிரம்மத்திற்கும் பிரபஞ்சத்திற்கும் இடையில் அவாந்தரமாகத் தோன்றுகின்ற மாயை, அதனது குணம், அதனது காரியமான ஜீவ ஈசுவர பிரபஞ்சங்களென்னும் பற்பல சீவர்களைப்போல ஏகஸ்வரூபமாகி இருக்கின்ற பராபரவஸ்துவின் பான்மை நிலையினைத் தெரிவிக்கிறதற்குத் தக்கதொரு சோபானமாகி விளங்குவதால் நாநாஜீவவாத மாயிற்று. அன்றி, நானே கர்த்தா, நானே போக்தா, நானே ஞாதா என்கிற பற்பல விதமான ஜீவன்களின் வேறுபாடுகளையுண்டாக்கியும், நான் கர்த்தாவன்று, நான் போக்தாவன்று, நான் அசங்கன், நான் சின்மாத்திரன், என்கிற தத்துவ ஞானங்களாலே வாதம் புரிந்து ஏகரூபமான வஸ்துவாக இருக்கின்ற பராபரத்தினைத் தெரிவிப்பதற்கு ஒரு சிறந்தபடியாக இருப்பதனாலேயும் நாநாஜீவவாதம் என்றதுமாம்.

விதிமுக விசேஷணம்

சுத்தம்:—ஒருவிதமான கலப்புமில்லாத தெள்ளிய பால் போலவும், தெய்வமருந்து போலவும் இருந்து, மாயை அதின் குணஸமூகம், அதன் செயலாகிய ஜீவ ஈசுவர பிரபஞ்சத்துக்கெல்லாம் கலந்தும் கலவாமலும் இருக்கின்ற முப்பத்தைந்து தத்துவங்களுக்குள்ள அசுத்தங்கள் ஒரு சிறிதும் இல்லாமல் இருத்தலாகும்; அன்றி, சாதி வருணாச்சிரமாதியவற்றுல் தொடக்குற்ற சீவன், கிருபை அவதாரம் முதலியவற்றுல் தொடக்குற்ற ஈசுவரன், ஜீவசம்பந்தத்தால் அசுத்தமுற்ற பூதங்கள் ஆகிய இவற்றுடன் கூடியிருப்பினும் தெள்ளிய ஆகாயம்போன்று தான் ஓரசுத்தமுமின்றி யிருத்தலின் சுத்தமென்றதாம்.

அசுத்தம்:—தத்துவங்கள் முப்பத்தைந்துடன் கூடியது சீவதத்துவம். அதற்கு அசுத்தத்தைத் தருவது யாவையெனில், சாதியாலுண்டாயதும், வருணங்களாலுண்டாயதும், ஆச்சிரம பேதங்களினுலுண்டாயதுமாய தர்மாதர்மங்களும், அதனுல் அப்போதைக் கப்போதெழுந்த கிரியாவிசேஷலுப் தத்தாலுண்டாகிய பாவ புண்ணிய பெருக்கினுலும் சுறுக்கினுலும் சம்பவியாநின்ற பொன்னுலக வின்பமும், நரகதுக்கமும், எஞ்சியவற்று லெழுந்த பந்தங்களினுல் உண்டாகிய அனந்த கோடி பிறப்பில் தொடக்குண்டு அலையும் அவதிகளாம். இவையே சீவன்களுக்கு அசுத்தமாவன. ஜாதியாவது:—வேறுபட்ட தேசங்களால் பிரிவுண்டு கிடத்தலாயது. வர்ண மாவது:—தொழிலடியாகப் பிறந்ததென் றெண்ணுமல் நால்

வகையதெனப் பிரிவுபட்ட வகைபது. ஆச்சிரமமென்பது:—அவ்வருணுச்சிரம வகையிற் பிரிவுண்ட பிரம்மசரியம், வானப்பிரஸ்தம், கிருகஸ்தம், சந்நியாசி ஆகியவை.

ஈசுவரனுக்கு அசுத்தம்:—முன்னிரண்டாவதில் கூறியதல்லாமல் மற்றுங் கூறுவாருமுண்டு; அவை, அவன் பஞ்சகிருத்திய நடனஞ் செய்வதும், தனது தோற்றத்திற்குப் பொய்யான மாயையே காரணமாகப் பெற்றிருப்பதும், அதிஷ்டான ஆசிரய ஆபாசாதிகளின் சங்காதமே தனக்கொரு சொரூபமாகத் தாங்கியிருத்தலும், சிருஷ்டியாதிகளை ஒரு காரியமாகவும், பிரஹ்ம ஐக்கிய ஞானத்தால் மாயை கெடுகையில் தானும் லயமாதலே எல்லையாகவும், பிரமவிஷ்ணுருத்ராதி ஸ்வரூபமாகத்தானே ஆவிர்ப்பவித்து நிற்றலும் ஆவன வெல்லாம் அத் துரியாதீதப் பொருளுக்குற்ற வசுதத தன்மையாம்.

மாயைக்கசுத்தம்:—நித்தியமாய், ஒன்றாய்த் தன்னுடைய காரியங்களை வியாபித்திருப்பதாய், அசுத்தரூபமாய், தன்மத்திற்கு இருப்பிடமாய், அசுத்தமாய், சகலர், பிரளயாகலர் என்னும் இருவகை ஆத்மாக்களுக்கும் பொதுவாய், பிரளயத்திலே தேகாதிகள் அற்றிருக்கிற ஆத்மாக்களுக்குச் சிருஷ்டி காலத்திலே கலாதி தத்துவங்கள், தூலசூக்கும தேக முதலானவைகள் உண்டாகிறதற்கு இருப்பிடமாய், சிவனுக்குப் பரிக்கிற சத்தியுமாய் இருப்பதாம்.

அவித்தைக்கு அசுத்தம்:—பிறிதொன்றின் தன்மையையும் உள்ளபடி அறிந்து கொள்ளாமையும், அறியாமையும், அசுத்த

வாசனைக்களுக் கிருப்பிடமாயும், அதிஷ்டானத்தை மறைத்துக் கிடத்தலாயும், தத்துவக்கியானாதிகளினாலே தலையெடாமல் அழிதலுமாயவைகளே இதற்கு அசுத்தமாகும்.

தூலசரீரத்துக்கு அசுத்தம்:—இது பஞ்சபூதங்களுடைய புணர்ச்சியினாலே ஏற்படுத்தப்பட்டதாய்ச் சுகதுக்கங்களுக்கு இருப்பிடமாய் அநுபவிக்குந் தன்மையது. இச்சரீரத்திற்கு வாதபித்த சிலேஷ்மாதிகளினாலும், ஒன்பது வாயல்களினாலும், ரோமத்துவாரங்களினாலும், ஷட்பாவாதிகளினாலும் உண்டாகின்ற துன்பங்களாம்.

சூக்ஷ்மசரீரத்திற்கு அசுத்தம்:—ஞானேந்திரிய கருமேந்திரியங்கள் பத்தாலும், பஞ்சபிராணன்களாலும், மனம், புத்தி ஆகிய இவைகளினாலே தோன்றி இராகத் துவேஷாதிகளின் வாய்ப்பட்டு, பித்து மலடு ஊமை செவிடு பின்ன மித்தியாதிகளினாலே அசுத்தமடைந்து இருத்தலாம்.

இங்ஙனம் சூட்சும தேகத்தினிடத்தி லுண்டாகிய வசுத்தத்திற்கு ஆதிகாரணமாக நிற்பது இராகத்துவேஷாதிகளாகையால், அவைகளுள், ராகமென்பது—பரஸ்திரீகமனம் பண்ணவேண்டு மென்று விகற்பித்து வருகிற சித்தவிருத்திற்கு இடந்தந்து நிற்றல். துவேஷமென்பது—தனக்காராகிலும் அபகாரம் பண்ணினால் அவர்கள்மேல் விரோதத்தை எண்ணி அதற்குப் பிரதி அபகாரம் பண்ணவேணுமென்று விகற்பித்து வருகிற சித்தவிருத்திக்கு இடந்தருவது. காமமாவது—கிரகம்,கிராமம், க்ஷேத்திரம், தனம், தான்னியங்களை மேன்மேலும் சம்பாதிக்க வேண்டுமென்று விகற்பித்து வருகிற

சித்தவிருத்திக்கு இடந்தருவது. குரோதமாவது—தன் பொருளை யாராகிலும் அழித்தால் அவர்கள் பேரில் கோபித்து விகற்பித்துவருகிற சித்தவிருத்திக்கு இடந்தருவது. உலோபமாவது—தான் பெற்றுள்ள பொருளில் யாராவது ஒரு காசு கேட்டால் அரைக்காசு மில்லையென்று விகற்பித்து வருகிற சித்த விருத்திக்கு இடந்தருவது. மோகமாவது—தான் சம்பாதித்த பதார்த்தத்தின்மேல் பிரியமாகிய ஆசாபாசங்களைக் கொண்டு விகற்பித்து வருகிற சித்த விருத்திக்கு இடந்தரும். மதமாவது—தன்மிகுதியாலே கிர்த்யா கிர்த்யங் தெரியாமல் யாரையும் அலக்ஷியமாக இகழ்வு செய்து விகற்பித்து வருகிற சித்தவிருத்திக்கு இடந்தருவது. மாற்சரியமாவது—யாராகிலும் தன்னிலும் அதிகமாக மேம்பட்டிருந்தால் அது பொறுமல் விகற்பித்து வருகிற சித்தவிருத்திக்கு இடந்தருவது. இரட்சியமாவது—தனக்கு வந்த துக்கம் அந்நியருக்கும் வாலாகாதோ என்று விகற்பித்து வருகிற சித்தவிருத்திக்கு இடந்தருவது. அசூயையாவது—தனக்கு வந்த சுகம் இதரர்களுக்கும் வாலாகுமோவென்று விகற்பித்து வருகிற சித்தவிருத்திக்கு இடந்தருவது. டம்பமாவது—தான் செய்கிற புண்ணிய கருமங்களைப் பலரும் பார்த்து நல்லதென மெச்சிக் கொள்ள வேண்டுமென்று விகற்பித்து வருகிற சித்தவிருத்திக்கு இடந்தருவது. தார்ப்பமாவது—தானே சுத்த வீரன் யாரும் தனக்கு நிகரில்லை யென்று விகற்பித்து வருகிற சித்தவிருத்திக்கு இடந்தருவது. ஆங்காரம்—ஏண்டா என்னை அறியாயோ, நீதானோ என்னைச் சிருஷ்டிக்கிறவன், நான்

பிடித்தபிடி விடுகிறவனு யென்று விகற்பித்து வருகிற சித்த விருத்திக்கு இடந்தருவதுவுமாம்.

இவைகளே ஜனனமரண துக்கத்தைக் தருவதற்கு முதற் காரணமானவை. இவர்கள் பதின்மூவர்களும் மிக்க வன்மை யுடையவர்கள். ஒவ்வொரு காரியத்தினுலே ஒவ்வொருவன் புத்திர மித்திர களத்திராதிகளோடு இகபர சவுக்கியங்களேயும் இழந்துபோனபோதிலும் இப்படிப் பதின்மூன்று விஷயங்க ளாய் மாறுபட்டு வருகிற சித்தவிருத்திகள் அனேத்தையும் ஸர்வம் பெற்றவரிடத்தில் அனுபவமாயிருக்கிற படியாலும், இவைகளே விபரீதங்களுக்குக் காரணமாகுமென்று அறிந்து சற்சகவாசத்தினுலே சற்குருவால் கிருபைசெய்யப்பட்ட ஞான மாகிய விவேகமென்னும் வாளினுலே இவைகளேச் சின்னு பின்னப்படுத்தி அழித்து நிவர்த்தித்தல் வேண்டும். இவை களேக்கொண் டொழிந்தவர்கள் முறையே இராவணன், இரணி யன், நரகாசுரன், பகாசுரன், துரியோதனன், தசாதமகா ராஜன், கார்த்தவீரியார்ச்சுனன், சிசுபால தந்தவக்கிரன், அரு ணுட்சன், பவுண்டரீக வாசுதேவன், அம்பரீஷன், சதகண்ட ராவணன், மதுகைடவன் இவர்களேயாம்.

இவைகளே அல்லாமல் பஞ்சபூதங்களும் அசுத்தத் தன்மை யுடையனவாகும். எப்படியெனில், பிரதிவியானது மலமூத்திராதிகளுக்கும் உவர் மண்ணுக்கும் ஐந்திணைக் கருப்பொரு ளுண்டாவதற்கிடமாக விருப்பதாலும் அப்புவி லொடுங்குவதுமே சுத்தக் குறைவாகும்.

அப்புவிற்கோவெனில், அப்புவானது பாசியால் மூடப்பட்டு நிற்றலும், சேறுபொருந்தி யிருத்தலும், அலையாலும், திவலை, குமிழி, நுரை முதலியவைகளை வைத்துக்கொண்டு பிறரைத் தன்னில் இழுத்தல் முதலியனவற்றைக் கொண்டு அக்கினியிற் சுருங்குதலை யுடைமையுமாம்.

தேயுவிற்கு:—சுடர்விடுதல், புகைவிடுதல், வாயுவினுல் ஒடுங்கல் முதலியனவாம்.

வாயுவுக்கு:—இயக்கம், துர்க்கந்தம், நற்கந்தம், புழுதி படல நிறைவு, ஆகாயத்தில் ஒடுங்கல் முதலியவானவைகளே.

ஆகாயத்திற்கு:—இடங்கொடுத்தல், இடி, மின்னல், மேகப்படலம், குவிதல், விக்ஷேபசத்தியில் ஒடுங்கல் முதலியவைகளாம்.

இவைகளானவற்றைத் தனக்கிடமாகவைத்து விளங்கும் ஸர்வசாக்ஷியாயுமுள்ள பிரஹ்மமானது இவைகளோடு சம்பந்தத்தைப் பெற்றிருந்தும், அவைகளுக்குள் அசுத்தவகைகள் விவர்த்தம் ரஜ்ஜுவிற் சர்ப்பம்போல முப்பத்தாறுவது தத்துவமாகிய பிரமமே சுத்தமாவதாகும்.

பிரமம்

நித்தியமாய், பூரணமாய், ஏகமாய், பரமார்த்தமாய், பரப்பிரமமாய், நிதானமாய், சாந்தமாய், சத்தியமாய், கேவலமாய், துரியமாய், சமமாய், திருக்குவாய், கூடஸ்தனுய், சாட்சியாய், போதமாய், சுத்தமாய், இலக்ஷியமாய், சநாதனமாய், சிவனுய், தத்துவமாய், விண்ணுய், சோதியாய், ஆன்மாவாய், முத்த

மாய், விபுவாய், சூக்குமமாய், அசலமாய், நிரஞ்சனமாய், அமிர்தமாய், அப்பிரமேயமாய், விமலமாய், வசனுதீதமாய், அஜடமாய், அநாமயமாய், அசங்கமாய், அதுலமாய், நிரந்தர மாய், அகோசரமாய், அகண்டமாய், அஜமாய், அநந்தமாய், அவிநாசியாய், நிர்க்குணனுய், நிஷ்களமாய், நிராமயமாய், அனுதியாய், அசரீரியாய், அவிகாரியாய், அத்துவிதமாய், விதிமுக மறைமுகப் பொருளாகி விளங்குதன்றியும், காரணப்பெயர் களையும் முறையே சிவமெனவும், சங்கரனெனவும், நீலகண்ட னெனவும், முக்கணனெனவும், சந்திரசூடாதர னெனவும், பகவனெனவும், கபர்த்தி யெனவும், கங்காதர னெனவும், திரியம்பகனெனவும், திரிபுரமெரித்தவனெனவும், காலனைக் காய்ந்தோனெனவும், கிரீசனெனவும், கௌரீசனெனவும், மிருகதனெனவும், பசுபதி யெனவும், கங்காள னெனவும், சாம்பன் எனவும், காலபைரவனெனவும் பற்பல திருநாமங்க ளோடு பொலிந்து எல்லாருக்கும் மங்களத்தை இயல்பாகவே செய்துகொண்டு அல்லும் பகலும் அடியார்களின் ரக்ஷணமே தமக்குற்ற பணியாகப்பூண்டு, தன்னை அடைந்தாரைத் தன் போல வைத்துகக்குந் தன்மையுடையவனுக விளங்குபவன்.

இவனே வேறுவேறு காரணவகையால் சச்சிதானந்த பரமாய் நின்று, நரசமூகத்தைக் காத்தலினுலே நாராயணசப்த வாசகனுயும், அண்டினவரைக் காத்து வருவதால் அச்சுதனுயும், பசுக்களைக் காத்தமையால் கோவிந்தனுயும், நாபிகமலத்தில் நான்முகனைப் பெற்றெடுத்தமையினுலே பத்மநாபனுயும், இலக்குமிக்குத் தலைவனுக விருப்பதனுலே மாதவனுயும், மது

வென்னும் அசுரனைக் கொன்றமையாலே மதுசூதனனும், கேசி யென்னும் அசுரனைக் கொன்றமையால் கேசவனும், எல்லாமழிந்த விடத்தும் தானழியாத தன்மையாலும் எங்கும் வியாபித்திருப்பதினாலே அனந்த னென்றும், மாவலியில் மூவடிமண் வேண்டிச் சென்றமையால் வாமனனும், இந்திரிய நிக்கிரகஞ் செய்தமையால் இருஷீகேசவ னென்றும், இராவண வதத்தின் பொருட்டு ஸ்ரீராமனாகவும், மூவுலகளந்த மூர்த்தி யானபடியால் திரிவிக்கிரம னெனவும், கருமை நிறத்தவனாகை யால் கிருஷ்ணனெனவும், பிரஜைகளைத் தன்னுடைமை யெனக் காத்தலால் ஜனார்த்தன னெனவும், மச்ச கூர்ம வராக வவதாரங்களை யெடுத்து ஒவ்வொரு நன்மைகளைப் புரிந்தமையான் முறையே மச்சிய கூர்ம வராக னெனவும், இடையர் கூட்டத்தே ஒருவனாகித் துலங்கிய காலத்தே அசோதையால் கயிறுகொண்டு கட்டப்பட்டவனாகையால் தாமோதர னெனவும், தாமரையன்ன தடங்கண்களைப்பெற்று விளங்குவதால் பங்கஜ நேத்திர னெனவும், இரணியனைக் கொல்ல இருதிணையொரு கூற்றுருவம் செய்தமையால் நரசிங்க னெனவும், கலியுகமுடிவில் துஷ்டர்களைக் கொன்று சிஷ்டர் களைக்காக்க வருவதைக் கற்கி யெனவும் பல்வகைய திருநாமங் களைப்பூண்டு விஷ்ணுவென்னும் திருநாமத்துடனே துலங்கி னான். இத்தன்மையோனைப் பிரமவாதிகள் பிரமன் எனவும், கர்மவாதிகள் இந்திரனெனவும், தத்துவவாதிகள் அச்சுத னெனவும், பிரகிருதி புருஷவாதிகள் பரமனென்றும், பக்தி வைராக்கியவாதிகள் இவனே பகவான்; இவனே விராட் புருஷன், இவனே விபுயெனவும் பற்பல வகைகளில் பற்பல

காரணங்கொண்டு சமயவாற்றலான் பற்பல வகையான திருநாமங்களைப் புனைந்து பரிந்து அழைத்தனர்.

பெரிதிற் பெரிதென முடிவுகாட்டிய பான்மை

இவ்வுலகின்கண் வாழும் மாந்தர்களுக்கு இயல்பாக வெழும் மனப்பான்மையாலே ஒன்றைக்கண்டு ஒன்று பெரிதென்றும், மற்றொன்றைக்கண்டு அதனினும் இது சிறிதெனவும் கூறுமியற்கையில், ஒரு மாளிகைகண்டு, அரண்மனை பெரிதெனவும், அரண்மனை கண்டு கிராமம் பெரிதெனவும், கிராமங்கண்டு பட்டணம் பெரிதெனவும், பட்டணங்கண்டு தேசம் பெரிதெனவும், தேசங்கண்டு கண்டம் பெரிதெனவும், கண்டங்கண்டு தீவு பெரிதெனவும், தீவுகண்டு கடல்களும் மலைகளும் எல்லாவுலகும், சந்திராதித்தரும் ஒருங்குந் தன்மை மிகவும் பெரியதொரு அண்டமே பெரிதெனவும், இதனினும் ஆயிரத்தெட்டண்டங்களடங்கிய புவனமே பெரியதெனவும், இவ்வகை இருநூற்று இருபத்துநான்கு புவனங்களைத் தனக்குள் அடக்கிக்கொண்டுள்ள அகிலாண்டமே பெரியதிற் பெரியதெனவும், இவைகளில் அகிலாண்டம் கோடிகொண்ட பிரமாண்டமே மிகவும் பெரிதெனவும், அதனினும் எல்லையற்றிலங்கும் ஒன்பதுகோடி பிரமாண்டத்தைத் தனக்குள் புரைபோற்கொண்டு துலங்கும் பிரமமே பெரிதெனவும், அதனினும் பிறவிமுதல் துணைக்காரணமாயிருந்து முன்னர் விஷய ஞானத்தை விளக்கிப் பின்னர் ஞானசாதனமாயிருந்து சொரூபஞானத்தையும் விளக்கி வைத்து, அதுவும் அந்தச்

சொரூபஞானத்தில் பிணத்தைச்சுடும் தடியைப்போல லயமாகி விடும் விட்சேபசத்தியானதுவே பெரிதெனவும், அதனினும், சிருஷ்டி, திதி, சங்காரம், திரோபவம், அனுக்கிரகமென்னும் பஞ்சகிருத்தியங்களை நடத்துவதற்குத் துணையாகவும், அக்கினிக்கு வெப்பம்போலச் சிவனைப் பிரிவற்றிருந்து, நித்தியமாய், ஒன்ருய் எல்லாவற்றையும் வியாபிக்கிற ரூபமாய், மகிமாரூபியாய், ஐசுவரியரூபமாய், பதார்த்தங்களைப் பார்க்குஞ் ஞானரூபியாய், தன்மரூபியாய்ப் பொலியும் சத்தியே காரிய பேதத்தாலே பலவகையாய் விரிந்துள்ளமையாலே பெரியதிற் பெரியதுமாமெனவும், இதனினும் மாயையின் தோற்றமாகிய கலையிலே மூலப்பிரகிருதி அவியத்தகுண வடிவாய்த்தோன்றித் தன்கண் நின்றும் வியத்தமாய் தரப்படும் குணத்துவம் தோன்றி, அவைகள் ஒவ்வொன்றும் முத்திரப்பட்டு ஒன்பது வகையாய் விரிந்து, மனம் புத்தி அகங்காரம் முதலியவற்றிற்கும், ஞானேந்திரிய கன்மேந்திரியங்கட்கும், தன்மாத்திரைகட்கும் பூதங்களுக்கும் தோற்றமிடமாகிநிற்றலின் அம்மாயையினும் பெரிதாகிய தெனவுஞ் சொல்லாநிற்பர்.

இவ்வாறு ஒன்றன்பின் ஒன்ருய்ப் பெரியதிற் பெரியது என அடுக்கிச் சொல்லுவதில் முடிவு காணுமையால், அதற்கொரு எல்லையாண்டுளதோ வென ஆராயின், மேலே சொல்லிய மூலப்பிரகிருதியும் பூதாகாசத்தில் ஏகதேசத்தில் உலவி வருகின்ற காற்றினையொத்தும், விரிந்து பரந்த கடலினிடத்துலவாநின்ற பற்பலவாய அலையின் திரளையொத்தும், ஒரு ஆகாயத்தில் ஏதோ ஒருபகுதியினிடத்தில் சிறியதொருபகுதி

யாய் நின்று காணலுறும் குறியான மறுவினையொத்தும், சிதாகாசமான பரப்பிரம்மத்தின் இடத்தில் ஒரு அணுத் தன்மை பூண்டு காண்கின்றமையால் வேதாந்த விசாரமுள்ள விஞ்ஞானிகள் யாவற்றினும் பெரியது பிரஹ்மஸ்வரூபமே பெரிதென்பர். இதனை,

"பூதங்க ளைந்தாகிப் புலனாகிப் பொருளாகிப்
பேதங்க ளனைத்துமாய்ப் பேதமிலாப் பெருமையனைக்
கேதங்கள் கெடுத்தாண்ட கிளரொளியை மாகதத்தை
வேதங்க டொழுதேத்தும் விளங்குதில்லை கண்டேனே"

என்ற திருவாசகத்தும்,

"தானே திசையொடு தேவருமாய் நிற்கும்
தானே யுடலுயிர் தத்துவமாய் நிற்கும்
தானே கடன்மலை யாதியுமாய் நிற்கும்
தானே யுலகிற் றலைவனு மாமே"

என்கிற திருமந்திரத்தாலும்,

"மண்ணாகி விண்ணாகி மலையுமாகி வயிரமு
மாணிக்கந் தானேயாகிக்
கண்ணாகிக் கண்ணுக்கோர் மணியுமாகிக் கலையாகிக்
கலைஞானந் தானேயாகிப்
பெண்ணாகிப் பெண்ணுக்கோ ராணுமாகிப் பிரளயத்
துக்கப்பாலோ ரண்டமாகி
எண்ணாகி யெண்ணுக் கோரெழுத்து மாகியெழுஞ்
சுடராயெம் மடிகணின்றவாறே" என்றும்,

"மாலாகி நான்முகனாய் மாபூதமாய் மருக்கமா
யருக்கமாய் மகிழ்வுமாகிப்

பாலாகி யெண்டிசைக்கு மெல்லையாகிப் பரப்பாகிப்
 பரலோகந் தானேயாகிப்
பூலோக புவலோக சுவலோகமாய்ப் பூதங்களாய்ப்
 புராணன் ருனேயாகி
யேலாதன வெலாமேல்விப் பானுமெழுஞ் சுடரா
 யெம்மடிக ணின்றவாறே''

எனத் திருநாவுக்கரசு சுவாமிகள் கூறிய தேவாரங்களினுலும் அறிக.

இத்துணைய வியாபகத்தோடு கூடிய பொருள் நித்திய மென்பது எக்காரணத்தாலோ வென்ருல், அஃது-அழிவுபட்ட பாவமாகிய பின்னின்மையும், அந்நியோந்நியா பாவமாகிய ஒன்றிலொன்மையும், அத்தியந்தா பாவமாகிய முழுதுமின்மை யும், பிராகபாவமாகி, முன்னின்மை காரணமாக விருந்து தனது பிரதியோகி உண்டாகியபோது நாசமடையு மென்றும், தொம்ஸாவமாகிய உற்பத்தி யுடையதாய் நாசமின்றி இருக் கும் என்றும் கூறுகின்ற அபவாதிகளுக்கு அப்புறப்பட்ட தாகி நிற்கின்றமையால் நித்தமென்றனர். இந்நான்கினுள், அத்தியந்தா பாவத்தையும், அந்நியோந்நியா பாவத்தையும் தார்க்கிகர் நித்தியமாக விருக்குமென்பர்.

பிராக பாவம்:—படைப்பதற்கு முன்னம் உலகமில்லை. அது எவ்விதமென்னில், மண்ணுண்டாவதற்கு முன்னர் கடமில்லை என்பது போன்றதாம்.

தொம்ஸா பாவம்:—உண்டான பிரபஞ்சம் நாசமின்றி யிருத்தலென்றும், உண்டான பிரபஞ்சமழிந்த பின்னர் இல்லை எனவுமாம். உண்டான கடம் உடைந்தபின்பு இல்லை.

அந்நியோந்நியா பாவம்:—'கடம்படமன்று' என்புழிப் படத்தின்பேதம் கடத்திலிருக்கிறது. கடம் அழிந்தபோது அக்கடத்தில் இருந்த படத்தின் பேதமும் அழிந்து விடுதலின் படத்தின் பேதம் எங்ஙனம் நித்தியமாகும்? பேதத்தையே அந்நியோந்யா பாவமென்பர். இக்காரணத்தால் கடத்தில் படமும் படத்தில் கடமும் ஒற்றுமையாகக் காணலுறினும், அவை ஒன்றைவிட்டொன்று பிரியும்போது கடம் வேறு படம் வேறாகக் காணப்படுகிறதோ அதுவேபோல் பிரமத்தின்கண் பிரபஞ்சமும், பிரபஞ்சத்தில் பிரமமும் ஒற்றுமையாய்க் காணப்படினும் பிரபஞ்சத்திற்குள்ளதான அனுர்தமாகிய சூக்குமத் தன்மையும் அறியாமையாகிய ஜடத்வ துக்கலக்ஷணத்தையும் ஆராய்ந்து அறியுங்காலத்தில் பிரமம் வேறு பிரபஞ்சம் வேறு என்னும் அந்நியோந்யா பாவம் விளங்குதல் காண்க.

அத்தியந்தா பாவம்:—தீயின்கண் சீதளம் யாண்டும் இன்று, என்புழித்தீயின்கண் சீதளம் அத்தியந்தா பாவமாக யிருக்கிறது. தீயழிந்தபோது அத்தீயிலிருந்த சீதளத்தின் முழுதுமின்மையும் அழிந்து விடுதலின், அத்தியந்தாபாவமும் நித்தியமென்று சொல்லப்படா வாகையால், திரிகாலத்திலும் ஜகத்து என்பது வாதிக்கப்பட்டுப் பின்னர், அஃது பிரபஞ்சம் அசத்தாகியபடியினாலே ஈண்டு கூறிய அத்தியந்தா பாவம் பொருந்துமென்க.

இந்நான்கு அபாவமும் இல்லாமல் இருக்கக்கூடிய வஸ்துவே நித்திய வஸ்து. பிரபஞ்சம் அநித்திய வஸ்து

என்பது தெரிவிக்க வென்க. இதனுல், பிரம்மம் நாசரகித மாயும் கிரியாரகிதமாயு மிருப்பதெனவும், உலகம் நாசசகித மாகவும் கிரியாசகிதமாகவும் உளது என்ற பொருள். ஆயின், நாசமுடையது நித்தியமாகா விட்டாலும் தொழிலையுடையது என் நித்தியமாகா தென்கிறவினு வெழுமாகையால், தொழிலை யுடைய வடிவுடைய பொருள்கள் எல்லாம் கண்ட பொருளா யிருத்தலின் அவையெல்லாம் பின் முன் மேல் கீழ் என் றுடக்கத்து அவயவங்களை யுடையனவாகும். அவயவங்களை யுடையன வெல்லாம், "காரிய மவயத்தாற் கண்டனங் கடாதி போல" என்றவாறு காரியங்களாம்.

உற்பத்தியின்றி இருந்து நாசத்தை அடைவதும் உற் பத்தியாகி நாசமடைவதும் அநித்தியமாம் என்று விசார சாகரத்தில் கூறியபடி முன்பு இல்லாது இருந்து பின்பு உண்டாவதுமாகிய காரியங்களும் நிலையற்ற பொருளென்றே கொள்ளுதல் வேண்டும். ஆகாயம் முதலியன தொழில் இல் லாதிருந்தும் நாசமடைவதா யிருத்தலின் அவையும் நிலையில் லாத பொருளென்றே கொள்ளுதல் வேண்டும்.

சுத்தம்:—மலமுத்திராதி மலம் பொருந்திய பிருதிவி, கலங்கல் புகை புழுதி முதலிய மலம்பொருந்திய மற்றைய நான்கு பூதங்கள், கோழை சளி பித்தம் மலம் மூத்திரம் முதலிய மலமுடைய தூலதேகம் காசபடலங் காமக்குரோதம் முதலிய மலமுடைய சூக்கும தேகம், ஞானுஞ்ஞான மல முடைய ஜீவன், சிருஷ்டியாதி கிருத்திய மலமுடைய ஈசுவரன்,

ஆகிய இவற்றிற்கு விலக்ஷணமாய் யாதொரு மலமுமில்லாமல் சிதாநந்த வடிவாய்ச் சுத்தமாக விருத்தலாம்.

புத்தம்:—மனம், புத்தி, சித்தம், அகங்காராதிகளாகிய அந்தக்கரணாதிகள் அறிவினைப் பெற்றும் பெறுதவைபோலத் தோன்றித் தோன்றி மின்னலையொத்து அழியாமல் என்றும் ஒரே படித்தாய்ப் பேரொளியோ டிருக்கின்ற தன்மை.

முத்தம்:—இயல்பாகவே சம்ஸாரபந்தம் விடுபட்டதாக விருத்தலின் பிரமம் முக்தமாம். முக்தல்-விடுபடுதல்.

சத்தியம்:—தத்துவக் கூட்டங்களைத் தத்தங் காரணங் களில் ஒடுக்கிக்கொண்டு சென்றால் காரண காரியங்களின்றி முடிவாய் நிற்றலின் பிரமம் சத்தியமாம். இங்கே கூறிய வகையில் ஈண்டு ஐயம் நிகழ்தல் இயல்பு. ஆதலினால், யாது காரணமோ அது காரியமாம் என்னும் கட்டளைப்படி பிரமம் காரணமாயின் அது காரியமும் ஆதல் வேண்டும். யாது காரியமோ அது உண்மையில் பொய்யாகிய பொருளாமாதலின் பிரமமும் பொய்ப்பொருளாம். கயிற்றரவு என்னும் விவகாரத் தில் அரவு பொய்யென்று நிச்சயம் செய்தவிடத்து கயிறு காரண காரிய ரகிதமாய் நிற்றல்போன்று உலகம் பொய்யென்று நிச்சயித்த விடத்து பிரம்மம் காரண காரிய ரகிதமாகவே இருத்தலின் அதுவே மெய்ப்பொருளா மென்று அறிதல் வேண்டும்.

பரமானந்தம்:—நித்தியமாய் நிருபாதிகமாய் நிரதிசய மாகிய சுகசொரூபமாம். எந்தெந்தப் பொருளைக் கைவிட்டு

விடினும், ஆத்மாவைக் கைவிடாமல் அதினிடத்தில் மிகவும் பிரீதியுட னிருத்தல்.

பூரணம்:—நீரினுற் பூரிதமான குடம்போன்று பஞ்ச கோசங்கள் பூர்வ பூர்வம், உத்தரோத்தரங்களினுலே பூரிக்கப் பட்டுச் சீவனுலும் பூரிக்கப்பட் டிருப்பது. அக்கோசங்களாற் பூரிக்கப்பட்டுள்ள பஞ்சபூதங்களினுல் நிறையப்பட்டிருப்பது உலகு. அவ்வுலகில் எவ்விடத்தும் வியாபித்துள்ள மாயா விசிஷ்டனும் தன்னுல் வியாபிக்கப்பட்டுத் தான் பிறிதொன் ருல் பூரிக்கப்படாமல் இருத்தலின் பிரமம் பூரணமாம்.

அத்துவிதம்:—துவிதவடிவப் பிரபஞ்சம் சொப்பனம் போன்று கற்பிதமாக இருத்தலின் வாஸ்தவமன்று, பிரமம் துவிதமின்றியதா யிருத்தலின் அத்துவிதமாம். துவிதம்:— இரண்டு; அது இல்லாதது, அத்துவிதம். இதனை,

"சுருதியினு ளேகமே வாத்துவித மென்னுஞ்
சொற்கிடையு ளேகமெனுஞ் சொல்யதனுக் கயிக்க
மரிதிலுண ரேவவெனு மிடைச்சொற்குத் தேற்ற
மத்துவித மெனுமொழிக்குத் துவிதவிலக் காகக்
கருதுபொருள் வருதலினு லிம்முறையே மாயா
கற்பனைகள் கடந்துநிர வயமாகி யென்றுந்
திரிதலில்சின் மயமாகு மொருபிரமந் தனக்குத்
தெரித்தசுவ கதமுதலா யினமூன்று மிலையே"

என வேதாந்த சூளாமணி கூறுவது இங்கு அறியத்தக்கதாம். அத்துவித மென்பதன் பொருள் துவிதமின்றிய தென்பது. சிதையாத சித்தாந்தமாக இருக்கச் சிலர், "அத்துவிதமாவது

பேதப்பொருளிரண்டுந் தம்முள் அபேதமாதற்குரிய சம்பந்த விசேடம்" எனக் கூறியதும் அறிக.

விதிமுக மறைமுகமாகப் பிரம்மத்திற்கு வந்துள்ள பெயர்களில், அக்ஷரம், அவ்வியயம், நிராகாரம், நிர்விகாரம், அஜாதம், நிஷ்கிரியம் முதலியவாயவை பொருள்கண்டு தெளிக.

ஈண்டு மேலே சொல்லிய இலக்ஷணங்க ளெல்லாம் அமைந்துள்ளனவே பிரம்ம ஸ்வரூபமாகும்.

ஏகான்மவாத மதம்:—கடோபாதி வசத்தால் ஆகாசமானது இரண்டாய் நின்றாற் போலவும், பல பாத்திரத்திலுள்ள சலோபாதி வசத்தால் ஒரு சந்திரன் பலவாய்த் தோன்றினாற் போலவும், அகண்டபரிபூரணமாக விருக்கிற முதல்வன் தானே மாயாகாரியங்களாக விருக்கிற தேகோபாதிகள் தோறும் சீவபேதத்தினை அடைந்து பெத்த நீங்கி முத்தியின்கண் அந்தக் கடமும் பாத்திரங்களும், பின்னமாயுள்ள விற்கடாகாயமு மகாகாயமும் ஒன்றாய் நின்றாப் போலவும், மகத்துக்களை ஆச்சிரயித்து வேதாந்த சிரவணஞ் செய்து அதனால் முன்னுண்டான மாயோபாதி நீங்கிச் சீவனே பிரமமாயிருக்குமதாம்.

இவ்வாறு சொல்லுவது விரோதம். ஏனெனில், ஒரு பொருள் இரண்டாய்ப் பின்னொன்றும் என்னில் சீவம் பரம் இரண்டிற்கும் குணம் ஒன்றாக இருத்தல் வேண்டும். அன்றியும், இப்படியிருப்ப தொன்றிற்கு மாயோபாதிகளிலே நின்று

சுகதுக்கப்படவும் அவை நீங்குதற்கு மகத்துக்களைச் சேர்ந்து சேர்ந்து வேதாந்தம் கேட்கவும் வேண்டாம். அன்றியும் சாயுஜ்ய இன்பம் பெற்றாலும் பின்பு சனன முண்டாதல் வேண்டுமாதலால் அந்த ஏகான்மவாதம் வேண்டுவதின்று.

சிவாத்துவிதமதம்

அக்கினியினின்றும் பல பொறிகளும் புற்கமுந் தோன்றினாற்போல, அணுதியாயிருக்கிற முதல்வன்தானே பிரபஞ்ச காரணமாய்ச் சடசத்தியாயிருக்கிற மாயைகளையும், ஆன்மாக்களையும் பகுத்துத் தன்னிடத்தில் நின்றுந் தோன்றுவித்து அந்த மாயையினாலே பிரபஞ்சத்தைப் படைத்துச் சராசர பேதமான எண்பத்துநான்கு நூருயிரபேத யோனிகள் தோறும் நின்று விளையாடிப் பெத்த நீங்கின முத்தியின்கண் கன்மசமத்துவமும் சத்திநிபாதமு முண்டானவளவிற் சற்குருவை அடைந்து சாம்பவி தீக்ஷைபெற்றுக் குருபதேசத்தாலே ஜகத்தடங்களையுஞ் சிவமாக அறிந்து பேறும் இழவும் பெறுவானும் ஈவோனும் வேறில்லையென்று கருதிச் சீவனே சிவன், சிவனே சீவனென்று பேதா பேதங்கள் கொண்டிருக்கையே சைவசித்தாந்திகளின் கொள்கை. இதனை, ஐக்கிய வாதி:—அநாதியிலே ஆன்மாவும் முதல்வனும் வேருயிருந்து முத்தியிலே நீரில் நீரும், பாலிற் பாலும், நெய்யில் நெய்யும் கலந்தாற்போல ஒன்ருயிருக்கையாம் என்பர்.

ஈண்டு, ஆன்மாவும், முதல்வனும் ஏகீபவித்துத் தான் கெடாமல் நின்று பரமானந்தத்தினை அநுபவிக்கு முண்மையினை அறிதல் வேண்டுவதால், கருவிகளெல்லாம் கழன்ற

கேவலத்திலே ஆணவமலத்தினை ஆன்மா சென்று கூடாமல் ஆணவமும் ஆன்மாவினை வந்து பொருந்தாமல், ஆன்மா தான் கெடாமல் அந்த ஆணவத்தினை இதுவென்று சுட்டிக்காணு மல், ஆணவமும் ஆன்மாவும் ஒன்ருகாமல் இரண்டாகாமல் ஒன்றும் இரண்டும் இன்ருகாமல் இருந்த தன்மை போலாம். இதுவே, ஆன்மாவும் முதல்வனும் சாயுஜ்யத்தில் ஐக்கியமாகி நிற்கும் நிலைமை. இதனை,

"ஒன்றிரண்டாகி யொன்றி
னொருமையா மிருமையாகி
யொன்றி லொன்றழியு மொன்று
தென்னி னொன்ருகாதீயி
னென்றிரும் புறழி னின்ருமுயிரி
னைதொழிலும் வேண்டு
மொன்றி நின்றுணரு முண்மைக்
குவமையானவத் தோடொன்றே"

எனச் சிவப்பிரகாசத்திலும்,

"ஒன்ருது மொன்ரு திரண்டாலு மோசையெழா
தென்ருலு மொன்றிரண்டு மில்" எனவும்,

"தடலைப்போற் கூடியவை தானிகழா வேற்றின்பக்
கூடிலைநீ யேகமெனக் கொள்"

எனவும் திருவருட் பயனிலும் கண்டு தெளிக.

வேதாகமத்துணிபு இரண்டில்லை ஒன்று என்றது ஒரு வனே பதி இரண்டாவதாக ஒருவனில்லை என்பதேயாம். இதனை, "ஏகாகோ ருத்ரோ நத்விதீய" என்ற அதர்வசிரசோப நிஷத்திற் காண்க.

இவ்விதம் பரப்பிரம்மத்தின் தன்மையினை அறிந்து, பின்னர் அப் பிரம்மம் ஸர்வசாக்ஷியென்பது எக்காரணங் கொண்டெனில், பிரமம் சொரூபவடிவ ஞானத்தாலே சர்வ பிரபஞ்சத்தையும் மறைவில்லாமல் நேரே தொடக்கில்லாமல் அறிவதால் அப்பெயர் பூண்டதாகும். அன்றி, மகாவாக்கிய மாகிய தற்பதம் துவம்பதம் அசிபதம் ஆகிய மூன்று பதத் திற்குந் தானே சான்றாக நிற்கின்றபடியாலும், அதாவது, சீவனும், ஈசுவரனும், அயிக்கியமும், அவித்தையும், அதிஷ் டான சைதன்னியமும், சைதன்ய கற்பிதமான அபஞ்சீகிருத பூதகாரிய லிங்கசரீரமும், அதிற் பிரதிபிம்பித்த சிதாபாஸனும், சிதாபாசதர்மமான கிஞ்சிக்ஞத்வ கர்த்ருத்வ போக்த்ருத்வதாதி களுங் கூடிய ஜீவஸ்வரூபமென்று சொல்லப்படுவதும், மாயை யும், அதிஷ்டான சைதன்னியமும், அதிற் பிரதிபிம்பித்த ஈசுவரனும், ஈசுவரதர்மமான சர்வஞ்ஞத்வாதி குணங்களும் கூடி, ஈசுவரரூபமென்று சொல்லப்படுவதும், கூடஸ்தனே பிரமம், பிரமகூடஸ்தனென்று ஐயக்கியார்த்தமாய் அறிவது மாம்.

இதனைக் கைவல்லிய நவநீதத்தில், சீவ ஈசுவரர்கள் என்னும் தங்கள் நாமங்களினாலும், அண்ட பிண்டங்களா யிருக்கிற ஸ்தானங்களினாலும், சொல்லுதற்கரிய காரண காரியமாகிய உபாதிகளினாலும் சமஷ்டி வியஷ்டியாகிய தேகங் களினாலும், சர்வஞ்ஞத்துவம் கிஞ்சிஞ்சிஞ்யத்துவம் என்னும் ஞானத்தை அவர்கள் பாதாளமும் விண்ணுலகமும் போலும் நாநாவிதத்தினாலும் பேதமுற்று நிற்பார்கள். ஆதலால்,

இத்தன்மையுள்ள சீவேஸ்வரர்களுக்கு எப்போதும் கலத்தல் கூடாதென்பதாம். ஆனால், இலக்ஷணையால், மகாவாக்கியத்தின் பொருளான அது நீ என்னும் பொருளான பதங்கள் பிரமமாயும் சாட்சியாயும் உள்ள சேதன பாகமான இலக்ஷியார்த்தங்களை விடாமல் பேததர்மங்களையுடைய வாச்சியபாகங்களை விடுத்து ஸர்வகாலமும் பிரமமே நீயாம் நீயே பிரமம் என்று சொல்லும் அசிபதத்தின் பொருளும் ஏகமே என்று ஐக்கியத்தை யுணர்த்துவ எனக் கூறியன கொண்டும், ஈண்டு பரப்பிரம்மத்தை சர்வஸாக்ஷி என்றார். இதன் விரிவை,

"ஸூக்ஷ்மாத் ஸூக்ஷ்மதரம் நித்யம்
தத்வமேவ த்வமேவ தத்"

என்ற கைவல்லியோப நிஷத்திலும்,

"த்வம் ப்ரஹ்மாஸ்மி அஹம் ப்ரஹ்மாஸ்மி
ஆவயோ ரந்தரம் நவித்யதே த்வமே
வாஹம் அஹமேவத்வம் இத்யபிதா
யே த்யுக்த்வாதி நாராயண ஸ்திரோதநே"

என்ற மஹாநாராயணோப நிஷத்திலும்,

"ஸஏவஹி பரம் ப்ரஹ்ம தத்ப்ரஹ்மாஹம் ந ஸம்ஶய:
ஜீவஶ்ஶிவ ஶ்ஶிவோஜீவ ஸ்ஸஜீவ: கேவல ஶ்ஶிவ:
துஷேணபத் தோவ்ரீஹீ ஸ்யாத்துஷா ஹாவேது தண்டுல:
ஏவம் பத்தஸ்ததா ஜீவ: கர்மநாஶே ஸதாஶிவ:
லோஹம் பாவே ந பூஜயேத்
அபேத தர்ஶநம் ஜ்ஞாநம்"

என்று ஸ்கந்தோப நிஷத்திலும்,

"அஹம்கார தயாஜீவ ஸ்தந்முக்தஃ ஶம்கரஃ ஸ்வயம்
யதைகம்ச ஸுவர்ண ஹிதாம்ரேண மிலிதம் யதா
கல்பமூல்யம் ப்ராஜாயேத ததாஜீவோ ஹ்யஹம்புதஃ
ததேவச ஸுவர்ணம் ஹிக்ஷாராதி ஶோதிதம் யதா
பூர்வவந்மூல்யதாம் யாதிததா ஜீவஸ்ய ஸம்மதம்
யதா சத்குரும் ப்ராப்ய பக்திபாவ ஸமந்விதஃ
ஶிவா புத்யா கரோத்யுச்சைஃ பூஜநம் ஸ்மரணம் ஶுபம்
ததாஜ்ஞாநம் ச நஶ்யேத ஶரீரம் சாஸ்த்ரம் புதஃ
மத்வாச நித்யரூபம்ஹி ஶிவமேவ ஸநாதநம்
அஜ்ஞாநதூரதோ பூத்வா ஜ்ஞாநவாந் ஜாயதே யதா
ததாஹம்கார நிர்முக்தோ யாதி ஶம்கரதாம் புதஃ"

என்கிற சைவபுராண வசனமும்,

"காரிய மேழிற் கலக்கும் கடும்பசு
காரண மேழிற் கலக்கும் பரசிவன்
காரய காரணங் கற்பனை சொற்பதப்
பாரும் பாழில் பராபரந் தானே" என்றும்,

"நானென்றுந் தானென்று நாடிநான் சாரவே
தானென்று நானென் றிரண்டிலாத் தற்பதந்
தானென்று நானென்ற தத்துவ நல்கலால்
தானென்று நானென்றுஞ் சாற்ற கிலேனே"

என்ற திருமூலர் திருமந்திரத்திலும்,

"அவனே தானே யாகிய வந்நெறி
யேக னாகி யிறைபணி நிற்க
மலமாயை தன்னொடு வல்வினை யின்றே"

என்ற சிவஞானபோதத்தாலும் அறிக.

"அக்கினியிற் சூடுபோல அபின்னமாக வொருசத்தி" என்றது, அக்கினிக்கு உஷ்ணம் சுபாவம். சுபாவமான உஷ்ணத்திற்கு மணிமந்திரங்களால், அதனிடத்துள்ள வெப்பம் எங்ஙனம் கொளுத்தாமல் இருக்கிறதோ அதனை யொத்துப் பிரமத்தில் அதனை விட்டு நீங்குதலில்லாத இயல்பாக வுண்டான திவ்ய சத்தியுண்டு. இச்சத்தி பிரமத்திற்கும் பிரபஞ்சத்திற்கும் மததியில் அவாந்தரமாகத் தோன்றுகின்ற மாயை தனியே ஓர்முதலாகிப் பிரமத்திற்கு வேறுபட்டிராது. அதனால் வஸ்து இரண்டாகமாட்டாது. அம்மாயையை இத் தன்மையுள்ள தென்று சொல்லக்கூடாமையால் அவாச்சிய உருவமாம். அதனைப் பெற்றவர்கள் இத்தேகம் நான், இந்தப் பிரபஞ்சம் சத்தியம் என்னும் அபிமான முடையவர்களே அதை யுடையவர்கள்; சாரமில்லாத மித்தையான அம்மாயை உதித்தது இவ்வித மென்று பார்த்தது இல்லை. அதனை உருவம் அருவம் உருவா உருவம் என அம்மாயையைப் பகுத்துச்சொல்லக் கூடாது. ஆகையால், மித்தையான சகந் தோன்றுதலின், அங்ஙனந் தோன்றுவிக்கும் மித்தையான மாயாசத்தி ஒன்று உளது என உணரவேண்டும். இதனையே அபின்னசத்தி என்பர். இச்சத்தியினையே அக்கினிற் சூடு போல வென்று எடுத்துக்காட்டினால் விளக்கியது. இதனை,

"சிந்தையி னுள்ளே திரியுஞ் சிவசத்தி
விந்துவு நாதமு மாயே விரிந்தனள்
சந்திர பூமி சடாதரி சாத்தவி
அந்தமொ டாதிய தாம்வண்ணத் தாளே"

என்றனர் திருமூலர் திருமந்திரத்திலும்,

தீயினிடத்து சத்தி ஒன்ருக விருந்தும், அதுவே உலோகம், விறகு, உப்பு, சாதம் முதலிய விஷய பேதங்களி ஞல் பல்வேறு வகைப்பட்டுச் சிவசத்தியே வேறுபாட்டால் பல்வகைய பெயர் பெற்று நிற்கும்.

'அதீதப் பிரமத்தில்' என்றபோது, அதீதமென்பது என்னையோ வெனில், வாக்கிஞற் சொல்ல முடியாததும், மனத்திஞல் சிந்திக்க முடியாததுமாக விருத்தலுமாக நிற்ற லாம். இது முக்குணங்களையுடைய சங்கில் இட்ட மூவித மான மனத்திஞலும், வைகரியாதி நால்வகை வாக்கின் பகுதிய வாய வேதமுதல் நாதமீருகியவைகளுக்கு அதீதமாய், சுட் டுணர்வுக்கு எட்டாது நிற்றலின் இவ்வாறு கூறியதாம். இதற்குச் சாதிரூப உருவம் குணம் காரியம் ஆகியவைகள் இன்றியிருத்தலுமறிக. இதனை,

"மறையிஞ லயஞன் மாலான் மனத்திஞல்
வாக்கான் மற்றுங்
குறைவிலா வளவிஞலுங் கூஞெண தாகி
நின்ற விறைவஞர்"

எனச் சிவஞான சித்தியாரில் கூறியதறிக.

'இந்தச் சத்தி விசிரிம்பித்துச் சுத்தப் பிரம்மத்தை வியா பித்தல்' என்றது, சுவாசிரிய சுயவிஷயத்தால் பிரபுவாகிய தம்மை இடமாக வைத்துக்கொண்டு தன்னையே மறைத்தலால் அறியக்கூடும். இதஞல் பிரம்மத்துக்குச் சுசாதிகாதி பேதங் கள் உபாதியிஞல் வந்ததே யல்லாமல் பாரமார்த்திகமாக விசாரிக்கு மிடத்தில் அவையில்லையாகும். திருஷ்டாந்தத்தில்,

நெருப்பின்கண் புகையுண்டாகி, அந்த அக்கினியில் இயல்பா யுண்டாகிய பிரகாசத்தை மறைத்தலை யொத்தும், ஆகாயத் தைப் பொருந்திக் கடபடாதிகள் தோன்றி அந்த வாகாசத் தையே மறைத்துக் கொண்டதுபோலும், காரண பீஜமான விதையினின் றெழுந்த விருக்ஷமானது மீண்டும் அவ் விதையே அது தெரியவொட்டாமல் மறைத்தாற்போலும், பிரம்மத்தை இடமாகக்கொண்டு, அதினின்றே பற்பல விகார மாகி, அப்பிரம்மஸ்வரூபத்தையே மறைத்து என்றமையாம். இதனால், அப்பிரம்மத்தி லிருந்து தான் வெளிப்பட்டு என்பதே பொருளாம். வெளிப்படுதல் யாதோ வென்னில், சாகோபசாகாதிகளையுடைய விருக்ஷத்திற்குச் சூக்குமமாகிய வித்துப்போல, ஸ்தூலமாகிய பிரபஞ்சத்திற்குச் சூக்குமமாகிய மாயை யுண்டென்னும் அம்மாயையின் காரியமே அண்டபகி ரண்டமனைத்தும் என்று உணர்தலாம். இதனை,

"அருவினி லுருவந் தோற்றியங் காங்கிபாவமாகி
யுருவினி லுருவ மாயே யுதித்திடு முலகமெல்லாம்
பெருகிடுஞ் சுருங்கும் பேதாபேத மோடபேதமாகும்"

எனச் சிவஞான சித்தியாரிலும்,

"மன்னுமதோ மாயைதனி லனந்த தேவாருளால்
வருங்கால நியதிகலை வித்தை யராகந்தான்
முன்னையக் கலையினு ருத்திர னருளான்மூல
முக்குணங்கள் மூலமா மவ்வியத்த மதனில்
உன்னு சித்த மதிற்புத்தி யாங்காரமது
தானுடன் மூன்றுந் தைசதம் வைகிரிபூதாதி

யென்னு முதன்மனம் வாயிலிடைக் கருமேந்திரிய
மெழுங் கடையிற் சத்தாதியிற் பூதமெழுமே"

என வருவனவற்றுற் காண்க.

"செய்யபெய ருருவமிலா திரண்டற் றென்றுய்ச்
சிறந்தசுத்தப் பிரமசர்வ சாட்சி தன்னில்
வெய்யநெருப் பினிற்சூடொத் தபின்ன மாயோர்
விளங்குசத்தி யுளதனுதான் சுழுத்தி தன்னில்
செய்யகுணத் திரயங்க ளடங்கு மாபோல்
நுவலதீ தத்துறைய வந்தவேலை
செயயலற நிற்கையிலச் சொரூப நாமந்
திகழ்சுத்தப் பிரமமெனத் தெரிப்பர் மேலோர்"

மேலே சொன்னவைகளை யெல்லாம் ஒருங்கே தம்மிடத்தே யுடைத்தாய் அபின்னசத்தியுடன் ஒளிர்கின்ற ஸ்வரூபத் தன்மையினையே சுத்தபிரமமென அறிதல் வேண்டும்.

"அது பரை வியாபகத்துள் இருந்தபடியினுலே அதற்குப் பரப்பிரஹ்மமென்று பெயராயிற்று" என்றமை, எது எதனில் வியாபித்து என்றுல், அப்பரை தானே சுத்தப் பிரமத்தில் மறைந்து என்பதாம். அஃது எவ்வண்ணமோ வென்றுல், ஆராயின், ஆகாசாதி பூதமைந்தும், சத்தாதிவிஷய மைந்தும், சுரோத்திராதி ஞானேந்திரிய மைந்தும், வாக்காதி கன்மேந்திரிய மைந்தும், பிராணுதி வாயுக்கள் பத்தும், மனுதி நான்கும், அஞ்ஞான மொன்றும், பசுவாகிய ஜீவனென்றும் கூடினது முப்பத்தாறு தத்துவங்களென்று சொல்லுவார்கள். இந்தத் தத்துவங்களுக்கெல்லாம் அன்னியமாய் விளங்குவது ஜகத்காரண பூதமான பரமாத்மாவான பரப்பிரமமென்று

சொல்லப்படுவது, அது தானும் மாந்தராகிய நாம் நித்திராவஸ்தையினின்று உணர்வுற்று எழுந்து தெளிந்த வமையத்தில் ஒரு குணம் வெளியாகவும், அதன்பாற் பட்டு நம் இயல்பாகிய நிர்க்குணத்தை அறமறந்து மற்றொன்றாற் பற்றப்பட்டு மாறுபட்ட தன்மையொப்ப, அபின்னசத்தி வெளிப்பட்டு மேலே சொன்ன பிரஹ்மத்தை மறைக்கும்போது, அந்தப் பிரமமும் அப்பரையின் வியாபகத்துள் அடங்கியபடியால் அதற்குச் சுத்தப்பிரமம் என்கிற திருநாமம் அகன்று பரப்பிரமம் என்கிற திருநாமம் போந்தது. இங்ஙனம் சொன்னதால் நாமரூப வடிவம் எப்பொருட்கும் விவர்த்த காரணமாயும் தனக்கு ஒரு காரணமில்லாமல் எல்லாவற்றினும் மேற்பட்டு வியாபகமாக இருத்தலின் தன்மை விளங்கியதெனக் கொள்ளுதலாகும். இதனை,

"ஏகோவஸீஸ்வர பூதாந்த ராத்மா
ஏகம் பீஜம் பஹுதாயஃ கரோதி" என்கிற கடோபநிஷத்தும்,

"ஆதியான தொன்றுமே யனேகரூப மாயமாய்ச்
சாதிபேத மாயெழுந்து சர்வஜீவ னானபின்
ஆதியோடு கூடிமீண் டெழுந்தஜன்ம மானபின்
சோதியான ஞானியாருஞ் சுத்தமா யிருப்பரே"

என்று சிவவாக்கியரும்,

"அத்தமியாத சோதி யருக்கனு யளவிலாதாய்
மெத்திய பிணியிலாதாய் மேவரும் பிறப்பிலாதா
யெத்தலங் களினுமென்று மியாவுமா யாவுஞ்செய்து
முத்தியுமாகி யோங்குமுதற் பரம்பொரு ளொன்றுண்டு"

என்று ஞானவாசிஷ்டத்திலும்,

"அருளுருவாம் பரமசிவ னனந்தசத்திக் காதாரமாக
மமர்ந்திருப்ப தாலே
சருவசகக் காரணமா மவ்வீசற்குச் சமமேனு
மல்லதவற் கதிகமேனும்
ஒருபொருளு மிலையதனு னன்றேனென்றுனே யோதுமுபா
தானநிமித் தங்களாவன்
கருதியவிவ் வீசற்கு மேபோய் வேறோர்காரணமு
மெக்கானு மெங்குமில்லை"

என்று ரிபுகீதையிலுமறிக.

இவைகளினல் சூரியனது கிரண மெங்குமாய்ப் பிரகாசிக்கும்பொழுது அச்சூரியன் அதிலடங்கி யிருப்பதுபோல அந்தச்சத்தி விசிரிம்பித்துச் சுத்தப் பிரம்மத்தை வியாபிக்கும் போது அப்பிரமம் பரைவியாபகத்துள் இருந்தபடியால் அதற்குப் பரப்பிரமமென்று பெயரென்றதாம்.

"உறை சுழுத்தி யோய்ந்தொளிரு நனவுதன்னி
லோர்குணந்தா னேங்கிடநம் முருவம் வேறாய்க்
குறை யடைதல் போலபின்னு சத்திதோன்றிக்
குறித்த பிரமத்தை வியாபிக்கும் போது
நிறைவுறுமச் சொரூபமது பரையிற் குள்ளே
நிற்கையிற் சுத்தப்பிரம மெனும்பேர் நீங்கி
அறைநின்ற பரப்பிரம மாகு மென்றே
யாதிமறை நூலறிந்தோர் அறைவர் மாதோ"

அபின்னுசத்தி = அருட்சத்தி. ஓர்குணம் = நிர்க்குணம். பிரம்மத்திற்குப் பின்னமாயின் வஸ்து இரண்டாம். அபின்னமாயின் வஸ்துவும் மித்தையாம். அன்றியும், மாயாப்பிரதிபிம்பனுன ஈசுவரனையும் மாயைக் கதிஷ்டமான மாயபிரமத்தையும் ஒன்றுபடுத்திப் பரம்பொருளென்று கூறினும். சீவேசுவா

வுலகு அநித்திய மென்புழி மாயைக்கதிஷ்டானமாயுள்ள பிரம்மமே நித்தியப் பொருளென்றும் ஏனையவை அநித்தியப் பொருளென்றும் கொள்க.

பரமாத்மாவை அறிந்த ஞானியானவன் ஜகத் ஜீவன் முதலிய ரூபமாய் பார்த்துக்கொண் டிருந்தாலும் அவற்றை ஜகத்து முதலிய ரூபமாய்ப் பார்க்கிறதில்லை; சித்ரூபமான பிரம்ம வஸ்துவாகவே பார்க்கிறான். வஸ்து ரூபத்தினாலே யாவது அவஸ்தா ரூபத்தினாலேயாவது பிரம்மத்திற்கு வேறாய் ஒரு வஸ்துவாவது அவஸ்தாவாவது எப்போதுமில்லை. இப்படி யிருக்கையில், தத்துவஞானியானவன் சிவனைக் காட்டிலும் வேறாக எதை எப்படிப் பார்ப்பான்? பார்க்கான்.

சுருதியுக்தி விசாரத்தினாலே பிரம்மசுவரூபம் நிரூபிக்கப் பட்டிருக்கிறது. பரப்பிரம்மமானது நாசமற்றதாயும் சிரேஷ்டமான ஆத்துமாவாகவும் உத்தமமான பதமாகவு மிருக்கிறது. கயிற்றினிடத்தில் பாம்பென்கிற மயக்கம்போற் பிரம்மத்தினிடத்திற் பிரபஞ்சமானது பிராந்தியினால் பிரகாசிக்கிறது. பிரபஞ்சத்தில் பிரமம் இருந்தாலும், கயிறு விகாரமடையாது போல் பிரமமும் விகாரமடைகிறதில்லை. விசாரிக்குமிடத்தில் நுரை, அலை, குமிழி இவை யெல்லாம் எப்படி ஜலந்தானோ அப்படியே பிரமமும் விசாரிக்குமிடத்தில் பிரபஞ்சத்தைக் காட்டிலும் வேறல்ல. ஸகலமும் பிரம்மமே. பலமென்பது இல்லை யென்று வேதாந்தங்கள் சொல்லுகின்றன.

"பதிபசு பாசம் பயில்வியா நித்தம்
பதிபசு பாசம் பகர்வோர்க் காறுக்கிப்

பதிபசு பாசத்தைப் பற்றற நீக்கும்
பதிபசு பாசம் பயில நிலாவே"

என்கிற திருமந்திரத்தாலும்,

"கானலிடைத் தெண்ணீருங் கயிற்றினில்வா
ளரவுமலே கடலிற்பட்ட
கூன்முதுகிப் பியிற்ரேென்றும் வெள்ளியுமம்
முதலுண்மைக் குறிக்கிற்றீரும்
ஆனவைபோ னினையறியிற் ரேென்றுசக
மனைத்துமில்லா தழியுமாற்ருற்
றேனவிழ்பூங் கடுக்கையணி செல்வரின
தறைகழற்ருள் சென்னிசேர்ப்பாம்"

என்ற காசிகாண்டம் கூறியதுமறிக.

இலக்ஷண சூனியமாயிருத்தல் இந்த சத்திக்கு; அதா வது—இலக்ஷணசூனியம் எதற்கெனின், இலக்ஷணமுளதற் கன்றே இலக்கணம் வேண்டுவதும் சூனியமாவதும் இயல்பு. உற்பத்தி நாசமில்லாததும், காரணமில்லாது காரியப்பட்டுச் சொருபத்திற்குரிய சச்சிதானந்த லக்ஷணமில்லாம லிருப்ப தாகிய ஜடதத்துவமாகத் தோற்றுவது இலக்ஷணசூனிய மாயிற்று. மா-சத்தி, யா-வியத்தி; அதாவது காரணகாரிய ரூபமாயிருப்ப தெதுவோ அது மாயையாம். ஈண்டு இல்லாமை யென்றது காரியப்பாட்டினை நோக்கியேயாம். சூனியம் என் னும் பொருள்பட வன்றெனவுங் கொள்ளலாம்.

'புருஷசமுகத்தில் ஸ்தரீக்கு இன்பஞ்சனித்தாற்போல' என்றமை—ஆணும் பெண்ணும் கலவியிற் பொருந்திய காலத்து அசமுகமாய் நுகர்ந்த இன்பத்தில், அவ்விருவாது எண்ணத்திலும் இல்லாத சிசு எவ்வாறு தோற்றியதோ

அதனை யொப்பப் பரப்பிரஹ்மத்தினிடத்தில் இலக்ஷணசூனிய மாயிருக்கிற அப்பரையின் வியாபகத்தினுள்ளே பரப்பிரமம் பொருந்துங்கால், அந்தச் சத்தியினிடத்தில் அந்தப் பிரகாசத்தின் நிர்ச்சலம்போல அவிகிருத சத்துவகுணமாகிய ஆனந்த ரூபசத்தியும், சலனம்போல இராஜஸாகிய சித்ரூபசத்தியும், மக்னம்போலத் தமசாகிய சத்ரூபசத்தியும் தோன்றின. இதனால் பரவஸ்துவில் சத்தி வாஸ்தவத்தில் அபேதமாயும், கற்பிதத்தில் பேதமாயும் இருக்கின்றதெனப் போதந்தது. அன்றி, கயிற்றின்கண் அரவாதற்குரிய சத்தி வாஸ்தவத்தில் அபேதமாக விருப்பினும் கற்பிதத்தில் பேதமாக விருப்பதேயாம். சத்தியைக் குணமென அறியாத சிலர் பொருளெனக் கூறுவதற்கு யாதொரு உதாரணமும் இன்மையானும், "ஏகமேவாத்விதீயம் பிரமம்" என்றும் சுருதி கூறுவதாலும் அது கூடாது.

பரவஸ்து தனது சத்தி விசிரிம்பித்தவிடத்துச் சீவேசுவர வுலகாய் விளங்குகின்றது. விளங்கினும், அவை பரவஸ்துவிற்கு வேறுபட்டனவல்ல. அதன்கண் பொற்பணிபோன்றிருக்கின்றன. இதனாலன்றோ முன்னம், அச்சத்தியோ, சூரியகிரணம் அச்சூரியனை விட்டிராததுபோல் அப்பரவஸ்துவிலிருக்கின்றது என்றார். இதனை முக்குணங்களையுடையதென்பது,

"அதோ மம ஸ மாயோகாத் ஶக்திஃ ஸாத்ரிகுணாத்மிகா
அதிஷ்டாநேது மய்யேவ பஜதே விஶ்வ ரூபதாம்
ஶுக்தௌ ரஜதவத்ரஜ்ஜௌ புஜங்கோயத்வ தேவது"

என்று பத்மபுராணம் சிவகீதையில், 'முக்குணங்களையுடைய அந்தச் சத்தியானது என்னுடைய சேர்க்கையினால் இப்பி யினிடத்தில் வெள்ளிபோலவும், கயிற்றினிடத்தில் அரவு போலவும், அதிஷ்டானமாகிய என்னிடத்திலேயே விசுவ ரூபமாயிருக்குந் தன்மையை அடைகிறது, எனப்பொருள் விரித்துப் போந்துள்ளமையும்,

"தவிராதல் வம்மூர்த்தங் களுக்குத்தக்க சத்திகளாய்
விளங்கு மந்தசத்தி யின்றி
யுவமானங் கடந்தொளிரும் பரசிவத்துக்
கொருதொழிலு மின்றாகு மாதலாலே
யவிர்தருமச் சிவமன்றிச் சத்தியில்லை யத்தகு
சத்தியை யன்றிச் சிவமுமில்லை
யிவர்தருமன் போடிவ்வா றுணர்பவன் மெய்ஞ்ஞானி
யிரண்டாகக் கருதிடுவோ னிருணிரயம்புகுமே"

எனச் சூதசங்கிதையிலும்,

"சத்தி சிவன்றன் விளையாட்டுத் தாரணி
சத்தி சிவமுமாஞ் சிவசத் தியுமாகுஞ்
சத்தி சிவமன்றித் தாபரம் வேறில்லை
சத்தி தானென்றுஞ் சமைந்துரு வாகுமே"

"சத்தியுஞ் சிவமுமாகித் தானுவாய் சகத்துக் கெல்லாம்
முத்தியு மளிக்கவல்ல முதல்வனே நமச்சிவாயா"

என நமச்சிவாய மாலையிலும்,

"ஆணினோடு பெண்ணுமாகி யல்லவோடு நல்லவாய்
ஊணொடோசை யூறுமாகி யொன்றலாத மாயையாய்ப்

பூணிபேணி மாயனாகிப் பொய்யினோடு மெய்யுமாய்க்
காணிபேணு மாணியாய்க் கரந்துசென்ற கள்வனே"

என திருச்சந்த விருத்தத்தாலும் அறிக.

இவ்விதம் சொன்னவைகளின் பொருளென்னையோ வெனில், பரப்பிரமம் சர்வாத்மனாயிருக்கிற மாயைக்குச் சுசாதிக விசாதிக சுவகத பேதரூபமாகிய வஸ்துவினால் பரிச்சேதமில்லை. இதன்றியும், பரப்பிரம்மம் விபுவாக விருக்கிற படியால் தேசத்தினாலும் நித்தியனாக இருக்கிறபடியால், காலத்தினாலும் ஸர்வாத்மனாக இருக்கிறபடியால் வஸ்துவினாலும் பரிச்சேதம் இல்லாதபடியினால் சச்சிதானந்த ஸ்வரூபமாகிய பரப்பிரம்மத்திற்கு அகண்டத்துவம் சித்தித்தது எனக் கொள்ளுதல் வேண்டும். ஈண்டு பிண்டமாக்கியதை விரிப்பான் வேண்டி விரித்துப் பேசுவாம். ஆண்டு கூறிய சேர்க்கையில் பிறந்தவையான முக்குணங்களும் முறையே ஆனந்தரூபசத்தி, சித்ரூபசத்தி, சத்ரூபசத்தி யெனத் திருநாமம் புடைத்து,

"மாதருஞ்சே ராடவருங் கூடுங் கால
மகிழ்வ ரெண்ணுதகருத் தரிக்குமாபோல்
ஓதருமச் சத்திவியா பகத்திற் பிரம
மொளிர்போதிற் சாக்ரசோ தமங்களென்னும்
நீதமுறு தூயகுண மூன்று நேர்ந்து
நிகழ்கின்ற வானந்த ரூபசத்தி
சாதமுறு சித்துருவ சத்தியோடு
சத்துருவ சத்தியெனத் தயங்குமாதோ"

என்று எடுத்துக்காட்டிய வண்ணம், பிரிவுபட்டனவாம்.

இவ்விதம் பிரிவுகொண்ட ஆனந்தரூப சத்தியானது பரப் பிரம்மத்துடன் கூடியகாலத்தில் பரமானந்தன் என்றபெய ருடன் விளங்குகின்றான். இதனை,

"சொல்லுமா னந்தரூப சுத்தமாஞ் சத்திதானும்
நல்லசாத் வீகமோடு நவில்பரப் பிரமஞ்சேர்கால்
தொல்லையிற் சருவானந்த சுழுத்தியை யடையுமப்போ
தெல்லையிற் பரமானந்தப் பெயரென வியம்புவாரே"

என்றார். அவ்விதமே சிற்சத்தியுடன் கூடியபோது, சூக்கும சரீரமான சாவப்பிரகாசம் என்னும் சொப்னவஸ்தையில் கூடியவிடத்து பரமானந்தர் என்கிற திருநாமத்திற்கு ஆனி யுண்டாகிப் பரிபூரணர் என்கிற திருநாமம் வழங்கலாயிற்று. சத்து என்பது எவ்விடத்தும் உள்ளது. சத்து என்று சொன்னாலும் உள்ளது என்று சொன்னாலும் ஒரே பொருளாம். இதைப் பற்றிய வாதங்களும், எடுத்துக்காட்டும் விரிக்கப்புகின் அஃதொரு புத்தகமாக விரியுமாதலின் விடுத்தாம்.

"நனவிலுறு பரமானந்த னிராசத குணமதான
நுவற்று சித்துரூப சத்தியைத் தொடர்ந்துநீங்கா
தவிர்செயுங் கனவதான வவஸ்தையை யடையுங்காலம்
நுவல்பரி பூரணன்று னென்னநூ லுரைக்குமன்றே" என்றார்.

ஈண்டு கூறிய பூரணன் என்பது—நீரினால் நிரைந்தகடம் போன்று பஞ்சகோசங்கள் முன் முன்னம், உத்தர உத்தரங்க ளால் நிரைக்கப்பட்டுச் சீவனாலும் பூரிக்கப்பட் டிருக்கின்றன. அக்கோசங்களாற் பூரிக்கப்பட்டுள்ள பஞ்சபூதங்களால் நிரப் பப்பட்டிருப்பது உலகு; அவ்வுலகு எங்கணும் வியாபித்துள்ள மாயா விசிஷ்டனும் தன்னாலே வியாபிக்கப்பட்டுத் தான்

வேறென்றால் நிரப்பப்படா திருத்தற் றன்மையாலே இங்ஙனங் கூறியதாம்.

பரிபூரணர் சத்ரூப சத்தியோடு கலந்து தூலசரீரமென்கிற ஸர்வவியாபக மென்னும் சாக்கிரதாவஸ்தையைப் பொருந்துங் காலத்தில் மேலேசொன்ன பூரணர் என்கிற பெயரொழிந்து பரனென்கிற பெயர் வழங்கலாயிற்று. பரன் = மேலானவன்.

"தகைமைசேர் சத்ரூப சத்தியாந் தாமத்தை
மிகபரிபூர ணன்றான் மேவிய வேலைதன்னில்
விகசித மானசர்வ வியாபகச் சாக்கிரத்தில்
திகழ்தரு போதிதன்பேர் பசப்புவர் பரனுமென்றே" என்றார்.

பரப்பிரம்மம்கூடி சர்வானந்த சுழுத்தியை அடைதலாவது—ஆறு அவஸ்தைகளும் நீங்கி மேல் அநுபவிக்கத்தக்க சுபாசுபகர்மங்களின் சமஸ்காரம் இருத்தற்கு இடமாய் அஞ்ஞானவடிவ இருளால் மூடப்பட்டுச் சடமாகவுள்ள அவஸ்தை. இந்தச் சுழுத்தி மூன்றுவகை, அவை—சாத்விக விருத்தி பூர்வகமாகிய சுகசுழுத்தி யென்றும், இராஜஸ விருத்தி பூர்வகமாகிய துக்கசுழுத்தி யென்றும், தாமஸ விருத்தி பூர்வகமாக ஆழ்ந்த சுழுத்தி என்பனவாம். ஞான பூமியை அடைய வேண்டியதற்குகந்த எழுவகைப் பூமியில் முதல் மூன்று பூமிகள் தத்துவஞானத்திற்குச் சாதனம். நான்காவது பூமி தத்துவஞான வடிவமாக விருத்தலின் ஜீவன் முத்தி விதேகமுத்திக்குச் சாதனமாக விருப்பது. ஐந்து ஆறாவது ஏழாவது பூமிகள் ஜீவன்முத்தியின் விலட்சண

ஆனந்தத்திற்குச் சாதனமாக விருப்பது. இங்கே சொல்லி வருகின்ற எழுவகை பூமிகளையும் சாக்கிர சொப்பன சுழுத்தி துரியமெனப் பிரித்து, ஐந்தாவதான பூமியில் (நிர்விகற்ப சமாதி அப்பியாசத்தின் பரிபக்குவத்தினுல் உடலின்கண் எவ்வாற்ருனும் யான் எனது என்னும் பற்ருெழிந்து பிரியம் உண்டாகாமலிருத்தல்) யாதொன்றும் சுழுத்திப் போன்று தோன்ருது சின்மாத்திரமாக நிற்றலாலே அது சுழுத்தியாம். ஆருவது பூமியானது, நிர்விகற்பசமாதி அப்பியாசத்தின் முதிர்ச்சியால் தேகாதி சகல பதார்த்தங்களும் அதிஷ்டான பிரம்ம வடிவமாகத் தோன்றுதலால் ஆங்குச் சகல வாசனை களும் ஒழிந்து காடசுழுத்திபோன்று ஆனந்தாகாரமாக நிற்ற லாலே காடசுழுத்தி யென்பர். அக்காடசுழுத்தியானது விழிப்பித்தலன்றி விழியாதிலை; இதனையே சர்வானந்த சுழுத்தி என்றதெனக் கொள்க. இந்தச் சுஷுப்தி அவஸ்தை யில் தூலாம்சத்தில் இருப்பவனுக்கு விசுவன் எனவும், சூட்சு மாம்சத்தில் இருப்பவனுக்குத் தைசதன் எனவும், பீஜாம்சத் தில் இருப்பவனுக்குப் பிராக்கியன் எனவும், சாக்ஷியாம்சத்தில் இருப்பவனுக்குத் துரியனெனவும் பெயராகும்.

சர்வப் பிரகாசமான சொற்பனுவஸ்தை யாவது—உண் டுறங்கி விழித்துக் கணகாலத்தில் அநேக விஷயங்களைக் கண்டறிந்தன மென்று சிந்திப்பதே சொப்பனம். இதுவும் மூன்றுவகை. யதார்த்தமாகிய பொருளைச் சொப்பனத்திற் காணுதல். கண்ட சொப்பனத்தின் மறதி. விசாரணுதி யாகிய எழுவகைய பூமிகளுள் சிரவண மனன நிதித்தியா

சனங்களால் உண்மைநிலை மருவி பிரமவித்தாகி உலகத்தை மித்தையாகத் தோன்றுந் தன்மையவாக விருத்தலின், சொப்பன மென்றதாம். இதில் ஐயந்திரிபின்றிச் சொரூப சாக்ஷாத்காரமாகிய நிர்விகற்ப நிலையுண்டாவதினால் சர்வப்பிரகாசம் என்றுஞ் சொல்லினர்.

சர்வவியாபக மென்கிற சாக்கிரதாவஸ்தை யாவது— பீஜசாக்கிர மென்னும் இவ்வறிவில் யான் எனது என்னுந் தன்மைகள் சூக்குமமாக எழாமல் நிற்பதே சாக்கிரமாம். இது, மஹாசாக்கிரம், சாக்கிரச் சொப்பனம், என்று பேசுவதாயினும், ஜாக்கிர ஜாக்கிரமாகிய வர்த்தமான ஜாக்கிரத்திலுண்டாகும் சொரூப சாக்ஷாத்காரத்தையும், ஜாக்கிர சொப்பனமாகிய ஜாக்கிரத்திலுண்டாகும் இனிவரும் விஷயங்களைச் சிந்தித்தலாகிய மனோராச்சியத்தையும், ஜாக்கிர சுழுத்தியாகிய ஜாக்கிரத்தில் பிராந்தியினாலுண்டாகும் ஜடரூபமாகிய விருத்தியையும் அறிந்து, ஞானபூமிகளிற் றிளைந்து சுபேச்சையாதி மூன்றும் ஆத்மஞானம் பூரணமாய் சித்தித்தல் இன்மைபற்றி உலகம் பரோக்ஷா வனித்தியமாய்த் தோன்றுதலால் சர்வவியாபகமான பரிபூரணத்துவத்தை நீங்கிப் பரமானந்தத்தைக் கைப்பற்றியதாம். இவ்விதம் எல்லா ஜீவர்களும் தனித்தனியாக அடைகின்ற ஜாக்கிராவஸ்தையைச் சமஷ்டியாகத் தனது பொலிவினால் விளக்குந் தன்மையினையே ஸர்வவியாபகம் என்பாருமுளர்.

இந்த அகண்ட பரிபூரண சச்சிதானந்த ப்ரம்மத்தினிடத்தில் கானற் சலத்தைப்போல மூலப்பிரகிருதி யென்று

ஒரு சத்தி யுண்டாயிற்று. அந்த மூலப்பிரகிருதி அக்கானற் சலத்தினது நிர்ச்சலம்-சலனம்-மக்னம்போல விகிர்த சத்துவ ரஜஸ் தமஸென்னும் மூன்று குணங்களுடனே கூடியிருக்கும். அவற்றுள் சத்துவகுணத்திற்கு மாயை யென்றும், சர்வக்ஞ வுபாதி யென்றும், ஈசுவரன் காரண சரீரமென்றும் பெயர். அந்த மாயையினிடத்தில் நிர்மலசலப் பிரிதிபிம்பம்போலப் பிரமம் சலக்ஷணமாகப் பிரதிபிம்பிக்கும். அதற்கு ஸர்வக்ஞ னாகிய ஈசுவரனென்று பெயர். ஈண்டு சொல்லிவந்த சுத்த விகிருத சத்துவத்தின் பொருளையே கூறவந்தவர் அதன் கிரமத்தை விவகரிக்கத் தொடங்கி,

"முன்பத சிருஷ்டி பதிபசுபாச மூன்றையு
மனாதியாய் நிறுவும்
பின்பத சிருஷ்டி சகமித்தை யந்தப்
பிரமமேயுதென நிறுவும்
சின்பதமான வசிபத சிருஷ்டி சிவ
சத்திலீலையாய் நிறுவும்
மன்பத மூன்றும் பின்னைய பினையுமாய்ச்
சாருசிவமு மென்றுணர்வாய்"

என்றுரைத்தனர். இப்பாட்டில், முன்பதம் என்றது துவம் பதத்தைச் சொன்னது.

துவம்:—நீ இப்பதமே கூடஸ்தப்பிரமம் அனாதி என்கிற பொருளையும், பதி, பசு, பாசமாகியவையும் அனாதியென்கிற பொருளையும் தந்து நின்றது. சிருஷ்டி—தோற்றுவித்தல் பின்பத என்றது, தற்பதத்தைச் சொன்னது. தத் - அது, பரம். இப்பதம் பிரமமே நித்திய மென்றும், மற்றைப்

பதி பசு பாசங்கள் மித்தையாகு மெனவும் கூறுவது. அசி பதம்—ஆகிறாய் என்பதே பொருள். மேற்சொன்ன இரண்டு பதத்திலும் நின்ற சிவனே பரனென்றும், பரனே சிவனென் றும் ஏகமாய்க் காண்பது அசிபதம். இதனையே சிவசத்தியின் லீலை என்பார். இந்த மூன்று பதங்களும் அபின்னசத்தியின் காரியமென் றறிவையாக. இதனை,

"தோன்றிய தொம்பதந் தற்பதஞ் சூழ்தர
ஏன்ற வசிபத மிம்மூன்றே டெய்தினேன்
ஆன்ற பராபர மாகும் பிறப்பற
வேன்றனன் மாளச் சிவமா யிருக்குமே"

"தொம்பதந் தற்பதந் தோன்று மசிபத
நம்பிய சீவன் பரன்சிவ னாய் நிற்கும்
அம்பத மேலைச் சொரூபமா வாக்கியஞ்
செம்பொ னாண்டருள் சீர்நந்தி தானே"

"தற்பத மென்றுந் துவம்பதந் தானென்று
நிற்ப தசியத்து ணேரிழை யாள்பதஞ்
சொற்பதத் தாலுந் தொடரவொண் ணாச்சிவன்
கற்பனை யின்றிக் கலந்துநின் றானே"

என்பவைகளால் திருமந்திரம் இவற்றை விரித்துரைக்கும்.

பிரகிருதி தோற்றம்

"திகழ்பூன்ற சச்சிதா னந்தப் பிரமத்
திடத் திப்பிதனில் வெள்ளிதெரிவ தேபோல்
நிகழ்மூலம் பிரகிருதி யென்னுமோர் சத்தி
நேரிதன்பே ராதிபிர கிருதி யோடு

புகழ்மூலம் விந்து தத்துவ மாதிமூலம்
பொருமகங் காரமூலவங் காரந்தான்
மகிழ்இந்தியங் கால தத்துவ மவ்யக்த
மகாதத்துவ மாமெனும்பே ரனேகமாமே"

இதனையே, 'அகண்ட..........மூலப்பிரகிருதி யென்றொரு சத்தி யுண்டாயிற்று' என்றமை. இதற்கு மேற்சொன்னபடி மூலமெனவும் பிருகிருதி ஆதிபிரகிருதி யெனப் பலபெயர்க ளுண்டு. இது,

அகண்டம்:—காலத்தினாலும் தேசத்தினாலும் இடத்தினாலும் பொருளினாலும் வேறுபடாதிருத்தப் படுதலினாலே பிரமத்தை அகண்டமென்முர். அன்றி, பிரமம் உற்பத்தி நாசமின்றி எக்காலத்திலும் இருப்பதாலும் கடபடம்போல் ஓரிடத்து மாத்திரம் இல்லாமல் ஆகாசம்போன்று எல்லா விடங்களிலும் வியாபித்து இருப்பதாலும், கடமும் படமும் போன்று வேறுபட்டிராமல் மண் தனது காரியவடிவ கடத்துக்கு வேறுபட்டில்லாமை போன்று தமது விவத்த காரிய வடிவப் பொருளிற்கு வேறுபட்டிராமையாலும் அதற்குக் காலதேச வஸ்துக்களினாலே முடிவில்லையாம்.

பரிபூரணம்:—எங்ஙனம் ஒரு குடமான நீரினாலே நிரம்பப்படுகிறதோ அத்தன்மையொப்ப பரிபூரணத்துவமும் ஒன்றை ஒன்றால் நிரப்பப்படுவதே யாகும். ஆராய்ந்து பார்க்கின், தோலும் இரத்தமும் தசையும், நரம்பும் எலும்பும் மூளையும் ஆகிய ஷட்பாவ விகாரம் பொருந்திய தூலதேகமான அன்னமயத்தைப் பிராணாதியாகிய சமஷ்டி வாயு ஒன்றுடனே

வாக்காதி கன்மேந்திரியம் ஐந்துங் கூடிய பிராணமயத்தாலும், அப்பிராணமயத்தைப் புத்தி நீங்கலான மனமாதியாகிய சமஷ்டி அந்தக்கரணம் ஒன்றுடனே வாக்காதி கர்மேந்திரியம் ஐந்துங் கூடிய மனோமயத்தாலும், அம்மனோமயத்தை புத்தி ஒன்றுடனே சுரோத்திரேந்திரியங் கூடிய விஞ்ஞானமயத்தாலும், அவ்விஞ்ஞானமயத்தை, மனோமயமும் விஞ்ஞானமயமும் அஞ்ஞானத்தில் அழுந்திய காரண தேகமாகயிருத்தலாகிய ஆனந்தமயத்தாலும், அவ்வானந்த மயத்தை அவித்தையாலும், அதனை மாயையாலும், அம்மாயைப் பிரமத்தினாலும் நிரப்பப்பட்டு விளங்குகின்றமையாலே பிரம்மத்தைப் பூரணமென்றதாம். அன்றி, அது அணுவிற்கணுவாய் மகத்துக்கு மகத்தாய் நிற்பினும் போக்குவரவின்றி எங்கும் வியாபித்து ஒருகாலத்தும் இடைவிடாமல் இருக்குந்தன்மையதென்றுமாம். இதனை,

"இருலநிலனாய்த் தீயாகி நீருமாகி யியமான
னாயெறியுங் காற்றுமாகி
யருநிலைய திங்களாய் ஞாயிறாகி யாகாயமா
யட்டமூர்த்தி யாகி"

என்ற தேவாரத்தாண்டகத்தால் பரிபூரணஞ் சொல்லியதறிக.

பரிபூரணத்தை அறிவதெவ்வண்ணம் என்னில், இறைவனோ மலபரிபாகம் வாராத ஆன்மாக்களிடத்துப் பசுமரத்தில் தீப்போலப் பிரகாசத்தைக் கொடுக்காமல் இருப்பான். மலபரிபாகம் வந்த ஆன்மாக்களிடத்து உலர்ந்த மரத்தில் தீப்போலப் பிரகாசித்துக்கொண்டு மலநாசம் செய்து ஆன்மப் பிரகாசத்தை

யுண்டாக்கிக்கொண்டு விளங்குவானாதலின் பரிபூரணத்துவம் உறுதி.

சச்சிதானந்தம்:—சத்து = அறிவுடைய பொருள். சத்து=யாண்டுமுள்ளது. சத்து என்னினும் உள்ளது என்னினும் ஒன்றேயாம். உதாரணம்=அது படம். படம் என்னும் சொல்லும் அதன் தோற்றமும் பொருளும் உடன் நிகழ்வது. படமெனினும் ஆடையெனினும் அமைவதாம். படமென்பதற்குச் சொல்லும் தோற்றமும் பொருளும் என்கிற மூன்றும் உண்மையில் சத் எனப்படும் யாது சத்தோ அஃது முன்னும் பின்னும் முக்காலத்தும் நிகழ்பொருளாதல் வேண்டும்.

சித்தின் இலக்கணம்:—முக்காலத்தும் எல்லாவற்றையும் அறிவதாயும், அறியப்பட்டவற்றால் அறியப்படாததாயும் இருப்பதாம். சித்து=பிரகாசம்.

ஆனந்தம்:—முக்காலத்திலும் மிகுந்த பிரியத்திற்கு விஷயமாக விருக்கையினையே ஆனந்தம் என்றது. இங்கே சொல்லிய ஆனந்தமாவது, தண்ணீரிலும் அக்கினியிலும் இயல்பாக அமைந்துள்ள குளிர்ச்சி நெகிழ்ச்சி வெண்மையும், உஷ்ணம் பிரகாசம் சிகப்பு முதலியனவுமாம்போலக் கொள்ளுவது. இதனை, நித்தியமாயும் நிருபாதிகமாயும் நிரதிசயமாயும் இருக்கிற சுகம் எதுவோ அதுதான் ஆனந்தம் எனக்கொள்க.

சுத்தியில் ரசிதம்போல என்று சொன்னமை:—கிளிஞ்சலில் வெள்ளியைப்போலப் பிரபஞ்சமற்றதாகிய பொருளில்

பிரபஞ்சத்தைக் கற்பிக்கிறதுதான். நோக்கின், கிளிஞ்சலில் பின்புறத்தே நீல நிறங்கண்டும், முக்கோணங் கண்டும் சேய்மைக்கும் அண்மைக்கும் வேறுபடக்கண்டு, சத்தை அசத்தாகக் கண்டு தெளியாமல் நிற்றல். உதாரணமாகச் சத்தாயின் உள்ளதாக வேண்டும். இல்லதாயின் தோற்றுமற் போக வேண்டும். உளதாயின் பயன்படல் வேண்டும். இரண்டுமாகாமல், அது தோற்றுவதற்கு முன்பும், அழிவிற்குப் பின்பும் நில்லாமல் இடையிலே அவாந்தரமாகத் தோன்றுகின்றது. அதனையே அநிர்வசனீய மென்பது. அந்த அஞ்ஞானமே, அவித்தை, தமஸ், மோகம், மூலப்பகுதி, பிரதானம், குணசாம்மியம், அவ்வியக்தம், மாயையென்று பல பெயர்களுடன் விளங்குவது. இதனாலே, அபிமானம், ராகத்துவேஷாதிகள், கன்மம், சரீரஅபிமானம், சரீரம், துக்கம் முதலிய வருதலால் மித்தை எனவுஞ் சொல்லுவர். ஈண்டு காட்டிய அத்தியாரோபத்தாலும், அது, புருஷனிடத்துச் சாமர்த்தியரூப சத்திபோலப் பிரமத்தின்கண் அனுதி சித்தமாக விருப்பது. எல்லாம் நிகழ்வதற்குத் தானே முதற் காரணமாக நிற்பதனைக் குறித்தே, 'நிகழ்மூலப் பிரகிருதி' என்றார்.

மூலப் பகுதி: — காரணப் பகுதி. இருபத்துநான்காந் தத்துவமாயுள்ளது. இது அசுத்தமாயையினின்றுந் தோன்றி அசுத்தப் பிரபஞ்சத்திற்குக் காரணமாயிருப்பது. பிரபஞ்சம், சுத்தப் பிரபஞ்சம், மிச்சிரப் பிரபஞ்சம், அசுத்தப் பிரபஞ்சம் என்பனவாதி முப்பிரிவுடைத்து. மிச்சிரப் பிரபஞ்சம், சுத்தா

சுத்த மென்கிற இரண்டின் கலப்பு. இது, வெளுப்பு, சிகப்பு, கறுப்பு நூல்களால் திரிக்கப்பட்ட கயிறுபோலச் சத்துவ ரஜஸ் தமோகுண மென்பனவைகளுடன் கலப்புள்ளதாக விருத்தலின், ஒன்றொடொன்று மாறுபடுஞ் செய்கைநோக்கி, 'விகிர்தகுணம்' என்றார். இதனை,

"பந்தமாகியதோர் மூலப்பகுதியின் விகிர்ததத்வ
முந்திய சாத்துவீக முடனிரா சதந்தமந்தான்
சிந்தைசெய் காலைவெண்மை செந்நிற நீலமென்பர்
அந்தமின் மறைகடன்னை யாய்ந்தமே லவர்கண்மாதோ"

என்றார்.

மாயை முதற்காரணமாவது:—மாயா=சத்தி. யா= வியத்தி. அல்லது, மா=ஒடுங்குதல், யா=வருதல் எனவும் பொருள். எல்லாக் காரியங்களுந் தன்பால் வந்து ஒடுங்கு தற்குந் தங்கண் நின்று தோன்றற்குங் காரணமாய் நின்றது மாயை எனப்படும். ஆகையால், ஒன்றற்கொன்று நுண்ணி திற் செல்லுஞ் சூட்சுமங்கட்கு முடிவிடமாய் நின்ற சூட்சுமப் பொருள் யாது அதனை மாயை என்றலே பொருத்தமுடைய தெனவறிக. இதனை,

"மன்னுமதோ மாயைதனிலனந்த தேவரருளால்
வருங்கால நியதிகலைவித்தை யராகந்தான்
முன்னையக் கலையினுருத்திர னருளான்மூல
முக்குணங்கள் மூலமாமவ்யத்த மதனி
லுன்னுசித்தமதிற் புத்தியங்கார மதுதானுடன்
மூன்றாந் தைசதம் வைகரிபூதாதி
யென்னுமுதன் மனம்வாயிடைக் கருமேந்திரிய
மெழுங்கடையிற் சத்தாதியிற் பூதமெழுமே"

எனத் தத்துவப் பிரகாசத்தில் விரித்துரைத்திருப்பதும், இந் நூலாரும் தமது பாடலில், 'புகழ்மூலம்......பேரநேகமாமே' என்றதும் அறிக.

மாயை:—முதல்வனைப்போலவே நித்தியத் தன்மை யுடையதாம். இவனே,

"நித்யே காவ்யாபி........வராః"

"ப்ரளயேலீந.........துலாத்மகஸ்யாது"

"கலாதி க்ஷிதி.........பலாதிகம்"

"மாயாஜகத்............மீஸ்வரம்"

"தத்தேகம............ஹேதுநா"

"தேநோபாதா.........பிர்விநா"

"தத சேதந.........ஹ்ருதௌ"

"விவ்ருதௌ.........ஸித்தயே இதி"

என்கிற பௌஷ்கரமிருகேந்திராதி ஆகமவாக்கியங்கள் மாயையின் நித்தியத்வத்தும் சொல்லுதலறிக.

"நித்தியமாய்............செய்யுமன்றே"

என சிவஞான சித்தியாரிலும் வந்துள்ள காண்க.

அகமென்னும் சொல்லுக்குரிய பொருளாகித் தானே யாவையும் செய்கிறதாக நினைக்கும் நினைவினுக்குக் காரணமாகி நிற்பதும் மாயையின் செய்கையாதலறிக.

மாயையின் நிலையானது, சாவய மென்றும் அல்ல வென்றும், நிரயவய மென்றும் அஃதல்ல வென்றும், சாவய

நிரயவய மென்றும், பின்னம் அன்றி, அபின்னம் எனவும், அல்லது பின்னுபின்ன மென்றும் சொல்லுதல் கூடாது. ஏனெனில், மேலே சொல்லிய ஒவ்வொன்றும் ஒவ்வொரு பாதகத்தைப் பெற்றுள்ளபடியால் அவைகளை விடுத்து, அநிர் வசநீய மென்றே பேசுதல் தகுதியுடையதாம்.

மேலேசொன்ன மாயையானது, பிரளயம் மகாசுஷுப்தி என்னும் இருபெயரோடு, கருமவாசனையால் தன்னிடம் லயித் திருக்கும் ஜீவன்களைச் சிருஷ்டிகாலத்து ஜீவர்களது பரிபக்குவ நிலைக்குத் தகுந்தபடி தலையெடுக்கச் செய்து, கருமவாசனை யாலே மாயை, அவித்தை, தாமஸீ என மூன்றுவிதமாயிற்று. அவைகளில், மாயை என்பது சுத்தசத்துவ குணத்தை முக்கியமாக வுடையது. சிருஷ்டிக்கு முந்தியிருக்கிற பிரம்ம சைதன்னியமானது மாயையில் கண்ணாடி ஜலம் முதலிய வற்றினில் காணப்படுகிற நிழலைப்போலப் பிரதிபலித்ததாய்க் கொண்டு ஈசுவரனென்று பேசப்படுகின்றது. அவனுக்கு அவ்வியாகிருதன், அந்தர்யாமி என்ற பெயர்கள் வழங்கு கின்றன. அவனே ஜகத் சிருஷ்டிகர்த்தாவாகவும், பரிபூரண பிரம்ம சைதன்னிய ரூபத்தாலே, 'தாமஸி' என்றதில் அவச் சின்னனுய்க் கொண்டு ஜகத்திற்கு உபாதன காரணமாக விளங்குகின்றுன், தனது உபாதித் தலைமையால் தாமஸின் காரணமாக உபாதனகாரணமாகிறுன். தனது தலைமைக் காரணத்தால் நிமித்தகாரணமாகவும் ஆகிறுன். இதனையே,

"வீயதோர் பகுதிதன்னில் முதற்குண விகிர்தசத்வ
மாயகற்பனைக் கோவீச னரியகாரண சரீரம்

மாயைநல் வித்தையே சர்வஞ்ஞனினு பாதியென்ன
தூய பேரீரண்டாய்ச் சொல்லுவர் தூயர்மாதோ"

என்றார். அன்றி மீண்டும்,

"சுத்தசலந் தனின் மதியின்பிரதி பிம்பந்
தோற்றமெனெ முன்னுரைத்த மாயைதன்னில்
சத்துபிர பஞ்சலட்சணமதாக
நவில்பிரமச் சாயைபிறங் கிற்றதன்பேர்
நித்தியசர் வக்யனு மீசரன்று
ணிகளீசன் காரணமா மாயையின்பால்
தொந்த்வசத்து வதின்சத்து வங்கள்மூன்றும்
தொடருங்கால் மூவாதிற் றேன்றுமாதோ"

என்றார். இவைகளைக் குளகமெனக் கொள்க.

மேலே சொல்லிய பாடலின் விரிவைக்காண்க. முன் பாட்டில் வந்துள்ள, 'மாயைநல் வித்தையே ஸர்வஞ்ஞநுபாதி' என்றமை. சர்வக்ஞன் = எல்லாவற்றையும் அறிந்தவன். உபாதி = ஒரு வஸ்துவைப் பலவிதமாய்த் தோற்றுவிக்கிற தற்குச் சாதகமாயிருக்கிற தெதுவோ அதுதான். ஈண்டு, பிரம சைதன்னியத்தை ஈசுவரனாகத் தோற்றுவிக்கிறதற்குச் சாதகமாயிருக்கிற மாயை ஈசுவரோபாதி யென்றும், பிரம சைதன்னியத்தை ஜீவனாகத் தோற்றுவிக்கிறதற்குச் சாதக மான அவித்தை ஜீவோபாதி என்றும் சொல்லப்படும்.

சர்வஞ்ஞவுபாதி:—எல்லாவிதமான கலியாணகுண ஸம் ருத்தி யுடைமையினையும் பெற்றுள்ளமை கொண்டு ஒரு பொருளைப் பலவிதமாகப் பிரகாசிப்பிக்கும் தன்மையவாகிய, சர்வஞ்ஞத்துவம், திருத்தி, அநாதிபோதம், சுவதந்திரம்,

அனுத்தசத்தி, அனந்தசத்தி, நிராமயான்மா, விசுத்ததேகம் என்பனவாம். சிவபிரானுக்குச் சர்வஞ்ஞத்துவம் முதலிய எண்குணங்கள் உடைமை சொரூப இயல்பு எனப்படும் சிவத்துவமாம். இவ்வெண்குண சொரூப சிவத்துவப்பேறே முத்திதசையில் ஆன்மாவுக்கு ஆன்மலாபம் எனப்படும் சாயுஜ்ஜியப் பெரும்பேறும். சிவபிரான் எண்குணமுடையனாதல்,

"கோளில் பொறியிற் குணமிலவே யெண்குணத்தான்
றாளை வணங்காத் தலை"

என்கின்ற திருக்குறளிலும்,

"எட்டுவான் குணத்தீச னெம்மானை"

என்கிற திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரத்திலும்,

"இறையவனை மறையவனை யெண்குணத்தினானை"

என்கிற சுந்தரமூர்த்தி நாயனார் தேவாரம் திருக்கானாட்டு முள்ளூர் பதிகத்திலுங் கூறியனவறிக.

ஆயின், சிவபிரான் எண்குண சொரூபனாயின் அவன் றன்னை, "நிர்க்குணன்" "குணாதீதன்" என்று வேதாகமங்கள் ஓதுதல் பொருந்தாதால் எனில், வேதாகமங்கள் பரமான்மாவை, நிர்க்குணன், குணாதீதன் என்று சொன்னது, சாத்துவிக இராசத தாமதம் என்னும் மாயாகுணங்கள் இல்லாதவன் என்னுங் கருத்துப்பற்றி அல்லது முற்றறிவு முதலிய சிற்குணங்கள் இல்லாதவன் என்னும் கருத்துப்பற்றி அன்று ஆகலின் அது பொருந்துவதாம். மற்றுப் பொருந்துவது யாண்டையது என்க. இச் சிற்குணங்களும் இல்லா இயல்பே

அவனுக்குச் சொரூபமெனில், சத்தாகை சித்தாகை ஆனந்தச் சொரூபமாகையும் சர்வஞ்ஞத்துவம் முதலியவற்றை அகப் படுத்து நிற்கும் சிற்குணங்கள் என்பர் சிவஞானபோத மகாபாடியத்தில்.

சர்வேசுவரத்துவம்:—எல்லா ஆன்மாக்களையும் படைத் துத் தன்னைப்படைக்க ஒருவருமில்லாமையுமாம். தான் படைத்த ஆன்மாக்களுக்கு யாதொரு இடையூறுமில்லாமற் காத்தலுக்காகவே அணிமாவை முதலாக வுடைமையாகிய சர்வேசுரத்துவமுமாம்.

சற்குணஸம்பத்தாவது:—நிறைந்தஞானம், சக்தி, பலம், ஐசுவரியம், வீரியம், தேஜஸ் முதலியனவும், மற்றும் பலவு மாம்.

சர்வாந்தரியாமித்துவம்:—உடம்பினுள் இருந்து உயிர் அதனைக்கொண்டு தொழில் நடத்தல்போல, சீவான்மாவினுள் பரமான்மா இருந்துகொண்டு அதனைக்கொண்டு தொழில் செய்தற் றிறமையாம்.

சர்வகாரணத்துவம்:—தான் எல்லாவற்றிற்குங் காரண மாய்த் தனக்கு ஒரு காரணத்தைப் பெருதவன் என்றமை.

சர்வநியந்திரத்துவம்:—இவ்வுலகில் இருசுடர்தோற்றம் முதல், தேவர்கோனீறுக வுள்ளனவும், கடல்கள், மலைகள் முதலியனவும் தத்தம் நியதிகுன்றும விருந்து நடக்கச்செய்து விப்பிக்கும் கர்த்தாவாக விருக்குந்திறமை.

சர்வசக்தித்துவம்:—பிரமன் முதலான ஈசுவராதியர்களையும் விரித்து ஒடுக்கும் சக்தியையுடைமையினைச் சொல்லுவதாம்.

ஈசுவரகாரண சரீரமுடைமையாவது:—சர்வஞ்ஞனாகிய ஈசுவரன் மாயாலே சத்துடன் வியஷ்டிதேகத்தில் பிரவேசித்து அந்த மாயையினாலே தூலசூக்குமகாரணசரீரங்களையும் தான் என்கிற பாவனையினாலே கர்த்திருத்வ போக்த்ருத்வத்தை அடைந்தான். அடைந்தவன் சாக்கிர சுவப்ன சுழுத்தி மூர்ச்சை மரணம் என்னும் இவைகளோடு கூடினவனாய்த் துக்கத்தில் அழுந்தினவனாய் நீர் இறைக்கும் ஏற்றம்போலவும், குயவன் திகிரிபோலவும் நிற்கிற தன்மையினைச் சொல்லியது.

ஈண்டு கூறியதையே கந்தபுராணத்திலும், முற்றறிவுடைமை, வரம்பிலின்பமுடைமை, இயற்கையுணர்வுடைமை, தன்வயமுடைமை, வரம்பிலாற்றலுடைமை, குறைவிலாற்றலுடைமை என்பர். இவ்விறைமைக் குணங்கள் முறையே சர்வஜ்யதை திருப்தி என முன்னர்விரித்தனம். இவற்றினையே வேதாந்தநூலாரும் சர்வஜ்ஞத்துவம், சர்வேசுவரத்வம், சர்வகர்த்வம், சர்வாந்தர்யாமித்துவம், சர்வ கல்பிதத்துவம், சர்வ சக்தித்துவம் என்றும், தன் வயத்தனாதல், முதலிலனாதல், உடம்பிலனாதல், எல்லா நலமுளனாதல், எங்கும் வியாபகனாதல், எவற்றிற்குங் காரணனாதல் என்றும், ஞானம், வைராக்கியம், ஐசுவரியம், வீரியம், புகழ், திரு என்றுங் கூறப்படுகிற ஈசுவரன் முக்கிய குணமாதலானுமாமென்றார்.

ஈசுவரத்தோற்றங் கூறல்

"சுத்த சலந்தனின் மதியின் பிரதிபிம்பந், தோற்றலென முன்னுரைத்த மாயைதன்னில்..........மூவராதிற் றோன்று மாதோ" என்றது—இந்த மாயையினிடத்திலே நிர்மலஜலப்

பிரதிபிம்பம்போலப் பிரஹ்மம் சலட்சணமாகப் பிரதிபலிக்கும் என்றார் வசனத்தில், அதாவது—நிர்மலமான தண்ணீரில் பூரணமான சந்திரன் பிரகாசிக்குந் தன்மையினைப்போல் மாயையினிடத்தில் தன்னியல்பாளுகவே ஸர்வக்ஞனுகிய ஈசுவரன் பிரதிபலிப்பன் என்றார். 'மூவர் த்வந்துவ சத்துவங்கள் மூன்றுந் தொடருங்கால்' என்றது, அந்தச் சத்துவகுண மாயையினிடத்தில் சத்துவத்தில் சத்துவம் முதன்மையாக நிற்கும்போது விஷ்ணுவென்றும், சத்துவத்தில் ரஜசு முதன்மையாக நிற்கும்போது பிரமனென்றும், சத்துவத்தில் தமசு முதன்மையாக நிற்கும்போது ருத்திரனென்றும் மூவர் தோன்றினரென்றார்.

ஈசுவரன் சத்துவாதி குணங்களினல் மும்மூர்த்திகளாய் விளங்கலை இயம்புதல்.

"ஈசன்பாற் சத்துவத்திற் சத்துவந்தான்
இசையவரும் ஈண்டிந்த வுலகைக்காப்பன்
நேசன்பாற் சத்துவத்தில் ராஜசந்தான்
நேரவரும் பிரமனு லகைப்படைப்பன்
தேரன்பாற் சத்துவத்திற் றமதந்தான்
றிரியவரு முருத்திரனு லுலகழிப்பன்
பேசரிய பிரகிருதி முதற்குணத்தின்
பெருமைதனை இதுவரையும் பேசினேமே"

சத்துவத்தில் சத்துவம்:—இந்தக் குணம் ஈசுவரப் பிரதிபக்திக்குக் காரணமாக இருப்பது இதுவே முதற்குணமாகும். சத்துவத்தில் இராஜஸ குணமாவது — ஈசுவரனது பிரதிபிம்பத்துக்குக் காரணமான இரண்டாவது குணமாகும்.

சத்துவத்தில் தாமதம் பிரதிபிம்பத்திற்குக் காரணமான மூன்றுவது குணமாகும். இம்மூன்று குணத்தில் சிருஷ்டி திதி சங்காரம் என்கிற முத்தொழில்களுக்கும் தனித்தனியாக ஒவ்வொருவரைச் சிருஷ்டிமைசெய்து தொழில் நிறுவியதாம். இங்ஙனம் அளித்த தொழில்களில் சிருஷ்டியானது—பிரபஞ்சத்தை யுண்டாக்கலாம். திதி—பிரபஞ்சத்தைப் பாதுகாத்தல். சங்காரம்—சகல இந்திரியங்களுக்குங் கர்த்திருத்வ யோக்த்ருத்வ பாகியார்த்த ஞானம் எந்த வரையில் இருக்கின்றதோ அதனையும், இந்திரியங்களினுல் பாகியார்த்த ஞானம் வராமல் மனதே விஷயாகாரமாய் எந்தமட்டுந் தோன்றுகிறதோ அதனையுஞ் சங்காரஞ் செய்தல். முறையே ஈண்டு நியமிக்கப் பட்ட தொழில்களில் பிரமன் படைத்தலையும், விஷ்ணு படைத்தல் காத்தலையும், ருத்திரன் படைத்தல் காத்தல் சங்காரம் என்னும் மூன்றையும் கைக்கொண்டார்களென்பதாம். இவ்வாறு மூலப்பிரகிருதியின் சத்துவகுண கற்பனையைச் சொல்லி முடித்தார்.

ஜீவர்களின் தோற்றம்

"அந்தவவ் வியத்திரண்டாங் குணமதே யவித்தைசிவ
பந்தகா ரணசரீரம் பகர்கிறிநூல் சேர்ந்தாற்போல்
உந்தவே யுலகிலேயுற் பவித்தொன்றற் கொன்றுவ்வாத
வந்தமி லுருவம் வெவ்வேறுன பேதங்களாமே"

இனி, மூலப்பிரகிருதியின் இராசதகுணம் அநேகரூபமாய்ப் பிரிந்து அவித்தைகளென்றும் ஜீவகாரண சரீரங்கள் என்றும் ஒன்றற்கொன்றுஏற்றக்குறைச்சலாகச்சொல்லப்படும்.

அதாவது—இராஜோகுணத்திற்கு அவித்தைகளென்றும், ஜீவகாரண சரீரங்களென்றும் பெயர்.

அவித்தையாவது:—மூலப்பிரகிருதியின் ரஜோகுணமிகுதியால், அந்த அவித்தைகளிடத்தில் மலினசலப் பிரதிபிம்பம்போலப் பிரம சைதன்னியம் (ஜீவன்களின்) பிரதிபிம்பத்திற்குக் காரணமாகவிருப்பதால் அவித்தை என்றது. அவித்தையானது பலவிதமாயும் எண்ணத்தொலையாததாயுமிருக்கிறது. ஆகையால், அந்த அவித்தையில் பிரதிபலித்த சைதன்னிய சுவரூபிகளான ஜீவர்களும் எண்ணத்தொலையாதவர்களாய் இருக்கிறார்கள்.

ஜீவகாரணசரீரம்—ஜீவனது காரிய சரீரமான தூலசூக்குமம் விரித்தும் ஒடுக்கியும் வைத்துக்கொள்ள ஆற்றல்பெற்று விளங்குவது இவ்வவித்தையே காரணமாக இருத்தலின் ஜீவகாரண சரீரம் என்றதாம்.

ஒன்றற்கொன்று தாரதம்மிய மாதல்:—அதாவது—ஏற்றக்குறைச்சலாதல் சொல்லப்படுதல். இதனால் சீவர்கள் வேறு வேறு வகைப்பட்டுப் பேதமாகவே காணப்படுதலினால், சிகப்பு, கருப்பு, வெண்மை ஆகிய மூன்று நிறங்களுடன் கூடிய நிறங்களின் பிரிவுகளே கலந்து தோற்றமாவதுபோல ஜீவர்களிடத்தில் மூன்று ஒன்றாகக் கலந்து கலந்து பொலிந்து தோன்றாநிற்கும். இதனையே,

"சொல்லிய வவித்தை யென்னத் தொடரிராசத குணத்தில்
நல்லசாத் துவிதமாதி நல்குணஞ் செறிய வத்தால்

வல்லகாரியமாஞ்சீவர் மருவமுக் குணத்திற் றேன்றி
யெல்லையிற் பேதமாஞ ரென்பர்நூற் றெரிந்தமேலோர்''

என்றார். இங்ஙனம் பிரதிபலிக்கும் ஜீவத்தோற்றங்களின் பேதங்களாவன.

''கலங்கனீரதனிற் றேன்றுங் கலைமதி யொளியைப் போல
பலமுறு மவித்தை தன்னிற் பிரமத்தின் பிரதிபிம்பம்
இலகிடும் போது பேரோ விரிசிதா பாசசீவர்
நலமில் கிஞ்ஞரென்று நவிலுவர் நல்லோர் மாதோ''

என்றார். அந்த அவித்தைகளிடத்தில் மலின சலப்பிரதி பிம்பம்போலப் பிரம்ம சைதன்னியம் பிரதிபலிக்கும்.

மலின ஜலப்பிரதி பிம்பமாவது:—கலங்கிய நீரில் தோன்றுவனபோல அவித்தையினிடத்தில் பற்பல ஜீவர்கள் தோற்றுவித்தலை அத்தியாரோபஞ் செய்தார்.

கிஞ்சிக்ஞனன்:—கொஞ்சம் ஞானத்தை யுடையவன். முன்பின் ஒன்றையும் தெரிந்து கொள்ளாதவனுய்த் தேகம் முதலியவைகளில் நான் என்னும் அபிமானத்தையே மிகுதியும் உடையவ்வன். இங்ஙனம் பேரபிமானங்கொண்டு ஜீவிக்கின்றமையால் இவனைக் கிஞ்சிக்னன் என்றதாம்.

சிதாபாசன்:—சித்தைப்போலவே தோன்றுகின்றவன்; ஆயினும் அவன் சச்சிதானந்தலக்ஷணம் பொருந்தி இல்லாமையினுல்சிதாபாசன் எனப்பெயர் வந்தது. இவனே சாக்கிராவவஸ்தையில் தூலசரீரத்தில் அபிமானியாய் இருக்கிற சீவன், அவனை விசுவனென்றும், விவகாரிகனென்றும் சொல்லுவர்.

பிராஞ்ஞன்:—நன்ருக அறிகிறவன். இவன் சுழுத்தி அவஸ்தையில் காரணசரீரத்தில் அபிமானியாக இருக்கிறவன். இவனுக்குப் பாரமார்த்திகன்; அவிச்சின்னன் எனவும் சொல்லுவர். இவன் கரணேந்திரியங்கள் இல்லாமல் சுழுத்தி அவஸ்தையிலுள்ள பிரமானந்தத்தை அநுபவிப்பவன். இதனையே ராஜஸத்தில் சத்துவமென்பது. இதுவே ஜீவனது பிரதிபிம்பத்திற்கு முதற்குணமாக நிற்பது.

இந்த அவித்தைகளிடத்தில் ரஜஸில் சத்துவம் முன் சொன்ன வண்ணம் பிரதிபலிக்கையிற்ருன், தத்வஞானிக ளென்றும், ரஜஸில் ரஜஸு முதன்மையாகும்போது காமக் குரோத கர்ம நிஷ்டர்களென்றும் ரஜஸில் தமசு முதன்மை யாகும்போது சோம்பல் நித்திரை மயக்கங்களையுடைய சிதா பாசர்களெனவும் சொல்லுவர். இந்த ராஜஸகுணம் இரண்டா வது குணமாகும்.

தத்துவஞான நிஷ்டன்:—இது பிரமைக்கிய வாசகமென் பது. இத்தத்துவஞான நிஷ்டன் பிரமமே நான் என்றுன்னி சொரூபத்தில் அழுந்தியிருப்பவன். தன்மை = தத்துவம் என்னும் வடசொல்லின் மொழிபெயர்ப்பு; இதனுள் தத் என்னும் பகுதி தன் எனவும், துவம் என்னும் பண்பு விகுதி மை எனவும் மொழிபெயர்ந்து நிற்றலால், தத்துவ மெனப் பொருளுரைக்கப் பட்டது. தத்துவப்பொருள் = உண்மைப்பொருள். தத்துவஞான நிஷ்டன் = உண்மைப் பொருளை அறியும் ஞானநிஷ்டையில் இருக்கிறவன். இவன்

பெண்ணும் ஆணும் ராஜஸத்தில் சாத்துவிகம் முதிர்ச்சி யுடைய காலத்துத் தோன்றினவன்.

இவ்வாறு கூறியதின் உண்மைவிளக்கம் யாதோவெனில், முப்பத்தைந்தாகிய தத்துவங்களும் ஓரோர் அவஸ்தையில் நசித்துப் போதலின், அத்தத்துவங்களுக் கெல்லாம் மேலான தொரு தத்துவம் உண்டெனவும், அதுவே பரத்துவம். அதுவேதான் என்று அநுபவித்து நிற்றலினால் உண்டாகும் துவிதபாவமும், விசிஷ்டாத்துவித பாவமும் சிறிதும் இல்லா மல் அப்பிரதிபந்த அபரோக்ஷ சாக்ஷாத்காரமாயும், ஜீவஈசுவர ஜகத்தில் திருஷ்டாந்தங்களினால் சொல்லுகிறது வித்தைகளை யன்றி வேறில்லை எனவும், சின்மாத்திரமாகிய பிரமமே உண்மை எனவுங் கண்டு அறிதலேயாம்.

"காதல்சேர் ஆணும் பெண்ணும் கலவிகள் செய்யுங்காலம்
நீதிசே ராசதத்திற் சாந்த நிகழவக் கருவேஞானி
ஓதிய ரசசிலேரா சதமுனு கருவே காமி
சோதனை ரசசி லேதா மதமிசை கருவே சோம்பி" என்றார்.

இதுவே மூலப்பகுதியின் ரஜோகுண கற்பனை சொல்லி யது. கற்பனையாவது = ஆத்மாவினது சுவரூபஞான மில்லாமை யாலே உண்டாவது.

காமக்குரோத கன்ம நிஷ்டன்:–பாவபுண்ணிய கருமத்தில் அழுந்திக்கிடக்கிறவன். மாதாவும் பிதாவும் ராஜஸகுணத்தின் மிகுதியை வகித்துச் சேருங்காலத்திலே உண்டாகிய் கருவின் பாற்றோன்றி மேன்மேலும் கெடுதியினைக் கொடுக்கும் காமக் குரோதாதி குணத்தில் வீழ்ந்து செய்யவேண்டிய கருமங்

களைத் துறந்து நிற்பவன். இவனே சோம்பல் நித்திரை மயக்கங்களுக்கு இடமாகியவன். இவனே கொலை, களவு, கள், காமம், குருத்துரோகம், சிசுஹத்தி முதலிய பல பாதகங் களைச் செய்யும் குணத்தையுடையவன். கன்மநிஷ்டன் = ஸத்கர்மத்தைவிட்டு அஸத்கருமத்தில் ஆஸத்தியுள்ளவனாக விருத்தல்.

ஆவரணத்தின் தன்மை கூறல்

"பொங்கு மாயாவி நோதபூரண னருளினாலே
தங்குபூ வுயிர்கட் கெல்லாஞ் சகலபோ கமுமுண்டாக
மங்குதா மதகுணத்தில் வருகிருசத்தி தோன்று
மிங்கிதா வரணந்தோற்ற மீதிலாவரணஞ் சொல்வாம்"

ஈசுவரனது கிருபையால் தமோகுணத்தில் ஆவரணம் விக்ஷேபம் என இரண்டு சத்திகள் தோன்றின.

ஆவரண சத்தி:—ஈசுவரனையும் ஞானிகளையும் தவிர மற்றைச் சீவர்கள் அனைத்தையும் திரிபதார்த்த நிச்சயம் தெரிய வொட்டாமல் நாஸ்தி நபாதி என்னும் இருமுகத்தினால் மழைக்காலத்து அமாவாசை நிசியின் குமரியிருளைப்போல மறைந்து நிற்கும்.

விக்ஷேபசத்தி:—பிறவிமுதல் துணைக்காரணமாக விருந்து முன்னர் விடையஞானத்தை விளக்கிப் பின்னர் ஞானசாதன மாக விருந்து சொரூபஞானத்தை விளக்கிப் பின்பு ஞான சாதகமாக விருந்து சொரூபஞானத்தை விளக்கிவைத்து அதுவும் அந்தச் சொரூபஞானத்தில் லயமாகிவிடும்.

மேலே சொன்ன ஆவரணம், ஒருசமயம் சிதாத்மப் பிரசங்கம் நேர்ந்தவிடத்துப் பிரஹ்மம் இல்லை; இருந்தால் அது தோன்றுதா என்னும் இருவகையான சந்தேகம் கொள்ளுகிற அஞ்ஞான காரியமானதே யாகும். பிரமம் இல்லை என்பதற்கு நாஸ்தி என்று பெயர். இருந்தால் அது தோன்றுதா என்பதற்கு நபாதி என்று பெயர். இதுவே விளக்கம்.

மேலே சொன்ன விட்சேபம், அப்பால் நானே கர்மத்தைச் செய்பவன், நானே கர்மபலத்தை அநுபவிப்பவன் என்று எண்ணுவதே இதனது தோற்றமாகும். இது பிராந்தியென்றும், சோகமென்றும் சொல்லப்படும்.

"ஈசுவரன் றன்னையுந் தன்னை யெய்து
ஞானியையு மன்றி
பாசமாக் குவதற் கான பகர்நாஸ்தி
நபாதி யென்று
பேசிய சீவர்க் குள்ள பேரறி
விழக்கும் வண்ணம்
மாசில் லிரண்டறைதிக் கெல்லா மறையிருள்
மழைபோன் ஞடும்"

என்ற பாடலின் கருத்தும் அறிக.

ஆவரணம்=மறைத்தல் மூடல். விட்சேபம்=நினைத்தலும், தோற்றலுமாகும். ஆவரண சத்தியினுல் மறைக்கப்பட்ட சீவர்கள் 29 என்று கணக்குள்ள தத்துவங்களையும் ஒருமைப்பாடாக நினைத்து நான் என்று அபிமானத்தைக் கொண்டவர். இவ்வாறு அபிமானங் கொள்வதையே அகங்கார

கிரந்தி என்றும், சம்சாரபந்த மென்றும் சொல்லப்படும். ஒருமைப்பாடு=ஒற்றுமை.

தத்வபேதமாவன

மயிர், தோல், நரம்பு, தசை, எலும்பு, கொழுப்பு இந்த ஆறும் ஸ்தம்பம்போற் பிரத்தியக்ஷத்தில் ஸ்தூலமாக விளங்கும் ஆறும், ஞானேந்திரிய பஞ்சகமும், கன்மேந்திரிய பஞ்சகமும், பிராணாதி பஞ்சகமும், சித்தத்தோடுகூடின மனதும், ஆகாரத்துடன்கூடின புத்தியும், உபாதித்திரயத்தாலுண்டான வையுஞ் சேர்ந்த சரீரத்துவம்-20, அஞ்ஞானிகளிடத்தில் விருத்தியும், முமுட்சுக்களிடத்தில் சங்கோசமுமாகிய காரண சரீ ரமிரண்டும், மகாகாரண சரீரமாகிய சாக்ஷி யொன்றும், ஆகிய இவைகளினாலே இருபத்தெட்டாவது தத்துவத்தின் சாட்சியினால் அறிந்தபடியால், அனாத்மாக்கள் என்றும் சொல்லுவதற்கான சாக்ஷியான தன்னை ஆத்மா வென்றும், தன்னைக் காட்டிலும் அவ்விருபத்தெட்டு தத்துதங்களும் வெவ்வேறாக இருக்கிறபடியால் பேதமென்றும், சாக்ஷி வேறொன்று மில்லாமல் தானாகவே இருப்பதினால் அபேதமென்றும், இருபத்தெட்டும் அனாத, சடதுக்க மென்றும் தான் சச்சிதானந்த சொரூபமென்றும் எக்காலத்தும் யாவராலும் தன் சாக்ஷி என்கிற மனோதிடம் மாறாமல் இருப்பதே பேதமென்று தெரிந்து கொள்ளுதல்.

அகங்காரகிரந்தி:—இருபத்தேழு தத்துவங்களையும் கூட்டிக் குழப்பிக் கொண்டும், நான் என்கிற அகங்காரத்தை

வைத்துக் கொண்டும், சற்குருவின் கடாக்ஷமில்லாமல் தெளிய முடியாததாயு மிருக்கிற அகங்காரம் என்கிறதோர் முடிபாம்.

சம்ஸாரபந்தம்:—பிறப்பிறப்பாகிய பெருங்கடல்; அதனுள் சிக்குண்டுழல்வதே பந்தமாம். பந்தம் = கட்டு.

சற்குரு:—சத்ரூபத்தை உள்ளவாறே மனதில் பதியும் வண்ணம் போதிக்கிறபடியாலும், சாஸ்திரங்களிலுள்ள அர்த்தங்களை விளக்கமாக வெடுத்துப் போதிக்கிறபடியாலும், பிருதிவியாதி தத்துவங்களை நிஷேதித்துப் பாதத்துவத்தைத் தெரிசிப்பிக்கின்ற படியாலும், விவேகவாயிலாகச் சமதமாதி குணங்களை உண்டுபண்ணுகிற படியாலும், ஜீவப்பிரஹ்ம ஐக்கியத்தைப் போதிக்கிறபடியாலும், ஜீவப்பிரஹ்ம ஐக்கியத்திற்றோன்றிய சம்சயத்தை ஒழிக்கும் வாயிலாகச் சர்வதுக்க நிவர்த்தி பரமானந்தப் பிராப்தி வடிவ நித்திய முத்தியை அருள்பவராதலாலும் இங்ஙனம் கூறப்பட்டார். இதனை,

"சீராரு ஞானத்தி னிச்சைசெலச் செல்ல
வாராத காதற் குருபரன் பாலாகச்
சாராத சாதக நான்குந்தன் பாலுற்றோ
ளுராயு ஞானத்த னுமடி வைக்கவே"

"சற்குணம் வாய்மை தயாவிவே கந்தன்மை
சற்குரு பாதமே சாயைபோ னீங்காமை
சிற்பர ஞானந் தெளியத் தெளிவோர்தம்
அற்புத மேதோன்ற லாகுஞ்சற் சீடரே"

எனத் திருமந்திரங்காண்க.

குருவென்னும் சப்தத்தின் பொருள் அஞ்ஞானத்தைப் போக்கடிப்பவன் என்பது பொருள். அன்றி, குரு என்கிற இரண்டு எழுத்தில், கு-என்னும் எழுத்து சுத்த நிர்க்குண சொரூபமும், ரு-என்னும் எழுத்து கேவல நிராகாரமும் ஆகின்றனவாதலால் சுத்தநிர்க்குண நிராகார பரப்பிரம்மத்தை இது வென்னும்படி போதினவன் என்றும் பொருளாம்.

இந்த ஆவரணம் நீங்கி இருபத்தொன்பது தத்துவத்திற்கும் ஒன்றற்கொன்று பேதம் தெரிகின்றதே முத்தி என்றது—நான் பிரம்மமென்னும் ஞானம் சீவனுக்கே அல்லாமல் ஜீவ சாட்சியான கூடஸ்தனுக்கு உண்டாதல் இல்லை. ஆயினும் சீவன் தனது சாக்ஷியான கூடஸ்தனையும் தானாகவே அறிகிறான். அந்தக் கூடஸ்தன் நான் என்னும் சொல்லால் சொல்லப்படுதலால், அதுவே நான் என்னும் சொல்லிற்குப் பொருளாதல் அறிக. உதாரணமாக, கடாகாசத்துக்கும் மகாகாசத்திற்கும் எப்போதும் வேற்றுமை இருப்பதுபோல நான் என்னும் சப்தத்தில் விளங்குகின்ற கூடஸ்தனுக்கும் பிரம்மத்திற்கும் எப்போதும் அபேதம் இருக்கிறது. இக்காரணத்தால் கூடஸ்தனுக்குப் பிரம்மத்தோடு முக்கிய சமானாதிகரணியமுண்டு. எந்த வஸ்துவிற்கு எந்த வஸ்துவினோடு எப்போதும் வேற்றுமையுளதோ அந்த வஸ்துவிற்கு அதனுடன் முக்கிய சமானாதிகரணியம் சொல்லப்படுகிறது. கடாகாசத்துக்கு மகாகாசத்துடன் எப்போதும் வேற்றுமை இருப்பதுபோலக் கூடஸ்தனுக்குப் பிரமத்துடன் எப்போதும் வேற்றுமை இருத்தலால் நான் என்னும் சப்தத்தில் விளங்கு

கின்ற கூடஸ்தனுக்கும் எப்போதும் பிரமத்தோடு அபேதமுண்டு. நான் என்கிற சப்தத்தில் விளங்கும் சீவனுக்குப் பிரமத்துடன் தன் சொரூபத்தைப் பொய் என நிச்சயித்தலால் அபேதம் உண்டாகின்றது. பிரதிபிம்பலக்ஷணமுகேந நான் என்கிற சப்தத்தில் விளங்கும் சீவன் பிரமமேயாகும். ஆகவே, சீவனுக்கு நான் பிரம்மம் என்றுண்டாகும் ஞானம் பிராந்தியன்று. அது உண்மை. உண்மையாகவே, நான் பிரம்மம் என்கிற ஞானத்தினாலேயே சீவனுக்கு முத்தியுண்டாமென்பதையே ஈண்டு கூறியதாகும்.

"எங்குமாம் பிரமத்திற்கு மிசைபுற விகாரங்கட்கும்
பொங்கு கூடஸ்த னுக்கும்புகல விகாரங்கட்கும்
தங்கிய பேதமேதும் தான்தெரி யாதுமூடி
இங்கது பவமுண்டாக்கு மினிவருதோற்றஞ் சொல்வாம்"

என்றார்.

விட்சேபத்தின் தன்மையைக் கூறல்

பின்னம், அபின்னம், பின்னாபின்னம், சத்து, அசத்து, சதசத்து, சாவயம், நிரவயம், சாவயநிரவயம் என்பனவாகாமல் அநிர்வசநீயமாய்ப் பிரமத்தின்கண் கயிற்றினிடம் அரவாதற்குரிய சத்திபோன்றிருப்பது மாயையாம். ஆவரண விட்சேப சத்திகளையுடைய அநாதிவியாவகாரிக மாயை என்பது அதன் இலக்ஷணம்.

எச்சமயத்து ஈசுவரன் ஜீவர்களுக்குக் கன்மபலத்தைக் கொடுக்க எதிர்முகமாகின்றாரோ அச்சமயத்துச் சிருஷ்டியுண்டாகின்றது. ஈசுவரன் சீவர்களது கன்மத்தை அனுசரித்து

உயர்ந்த அல்லது தாழ்ந்த போகங்களை யவர்கள் அனுபவிக்குமாறு சிருஷ்டி பண்ணுமிடத்து மாயையின் விட்சேபசத்தியினின்று சத்தகுணத்தோடு கூடிய சூக்கும ஆகாசமும், அவ்வாகாசத்தினின்று பரிசகுணத்தோடு கூடிய சூக்கும வாயுவும், அவ்வாயுவினின்று ரூபகுணத்தோடு கூடிய சூக்கும தேயுவும், அத்தேயுவினின்று ரசகுணத்தோடு கூடிய சூக்கும அப்புவும், அவ்வப்புவினின்று கந்தகுணத்தோடு கூடிய சூக்குமப் பிருதிவியு முண்டாயின. இந்தச் சூட்சும பஞ்சபூதத்திற்குக் காரணமாக விருக்கிற விட்சேபசத்தியினிடத்திலே தாமதத்தில் சத்துவம், தாமத்தில் இராசதம், தாமதத்தில் தாமதமென்று அற்பங் கருவிருந்தபடியினாலே, அதன் காரியமான இந்தத் தன்மாத்திரைகளான பஞ்சபூதங்களும் முக்குணத்துடனே பிறந்தன. இவற்றையே அபஞ்சீகிருத பூதங்களென்றும், சூக்கும பூதங்களென்றும், முக்குண பூதங்களென்றும் சொல்லுவர் சாஸ்திரம் அறிந்தவர்.

சத்ததன்மாத்திரை:—இல்லாததை யுண்டுபண்ணத்தக்கதும், முடிவில் முத்திக்கு வழிகாட்டுவதுமான விட்சேபசத்தியினிடத்தில் முக்குணத்துடன் சேர்ந்த சப்தஸ்பரிசரஸரூப கந்தவத்தான பஞ்சபூதங்கள் ஐந்தும் மிகவும் நொய்யதாகவும், போகசாதனங்களுக்கு இருப்பிடமான சரீரத்துக்குக் காரணமாகவும் இருந்து உதவுவது தன்மாத்திரை. சத்தம்=ஓசை. தன்மாத்திரை=அற்பபூதம். இவைகள் ஒன்றுடன் ஒன்று சேராதிருத்தல். இவைகள் பகவத் கடாக்ஷத்தினாலே மூலப்பகுதியின் தமோகுணத்தில் பிறந்தவைகள். இத்தன்மாத்

திரைகள் ஐந்தும் சுரோத்திராதிகளுக்கு விஷயமாக இருக்கும். தமோகுணமோ, பந்தம், கோள், அகௌரவம், நித்திரை, மதம், மச்சரம், அதன்மம், அறியாமை, சோம்பல் முதலிய வற்றைத் தொழிலாகக்கொண்டவை.

சூக்குமபூதங்கள்:—சூக்குமபூதங்கள் என்பது கட்புலனுக்குக் காணமுடியாத தன்மையதாய்ப் பிருதிவினிடத்துத் தூசியாகவும், அப்புவினிடத்து நயப்பாகவும், தேயுவினிடத்து வெப்பமாகவும், வாயுவினிடத்துப் பலக் குறைவாகவும்; இவைகள் நான்கும் ஆகாயத்தின் சம்பந்தமுடைத்தாகி, அந்த ஆகாயம் சப்தரூபமாக இருத்தல்பற்றியே இவைகளைந்தையும் சூக்குமபூதங்களென்றமை. இவ்வைந்தும் தனித் தனியாகக் காணுமிடத்து மிகவும் அற்பமாய் நிற்பதனாலே இவைகளை அற்பபூதங்கள் என்றதாம். இவ்வைந்து பூதங்களும் பிரித்துக் கூட்டாதபடியால் அபஞ்சிகிருத பூதங்களென்றதாம். இப்பூதங்களும் அந்த விட்சேபசத்திக்குண்டான முக்குணங்களுடனே சம்பந்தமுடைமையாலே இவைகட்கு முக்குணபூதங்கள் என்று பெயர். இவ்விக்ஷேபசத்தியானது ஸாக்ஷாத் ஈசுவரனது சங்கற்பமாயே இருப்பதால், அது செய்கிற ஒவ்வொரு காரியமும் ஈசுவரனுக்குப் புறனாகியதல்லவாம். ஆராயுமிடத்து இப்பூதங்களும் சூக்குமபூதங்களுக்குக் காரணமாக இருத்தல் அவ்விக்ஷேபசத்தியினுடைய நினைவேயாகுமென்பதில் ஒருவிதமான தடையுமில்லையாமென்று கொள்ளலாம். ஞானக்கினியைப் பொலிவுதர விடாமல் மக்கினத்தைக் கொடுத்துக்கொண்டிருக்கிற ஜலரூபமான

அஞ்ஞானத்தினிடமாய்ப் பிரணவமாகிய விதனைப் பிரமன் மகிமைபடுத்திய கணத்தே விட்சேபசத்திதோன்ற ஓர் கருவாய்த் திரண்டது. அந்தக் கருவானது பூரணத்தன்மை அடைந்தமையினை அறிந்து இரகஸியத்தை வெளியாக்கிய விடத்து அது சாத்வீக ராஜஸ தாமதமென்கிற குணங்களுந் தோன்றக்கெடாத சூட்சும பஞ்சபூதங்களும் முறையே அச்சத்தியினிடத்திலிருந்து பரிணமித்தனவாம்.

"ஏமமா யாவி னோத வீசனு ரருளி னாலே
பூமலி யுயிர்கட் கெல்லாம் போகசா தனமுண் டாகத்
தாமத குணமி ரண்டு சத்தியாய்ப் பிரிந்து தோன்றும்
வீமமா மூட லென்றும் விவிதமாந் தோற்ற மென்றும்."

அந்தக்கரணத்தின் தன்மையைக்கூறல்

சூட்சுமசரீரம்:—இது பதினேழு அவயவங்களுடன் கூடியது. இச்சரீரமோ ராகத்துவேஷாதிகாரமாய் விருத்தியடைந்து சங்கோசமடைகின்றது. இச் சூட்சுமசரீரமோ அஞ்ஞானிகளிடம் விருத்தியும், முமுக்ஷுக்களிடத்தில் சங்கோசமுங் காணப்படுகின்றது. இது ஞானேந்திரிய பஞ்சகமும், கன்மேந்திரிய பஞ்சகமும், பிராணாதிபஞ்சகமும், சித்தத்தோடுகூடிய மனதும், ஆங்காரத்துடன்கூடின புத்தியுமாகி நிற்பது. இவற்றின் சேர்க்கையாலுண்டான சரீரத்தைச் சரீரமென்பதேன் என்னில்,

"பஞ்சீக்ருத மஹாபூத ஸம்பவம் கர்ம ஸஞ்சிதம்
ஶரீரம் ஸுகதுக்காநாம் போகாயதந முச்யதே"

என்கிற ஆத்மபோதப்படி, இச்சரீரம் பஞ்சபூதங்களுடைய புணர்ச்சியினுல் ஏற்படுத்தப்பட்டதாய்ச் சுகதுக்கங்களுக்கு இடமாய் அநுபவிக்க இருப்பதுவே சரீரமாம். இச் சூட்சும தேகத்தினையே,

"புத்தி கர்மேந்த்ரிய ப்ராண பஞ்சகைர்மந ஸாதியா
ஶரீரம் ஸப்ததஶபி ஸூக்ஷ்மம் தல்லிங்க முச்யதே"

என்று சாரீரகோபநிஷத்தில் சேர்க்கை சொல்லி இதனையே லிங்கதேகமெனவுஞ் சொல்லுவர்.

"தோற்றமாஞ் சத்தி தன்னிற் சொல்லிய விண்ணும் விண்ணிற்
காற்றதாங் காற்றிற் றீயாங் கனலினீர் நீரின் மண்ணும்
போற்றுமிவ் வைந்து நொய்ய பூதங்க ளென்று பேராம்
சாற்றுமற் றிவற்றிற் போக சாதன தநுவுண்டாகும்."

அந்தக்கரணம்:—இது, உள்ளம் மனம் புத்தி சித்தம் அகங்காரமென இவ்வைந்துடன் கூடியது. இவ்வைந்தும் முறையே சகல பூதங்களுக்கும் இடங்கொடுத்தலும், விஷயாதிகளைத் தேடிக்கொண்டு அலைதலும், ஒவ்வொரு பதார்த்தங்களையும் செவ்வனே விளக்கிக் காட்டுதலும், விஷயாதிகளில் வலித்துச் சென்று நானென்று பேரபிமானத்தால் நின்றுழலுதல் முதலியவான தொழில்களையுடையனவாகுதலுமாம். இந்த அந்தக்கரணங்களுக்கு அதிதேவதைகள் முறையே யாவ ரென்னில், சந்திரன், சதுர்முகன், ருத்திரன், விஷ்ணு, இவர்களே க்ஷேத்திரக்ஞர்களாக விருந்துகொண்டு புருவம் மத்திகண்டம் இருதயம் நாபி மூலம் இவைகளைத் தாமிருக்கும் இடத்திலிருந்தே ஒளிசெய்துகொண்டு அநேக விதமான

பரிணமத்துடன் விளங்கும் திரவியபோக்கியமான உருவமே அந்தக்கரணமாகும் என்று அறிக.

காரணசரீரம்:—சூக்ஷ்மகாரண சரீரங்களான விருத்திகளினது விகாசசங்கோசாதிகள் எங்கே காணப்படுவதென்னில், அஞ்ஞானிகளிடத்தில் விருத்தியும், முமுக்ஷுக்களிடத்தில் சங்கோசமுமாகித் தென்படுகின்றகாரணத்தாலே சரீரமென்று பெயர் வந்தது. இக்காரணசரீர முண்டென்றெப்படி யறிகிறதென்னில், காரியமான ஸ்தூல சூட்சுமமாகிய இரண்டு சரீரங்கள் காணப்படுகிறபடியால், இவைகளுக்குக் காரணமொன்றுண்டென்று யுத்திபண்ணவேண்டியதாயிற்று. உதாரணமாக, காரியமான புகையால் காரணமான அக்கினியுண்டென்று யூகித்து அறிவதுபோலக் காரியமான ஸ்தூலசூட்சும சரீரங்களினுற் காரணமான சரீரமுண்டென்று யூகித்து அறிந்துகொள்ளலாம். அந்தக்கரணத்தில் ஒன்று பற்றுதலும், மற்றொன்று நிச்சயித்தலும், ஒன்று சிந்தித்தலும், மற்றொன்று கொண்டெழுப்புதலுமாகிய தொழில்களைத் தம்மிடம் கொண்டுள்ளனவாம். இதற்கே தேகமென்றும் பெயர் வழங்குதல் காரணப்பெயரவாய் நிற்றலறிக; எங்ஙனமெனில், தகிக்கப்படுந் தொழில்பற்றித் தேகம் என்றதாம். பூதாக்கினியாலே தூலசரீரமும், ராகத்துவேஷாதிகளினலே சூக்ஷுமதேகமும் ஞானத்தால் காரணதேகமும் தகிக்கப்படுவதாகையால் தேகமெனப் பெயரெனக்கொள்க. சூட்சுமசரீரமாகிய இதற்கே இலிங்கசரீரமென்றும் பெயருண்டு; முன்னர் கூறிய ஸ்லோகத்தில்,

"ஸ்ஸூக்ஷ்மம் தல்லிங்க முச்யதே"

என்றமையும் காண்க.

ஞானேந்திரியம்:—சோத்திரியம், தொக்கு, சட்சு, சிங்குவை, ஆக்கிராணம் என்பனவாம். முறையே இவைகள், செவி, தோல், கண், நாக்கு, நாசி என்பன. இவைகளுள், செவியானது ஆகாயத்தின் சத்துவகுணத்தின் இரண்டாவது பிரிவில் உண்டாயினமையால், ஆகாயத்தின் குணமாகிய சப்தத்தை மட்டும் அறிந்து கொள்ளுந் திறமையதாம். துவக்கு, வாயுவின் சத்துவகுணத்தின் இரண்டாவது பகுதியினிடத்து உண்டான படியால், வாயுவினது குணமாகிய பரிசத்தன்மையினை மட்டும் அறிந்து கொள்ளும் ஆற்றலுடையதாம். சட்சுவானது—அக்கினியில் சத்துவகுணத்தின் இரண்டாம் பகுதியில் உண்டானபடியால் அக்கினியினது குணமாகிய ரூபத்தன்மையை மட்டும் அறியும் ஆற்றலுடையதாம். சிங்குவை—அப்புவின் சத்துவகுணத்தின் இரண்டாம் பகுதியில் உண்டானபடியால் அப்புவின் குணமாகிய ரஸத்தை மட்டும் அறியும் ஆற்றலுடையதாம். ஆக்கிராணமானது—பிருதிவியின் சத்துவகுணத்தின் இரண்டாம் பகுதியின் உண்டாயினமையால், அது அப்பிருதிவியின் குணமாகிய கந்தத்தை மட்டும் அறியும் ஆற்றலுடையதாம்.

இவைகள் ஐந்தும் ஒன்றுடன் ஒன்று கூடாதபடியினுல், ஒன்று மற்றொன்றின் குணத்தை அறிந்து கொள்ளுதல் முடியாது. அந்தக்கரணத்தில் ஐந்து தன்மாத்திரைகளும் ஒன்றாய்ச் சேர்ந்திருப்பது கொண்டு, அது ஐந்தாகிய இந்திரி

யங்களாலும் ஐந்து விஷயத்தையும் நன்ருக அறியும். தவம், சமம், கல்வி, சௌரியம், பொறுமை, கிருபை, சந்தோஷம், அறிவு, அடக்கம் முதலியவற்றி னிடமாகவுடைய சத்துவ குணத்தில் உண்டான அந்தக்கரண மைந்தும், ஞானேந்திரியங்களான ஐந்தும் ஆகியவை பத்தும் சாத்வீக அம்சமாயின படியால் இவைகள் ஞானத்திற்குச் சாதகமாயின.

இவைகளின் துணையான சாத்வீகஞானத்தைச் சம்பாதித்துக் கொள்ளுதல் வேண்டும். இவைகளைத் தான்தோன்றியாகவிடில் ஒருகாலும் ஞானபாகத்தை அடைந்து உய்யலாகாதென்பது வெளிப்படை. இவற்றினுக்கு அதிதேவதைகள் முறையே, திக்கு, வாயு, சூரியன், வருணன், அசுவினி முதலியவர்களாம். இவைகள் ஒவ்வொன்றும், காது கேட்டலாகிய தொழிலையும், தேகம் பரிசித்தலாகிய தொழிலையும், கண் காணலாகிய தொழிலையும், நாக்கு ருசித்தலாகிய தொழிலையும், மூக்கு முகர்தலாகிய தொழிலையும் கொண்டு விளங்குவன.

சத்துவ ரஜஸ் தமோகுணங்களுக்குள்ளே பரிசுத்தத்தினாலே ஸ்படிகம்போல் பிரகாசிக்கிறதாயும் சாந்தமாயுமிருக்கிற சத்துவகுணமானது சுகத்தினுடைய சம்பந்தத்தினாலேயும் ஞானத்தினுடைய சம்பந்தத்தினாலேயும் பிரமத்தைப் பந்திக்கின்றது என்றறிக.

பிராணாதி வாயுவின் தன்மையைக் கூறல்

பஞ்சவாயுக்கள்:—வியானன், பிராணன், அபானன், சமானன், உதானன் என்பன. இவைகள் ஐந்தும் பஞ்ச

பூதத்தின் ரஜோகுணத்தின் முதற்பகுதியிலிருந்து உண்டானவை. இதனையே சமஷ்டி என்பர். சமஷ்டி = சேர்க்கை.

பஞ்சவாயுக்களில் முதலாவதான பிராணவாயுவானது மூலாதாரத்தில் தோன்றி இடை பிங்கலையால் ஏறிக் கபாலத் தளவுஞ் சென்று நாசியிலே பன்னிரண்டு அங்குலம் புறப்பட்டு நாலங்குலம் வெளியே சென்று எட்டங்குலம் உள்ளே அடங்கும். இங்ஙனம் ஒரு நாளைக்கு இருபத்தோராயிரத்து அறுநூறு சுவாசம் நடக்கும். இதிலே ஏழாயிரத்து இருநூறு வெளியே செல்லும். பதினாலாயிரத்து நானூறு உள்ளே அடங்கும். இவ்வாறு உள்ளே பிரவேசித்தலையும், வெளியே புறப்படுதலையும் உச்சுவாச நிச்சுவாச மென்பர். இப்பிராண வாயுவின் சஞ்சார அளவினையே கணக்கிடுவான் வேண்டி, உட்காருகையில் பன்னிரண்டங்குலமும், நடக்கையில் பதினாறு அங்குலமும், நித்திரை பண்ணுகையில் நாற்பது அங்குலமும், புணர்ச்சியில் அறுபத்துநான்கு அங்குலமுமென வரையறுத் தனர். இப்படிப் பிராணவாயுவை வெளியே போகவிடாமல் தடுத்து, சுழுமுனை மார்க்கத்திலே பிராணவாயுவைச் சலன மறத்தலே யோகமாகும்.

யோகம்:—கரணங்களைச் சிவார்ப்பிதம் செய்தல். அதாவது—அகத்தொழின் மாத்திரையானே முதல்வனுடைய அருவத்திருமேனியை நோக்கிச் செய்யும் வழிபாடு.

ஞானயோகம்:—பரத்தின் நிலைதெளிதல். அன்றி, அறிவென்னும் மயிற்பாலத்தின் வழியாய் விஷயங்க ளென்னும் நெருப்பாற்றைக் கடந்து நிற்பதேயாம்.

வியானுதி முதலிய வாயுக்கள் அப்பியந்தர வாயுக்கள். நாகனுதி உபவாயுக்கள். கன்மேந்திரியத்தைத் தொழிற் படுத்துவது. சீவசம்பந்தமான அந்தர்யாமி, மகாப்பிராணன் முதலியனவு முண்டு.

கன்மேந்திரியம்:—இது புறக்கரணமாக விருப்பது. வாக்கு, பாணி, பாதம், பாயுரு, உபத்த மென்பன. விஷய ஞான முண்டாவதற்கும் கிரியையு முண்டாக்குவதற்கும் இவைகள் சாதனங்களாக விருப்பது. இது, சரீரத்தில் உள்ளனவாய் மற்றை இந்திரிய கரணங்களுடன் வெளிப் பட்டுத் தோன்றுமல்கூடி வசனித்தலாதித் தொழிலியற்று வதற்குச் சாதனமாயிருப்பது. இவைகள் பூதக்கலப்பால் அசுத்தமும், தன்னையுடையவனை ஓயாது விஷயாதிகளைக் காண்டலாதி வாயிலாகத் துக்கத்தை யுண்டுபண்ணுவதால் துக்கமும், படைப்புக்காலத்தில் உற்பத்தியையும் சம்ஹார காலத்தில் நாசத்தையும் அடைதலால் அநித்தியமுமாம். இது சூட்சும பஞ்சபூத ரஜோகுண வியஷ்டியிலுண்டானது.

இவைகள் ஒவ்வொன்றும் ஒன்றன்தொழிலை ஒன்று செய்யாமல் தம்தம் தொழிலையே செய்வது. பஞ்சவாயுக்கள் சமஷ்டி. கன்மேந்திரியம் தனித்தனி வியஷ்டி. நோக்கின், அந்தக்கரணங்கள் ஐந்தும் சமஷ்டியாம். ஞானேந்திரியங்கள் ஐந்தும் தனித்தனி வியஷ்டி. இவ்விதம் சமஷ்டியாகவும், வியஷ்டியாகவுஞ் சொன்ன இருபது தத்துவமும் பஞ்ச பூதங் களினுடைய சாத்மீக ரஜோகுணத்தின்சேர்க்கையும் சேர்க்கை யற்றதுமான சூக்கும சரீரமாகும்.

இக்கருமேந்திரியங்களுக்கு அதிதேவதைகள் முறையே விசுவயோனிமுதல் பிரஜாபதி ஈறுகக் கீதையில் சொல்லி யுள்ளமை அறிக.

சூட்சுமசரீரம்:—அருவுடல். இது ஞானேந்திரிய கருமேந்திரியங்கள் (பத்து) பிராணன் ஐந்து, மனம், புத்தி இரண்டு. இந்தப் பதினேழுகளுடன் கூடியது. இதனைச் சூட்சும தேகம் அல்லது லிங்கதேகம் என்று சொல்லப் படுகிறது. இதனை,

"கொள்ளடா ஞானவிந் திரியமைந்துங் கூடிநின்ற
கன்மவிந் திரிய மைந்துந்
தள்ளடா பிராணுதி வாயுவைந்துஞ் சார்வான
மனம் புத்தித் தானிரண்டும்
விள்ளடா பதினேழு தத்துவங்கள் விர்த்தியென்னுஞ்
சூட்சுமமா மிரண்ய கர்ப்பந்
துள்ளடா வபிமானி தைசதன்முன் சொப்பன
வவத்தையெனச் சொல்லு நாலே"

என்று புசுண்டோபநிடதம் சொல்லும்.

இவ்வுடம்பு பத்துவகை இந்திரிய உணர்வோடும், ஐந்து வகை வாயுக்களுடனும் சேர்ந்து நல்வினை தீவினைகளைச்செய்ய சங்கற்பிக்கும்.

இச்சூட்சும சரீரம்தான் பிராணி என்னும் சப்தத்தின் பொருளாகும். அது எவ்வாறென்னில், பிராணிசப்தத்திற்கு ஆத்மா என்றே பொருள். அவ்வாத்மாவுக்கே காரணசரீர மென்று பேருண்டாகிய அஞ்ஞானத்தில் வந்த சூட்சுமசரீரம்

அத்தியாசத்தின் முகத்தால் அனந்தமான தூலசரீரங்கள் வருகிறதும் போகிறதுமாகவும், அத்தூலசரீரத்தின் இயல்பாகிய ஜனன மரணங்கள் பிரசித்தமானவைபோலத் தோற்றப்படுகிறது. அங்ஙனம் காணப்படினும் அதற்கெதிரான ஆத்மா அந்தத்தூலத்தின் தோற்றம்போல் தோற்றினும், அஞ்ஞானத்தினுல் வரப்பட்ட சூட்சுமசரீரத்தின்வழியே ஆத்மாவுக்குப் பல்வகைத் தூலதேகங்கள் வருவது போவதுபோல மோகத்தால் தோற்றப்படுகிறது. சூட்சுமசரீரத்திற்குப் பிறப்பிறப்பில்லை. ஆகையால் சூட்சுமசரீரமும் காரண சரீரமும் ஒன்றே எனக் கொள்க.

"அழுக்கொடு பற்றுஞ் சீவர்க் கதுவேயா நந்த கோசம்
சுழுத்திகா ரணச ரீரஞ் சொன்னதிம் மட்டு மோக
முழுக்குணத் திரண்டால் வந்தமூலவா ரோபஞ் சொன்னேம்
வழுத்துசூக் குமவா ரோப வழியுநீ மொழியக் கேளாய்."

"ஐந்துபூ தமும்பத் தாக்கி யவைபாதி நந்நான் காக்கி
நந்துதம் பாதி விட்டு நான்கொடு நான்குங் கூட்ட
வந்தன தூல பூத மகாபூத மிவற்றி னின்றுந்
தந்தன நான்காந் தூல தநுவண்ட புவன போகம்."

மேலே சொல்லிய பாடல்கள் பஞ்சீகரணத்தைச் சொல்லுவது. அதாவது=ஒரு பூதத்தினது பாகத்தை மற்றொரு பூதத்திற்குக் கொடுப்பது. அதாவது=ஆகாசத்தை இரண்டு பாகமாக்கி, ஒரு பாகத்தை உள்ளவாறுவைத்து மற்றைப்பாகத்தை நான்கு பாகஞ்செய்தும், வாயுவை இரண்டு பாகமாக்கி ஒரு பாகத்தை உள்ளவாறு வைத்து மற்றைப் பாகத்தை நான்குபாகஞ்செய்தும், தேயுவை இரண்டு பாக

மாக்கி ஒரு பாகத்தை உள்ளவாறுவைத்து மற்றைப் பாகத்தை நான்கு பாகமாகச் செய்தும், அப்புவை இரண்டுபாகமாக்கி ஒரு பாகத்தை உள்ளவாறு வைத்து மற்றைப் பாகத்தை நான்கு பாகஞ் செய்தும், பிருதிவியை இரண்டு பாகமாக்கி ஒரு பாகத்தை உள்ளவாறுவைத்து மற்றைப்பாகத்தை நான்கு பாகஞ் செய்தும் விட்டால் ஒவ்வொரு பூதமும் ஐந்தைந்து பகுப்பினதாம். இப்பூதங்களுள் ஆகாயத்தின் அரைப்பாகத் தோடு அதனது மற்றை யரைப்பாகத்தின் நான்கையும் சேர்க்காமல், ஒன்றை வாயுவின் அரைப்பாகத்தோடும், மற்றொன்றைத் தேயுவின் அரைப்பாகத்தோடும், இன் னொன்றை யப்புவின் அரைப்பாகத்தோடும், பிறிதொன் றைப் பிருதிவியின் அரைப்பாகத்தோடுஞ் சேர்த்தல் வேண்டும். இவ்வாறே வாயுவின் அரைப்பாகத்தோடு அதனது மற்றை அரைப்பாகத்தின் நான்கையும் சேர்க்காமல் ஆகாய முதலியவற்றின் அரைப்பாகத்தோடும், தேயுவின் அரைப்பாகத்தோடு அதனது மற்றையரைப்பாகத்தின் நான்கையுஞ் சேர்க்காமல் ஆகாய முதலியவற்றின் அரைப் பாகத்தோடும், அப்புவின் அரைப்பாகத்தோடு அதனது மற்றையரைப்பாகத்தின் நான்கையுஞ் சேர்க்காமல் ஆகாய முதலியவற்றின் அரைப்பாகத்தோடும், பிருதிவியின் அரைப் பாகத்தோடு அதனது மற்றையரைப்பாகத்தின் நான்கையுஞ் சேர்க்காமல் ஆகாய முதலியவற்றின் அரைப்பாகத்தோடும் சேர்த்தல் வேண்டும். இவ்வாறு சேர்த்தல்தான் பஞ்சீகரண மென்பது. இப்படிப் பஞ்சீகரணப்படுதலால் தூல பூதங்களும், அவற்றால் பூலோகம், புவலோகம், சுவலோகம், ஜனலோகம்,

தபோலோகம், மகாலோகம், சத்தியலோகம் என்கிற ஏழு லோகங்களும், அதல விதல சுதல, தராதல ரஸாதல, மகாதல பாதாள என்கிற லோகங்களும், அவ்வுலகங்களுள் சீவர்களுடைய யோகத்திற்குத் தகுதியான அன்னாதிகளும் இன்றியமையாதனவாம்.

சூட்சுமசரீரத்தின் தன்மையைக் கூறல்

முன்னே கூறியபடி சூட்சுமசரீரம் இருபது தத்துவங்களால் சேர்க்கப்பட்டதாம். மாயாப் பிரதிபிம்பன்—மாயையின் பிரதியாகத் தோற்றத்தை யுடையவன். அவித்தையாகிய மாயையின் பிரதிபிம்பராகிய ஜீவகோடிகள் ஆகையால் அவர்களுக்கென்றே ஒவ்வொன்றும் படைத்தளிக்கப்பட்டன. இவ்வாறு சிருஷ்டித்தவகையில் ராஜஸமும் சாத்வீகமும் போய் விட்டபடியால் எஞ்சியது தாமதகுணமே யாகும். சூட்சும சரீரம் தத்துவஞானத்தால் கெடாமற் காத்துக்கொள்ளும் சீவர்களுக்கு மற்றுமொரு படைப்பு நிச்சயமாகையால், அந்த தமோகுணத்தின் பகுதியை மற்றொரு பிறப்பினுக்காவதெனப் பரமன் பரமகிருபையால் நிறுத்திப் போந்தார். இவ்வாறு சொன்னதின்கருத்து யாதோவென்னில், சூட்சுமசரீரம்நீங்கியவர்களாகிய இதர சீவர்களின் நிமித்தமாகவே கடவுள் நிறுத்தி வைத்துக்கொண்டாரென அறிந்துகொள்ளுதல் வேண்டும்.

தூலபூதத்தின் தன்மையைக் கூறல்

தமஸில் தாமதத்திலுண்டான ஸ்தூலபஞ்சீகரணம் எங்ஙனமெனில், பிருதிவி தன் அம்சம் பாதி அஸ்தி. பிருதிவியில் அப்பு அரைக்கால்பங்கு கூடினது மாம்சம். பிருதிவியில்

அக்கினி அரைக்கால்பங்கு கூடினது சர்மம். பிருதிவியில் வாயு அரைக்கால்பங்கு கூடினது நரம்பு. பிருதிவியில் ஆகாசம் அரைக்கால்பங்கு கூடினது ரோமம். அப்பு தன் அம்சம்பாதி மூத்திரம். அப்புவில் பிருதிவி அரைக்கால்பங்கு கூடினது வாய்நீர். அப்புவில் அக்கினி அரைக்கால்பங்கு கூடினது வியர்வை. அப்புவில் வாயு அரைக்கால்பங்கு கூடினது இரத்தம். அப்புவில் ஆகாசம் அரைக்கால்பங்கு கூடினது சுக்கிலம். தேயு தன் அம்சம் பாதி பசி. தேயுவில் பிருதிவி அரைக்கால்பங்கு கூடினது நித்திரை. தேயுவில் அப்பு அரைக்கால்பங்கு கூடினது தாகம். தேயுவில் வாயு அரைக்கால்பங்கு கூடினது சோம்பல். தேயுவில் ஆகாசம் அரைக்கால்பங்கு கூடினது மைதுனம். வாயு தன் அம்சம் பாதி ஓடல். வாயுவில் பிருதிவி அரைக்கால்பங்கு கூடினது படுத்தல். வாயுவில் அப்பு அரைக்கால்பங்கு கூடினது நடத்தல். வாயுவில் அக்கினி அரைக்கால்பங்கு கூடினது இருத்தல். வாயுவில் ஆகாசம் அரைக்கால்பங்கு கூடினது தாண்டல். ஆகாசம் தன் அம்சம் பாதி மோகம். ஆகாசத்தில் பிருதிவி அரைக்கால்பங்கு கூடினது ராகம். ஆகாசத்தில் அப்பு அரைக்கால்பங்கு கூடினது துவேஷம். ஆகாசத்தில் அக்கினி அரைக்கால்பங்கு கூடினது பயம். ஆகாசத்தில் வாயு அரைக்கால்பங்கு கூடினது வெட்கமாம். இவைகள் இருபத்தைந்தும் ஸ்தூலசரீர கற்பனையாகும்.

மேலே சொன்னபடிக் கணக்கிடுதலையானது மிஞ்சின தாமதகுணத்தினின்றுமே தூலபூத முண்டாயிற்று என

அறியலாம். குணம் என்கிற இடத்தெல்லாம் குணசகித சூட்சும பூதமென்று பொருள் கொள்க. இதில் தாமதகுண சகிதமான சூட்சுமபூத மைந்தையும் ஒன்றிரண்டாகப் பகுத்து முதற்பாதி ஐந்தையும் ஒன்றை நாலாக்கி இரண்டாம்பாதி ஐந்தனுள் தன் அம்சத்துடன் கூட்டாமல், மற்ற நான்கு பூதத்துடனும் பூதத்திற்கு அரைக்கால்பங்கு மாத்திரையாகக் கொடுக்கிறதே தூலபூத பஞ்சீகரணம் என்பது.

"சூக்கும சடமிம் மட்டுஞ் சொல்லினே மிப்பாற் றூலம்
ஆக்குமா ரோபந் தானு மடைவினின் மொழியக் கேளாய்
தாக்குமிவ் வுயிர்க்குத் தூல தநுவும்போ கமுமுண் டாகக்
காக்குமவ் வீசன் பஞ்சீ கரணங்கள் செய்தான் றனே."

"ஐந்துபூ தமும்பத் தாக்கி யவைபாதி நந்நான் காக்கி
நந்துதம் பாதி விட்டு நான்கொடு நான்குங் கூட்ட
வந்தன தூல பூத மகாபூத மிவற்றி னின்றுந்
தந்தன நான்காந் தூல தநுவண்ட புவன போகம்."

மேலே சொன்ன தூலசரீரத்தி னமைப்பை,

"அதாகாஶஸ்ய பூதஸ்ய ஸார்த்தம் ஜ்ஞாதேதி கத்யதே
ஶேஷார்த்தஞ்ச சதுர்ப்பாகாந் க்ருஷ்ண ஸம்மிஶ்ர மாசரேத்"

என விஷ்ணுயாமிளத்தும், மீண்டும்,

"மஹாபூதார்த்த பாகாநி லக்ஷயாமி ஶ்ருணுநாரத
ஜாதா வ்யாநஶ்ச சக்ஷுஶ்ச ரஸம் பாயு ரிதீரிதம்"

என்று சொல்லியதும்,

'தேஷாம் மநுஷ்யாதீநாம் பஞ்சபூத ஸமவாய ஶரீம்
ஜ்ஞாந கர்மேந்த்ரியைய: ஜ்ஞாந விஷயை:

பிராணாதி பஞ்சவாயு மனோபுத்தி சித்தாஹம் காரை:
ஸ்தூல கல்பிதை ஸ்ஸோபி ஸ்தூல ப்ரக்ருத ருச்யதே''

என யோகசூடாமணியும் அறிக. இதனையே,

"தன்மாத்திரை ... ... பெயர்த் துரைத்தான்'' என்ற பாடலால் பிரமகீதையிலும், "ஐந்து பூதமும் ... ... புவனபோகம்'' எனவும், "தூலமே மருவும் ... ... மனத்திற் கொள்ளுவாய்'' என்ற கைவல்லிய நவநீதத்தாலும் அறிவித் தனர்.

சூட்சும பூதங்களினின்றும் சூட்சும சரீரங்கள் எவ்விதம் தோன்றியதோ அதுபோலப் பஞ்சீகரணம் பண்ணின தூல பூதங்களினின்றும் ஆறு தத்துவங்கள் தோன்றும்.

ஆறுதத்துவமாவன:—சர்மம், உதிரம், மாமிசம், சராயு, அத்தி, மச்சை என்பனவாம். இவைகள் பூமியின் அம்ச மாம். இதனை யொப்பவே தூலதேகத்தில், மூத்திரம், கபம், ரத்தம், சுக்கிலம், வேர்வை முதலிய ஜலாம்சமும், பசி, தாகம், சோம்பல், மோகம், மைதுனம் முதலிய அக்கினியம்சமும், நடத்தல், கிறுதல், கண்களை மூடுதல், திறத்தல் முதலிய வாயுவம்சமும், காமம், குரோதம், லோபம், மோகம், பயம் முதலிய ஆகாசாம்சமும் ஒன்றுசேர்ந்துள்ளனவென்றே கொள்க.

நால்வகைத்தோற்றம்:—சராயுசம், அண்டசம், சுவேத சம், உற்பிசம் என்பனவாம். இவைகள் முறையே கருப்பையி

னின்று பிறப்பவையும், முட்டையிலிருந்து பிறப்பவையும், வியர்வை நீரிலிருந்து பிறப்பவையும், விதையிலிருந்து பிறப்பவையும் எனப் பொருளாம்.

தோற்றம் எழென்பது:—தேவர், மனிதர், விலங்கு, பட்சி, நீர்வாழ்வன, ஊர்வன, தாவரமுதலியனவாம். தோற்றம்—தோன்றுவது. உற்பத்தியாவது; இவ்வாறு தோற்றுபவைகளின் தொகையினையே எண்பத்துநான்கு இலக்ஷம் யோனிபேதமென்பர். இவைகள் ஒவ்வொன்றின் சங்கையையும் பிரிக்கின், தேவர் பதினொரு இலக்ஷமென்றும், மனிதர் ஒன்பது இலக்ஷமென்றும், விலங்கினம் பத்து இலக்ஷமென்றும், பறவைக்கணம் பத்து இலக்ஷமென்றும், நீரில் வாழ்வன பத்து இலக்ஷமென்றும், ஊர்வன பதின்மூன்று இலக்ஷமென்றும், தாவரவர்க்கம் இருபத்தியொரு இலக்ஷமென்று பேசுவர்.

"அண்டசஞ் சுவேதசங்க ளுற்பிச்சஞ் சராயுசத்தோ
டெண்டரு நாலெண்பத்து நான்குநா ருயிரத்தா
லுண்டுபல் யோனியெல்லா மொழித்து மானுடத்துதித்தல்
கண்டிடிற் கடலைக்கையா னீந்தினன் காரியங்காண்"

"ஆதிமுக் குணமிப் பூத மடங்கலுந் தொடர்ந்து நிற்கும்
கோதில்வெண் குணத்தி லைந்து கூறுணர் கருவி யாகும்
ஓதிய பின்னை யைந்து முளம்புத்தி யிரண்டா ஞான
சாதன மாமிவ் வெழுஞ் சற்குணப் பிரிவி னாலே."

என்றுஞ் சொல்லினர்.

மூவகைச்சாதி:—அதாவது உத்தமர், மத்திமர், அதமர் என்னும் மூவகைய பிரிவினதாய், தேவர், மனிதர் ஆகியோரை

உத்தம சாதியாரென்றும், விலங்கினத்தையும் பறவைக் கணத்தையும், சேர்த்து மத்திமசாதி யென்றும், இயக்கமில்லா தனவாகிய தாவராதிகளின் ஈட்டத்தை அதமசாதி யென்றும் வகுத்துச் சொன்னதாம். சாதி = ஒருபொருட் பல்பொரு ளுணர்த்துவனவாம்.

ஈண்டு மூவகையாகப் பிரித்தவற்றையே நன்னூலார்,

"உயிருயி ரில்லதாம் பொருட்குணம் பண்பே" என்றும்,

"மெய்ந்நா மூக்கு நாட்டஞ் செவிகளின்
ஒன்றுமுத லாக்கீழ்க் கொண்டுமே லுணர்தலின்
ஓரறி வாதியா வுயிரைந் தாகும்" என்றும்,

"புன்மர முதலவுற் றறியுமோ ரறிவுயிர்"

"முரணந் தாதிநா வறிவொடீ ரறிவுயிர்"

"சிதலெறும் பாதிமூக் கறிவின்மூ வறிவுயிர்"

"தும்பிவண் டாதிகண் ணறிவினா லறிவுயிர்"

"வானவர் மக்க ணரகர் விலங்குபுள்
ஆதி செறியறிவொ டையறி வுயிரே"

என்பவையான சூத்திரங்களைப் பொருள்பட நிறுவி, வானவரும் மக்களும் நரகரும் விலங்கும் புள்ளு முதலியன கீழ்ப்போன நாலறிவையே யன்றிச் செவியறிவாற் சத்தத்தை யும் அறியும் அறிவினோடு ஐயறிவுயிர்களாகு மென்றும், இவை களைச் சித்துப்பொருள் சடப்பொருளென்பார் உயிரில்லதாம் பொருளெனக் கூறியவாறும், சித்தாகிய உயிர் அறிவு சடமாகிய உடலோடு கூடிய வழியன்றி நிகழாமையானும்,

அங்கிகழ்ச்சி கண்டு அல்லது உயிர் உண்டு என்பதும் அதற்கோர் அறிவு உண்டு என்பதும் தோன்றாமையானும், உயிரைப் பிரித்து ஓதாது உடலோடு கூட்டிப், "புள்மரமுதல" என முறைகூறிய வாறும், அவ்வுயிரறிவு உடலொடு கூடியவழி ஐம்பொறியானும் ஐம்புல நிகழ்தலின் ஐயறிவெனக் கூறிய வாறும், பொறியும் எல்லா வுயிர்க்கண்ணும் ஒருங்கு நில்லாது இங்ஙனங் கூறியமுறையே நின்று அறிவை நிகழ்த்தலின் உயிர்கள் பலவாயினும் அறியும் வகையான் உயிர் ஐந்தெனவுங் கூறினர்.

இவர் இவ்விதம் கூறியதையே, தொல்காப்பிய நூலார், "மாக்கள் தாமே ஐயறிவுயிரே" என்றும், "மக்கள் தாமே ஆறறிவுயிரே" என்றும் கூறி, மக்கள் என்பவர் இவ்வையறிவோடு அமையாமல் பகுத்தறிவையுங் கொண்டவராவர் என்றனர். இவ்வாறறிவுடையோரே இம்மைப் பயனையும், மறுமைப் பயனையும், வீட்டின் பயனையும் அடையும் அறிவினைப் பெற்றவராவார். இதனையே,

"தாலத்தின் மரங்கள் காட்டித் தனிப்பிறை காட்டு வார்போல்
ஆலத்தி னுடுக்கள் காட்டி யருந்ததி காட்டு வார்போல்
தூலத்தை முன்பு காட்டிச் சூக்கும சொரூப மான
மூலத்தைப் பின்பு காட்ட முனிவரர் தொடங்கி னாரே"

இவ்விதமாகப் பேசியவர்களில், புண்ணியம் பாவம் மிச்சிரம் என்னும் மூன்று கர்மங்களினது பலனாலே தாங்கள் செல்லும் மார்க்கங்களான தேவகதி மானிடகதி தாவரகதி ஆகிய நால்வகைக் கதியுடையவர்கள். இவர்கள் இவ்விதம்

மாறிமாறிவந்து பிறப்பதற்குக் காரணமாக நிற்பது புண்ணிய பாபாதிகருமங்களேயாகும்.

இதுவுமல்லாமல் புண்ணியமும் மேலான புண்ணியம், மத்திம புண்ணியம், சாமான்னிய புண்ணியமென மூன்று வகையாகும். இவற்றுள் மேலான புண்ணியத்தால் தேவர்களாகவும், மத்திம புண்ணியத்தால், அயிராவதம், அன்னம், கருடன், குரங்கு முதலியவான தெய்வீக விலங்கினுருவமாகவும், சாமான்னிய புண்ணியத்தால் கற்பகதரு சங்கநிதி பதுமநிதி முதலிய தெய்விகமான தாவரப்பிறப்பினை அடைகின்றனவையாகும்.

இவ்வாறு வகுத்தும் தொகுத்துஞ் சொன்னவகையில் விலங்கின் கதியும் தாவரகதியும் உன்னி யோதுபவர்க்குத் தேவகதியி லடங்கினவாகப் புலனுவதன்றி வேறில்லை.

புண்ணியகர்மத்தாலாய பேற்றைச் சொன்னமைபோலவே, பாவகன்மமும் மூன்றுவகையதான பிரிவினையுடையதாய், பாவ உத்கிருஷ்டமெனவும், பாவமத்திமம், பாவசாமான்னியமென பிரிவுபட்டுத் தாவரவிலங்குகளும் பிறப்பை உயர்வுந் தாழ்வுமாக அடைவதற்குக் காரணமாயின.

கோசத்தின் தன்மை கூறல்

“பஞ்சகோ சமும்விட் டப்பாற் பார்க்கின்ற போது பாழே
விஞ்சிய ததுவல் லாமல் வேறொன்றுந் தெரியக்கா ணேன்
அஞ்சன விருளே யோநா னகமென வனுப விப்பேன்
வஞ்சமில் குருவே யென்ற மகன்மதி தெளியச் சொல்வார்”

ஈண்டுகூறிய கோசமென்றது என்னையெனில், கோச மென்பது கத்தியின் உறைக்கும், திரவிய பொக்கிஷத்திற்கும், கோசகார மென்னும் புழுவின் கூட்டிற்கும் இவைபோன்ற வற்றிற்குமாம். கோசம்=உறை, மூடி. உறையானது கத்தி முதலியவற்றை மறைத்து இருத்தல் போன்று அன்ன மயாதிகளும் ஆத்மாவை மறைத்திருத்தலினாலே அவை களும் கோசம் என்று சொல்லப்படுகின்றன. ஈண்டு மறைதல் என்றது இருவகைப்படும். ஒன்று உண்மையாக மறைத்தல். மற்றொன்று கற்பனையாக மறைத்தல். இவ் விரண்டினுள் உண்மையாக மறைத்தலினுக்குப் புளியம் பழத்தை அதனது ஓடு மறைத்திருத்தல் போல்வதாம். இரண்டாவதற்குக் கயிற்றினிற் றோன்றிய அரவு அதனையே மறைத்தல் போல்வதாம். இவ்வாறு மறைத்தற் காரணத்தால் வேதாந்திகள் பற்பலவாறு மனம்போனவாறே வேதாந்த மூட்டைகளைக் கட்டிக் கடையின் விரிவுணராமல் பேசி விடுத்தனர்.

பஞ்சகோச விலக்ஷணம்

அதாவது ஞானத்திற்கு வேறாகிய கடாதிசட வஸ்துக் கள் நிலையற்றனவாக விருக்கின்றன. ஆன்மாவும் கடாதி வஸ்துக்கள் போலச் சடப்பொருளாயின் நிலையற்றதாக அழியும், பரம்பொருள் நிலையற்றவையாயின் மோக்ஷநிமித்த மான சாதனங்கள் வாளாய்ப் போய்விடும். பிரமம் பஞ்சகோச விலக்ஷணமாய்ச் சச்சிதானந்த வடிவாய் உள்ளது என்று அறியாமல் சிலவீணர் பஞ்சகோசங்களின் ஒன்றையே பிரம

மாக ஒப்பி முக்கிய பிரமஸ்வரூபமான சாக்ஷி அறியமுடியாமல் போயினர். சுழுத்தி அவஸ்தையில் இருந்து கண்விழித்தவன் என்றும் அறியாமல் நான் தூங்கினேன் என்பதினாலே பிரமம் தூலசூட்சும காரண மென்னும் மூவகையான சரீரத்திற்கும், அன்னமயம், பிராணமயம், விஞ்ஞானமயம், மனோமயம், ஆனந்தமயம் இவைகளுக்கும் வேறாய், சாக்கிர ஸ்வப்ன சுழுத்தி என்கிற அவஸ்தைகட்குச் சாட்சியாய்ச் சச்சிதானந்த வடிவமாய் இருக்கிற தென்பது வெளிப்படை. இதனாலே பஞ்சகோசங்களுக்கும் அதீதப்பட்டது பிரமம்.

இத்தூல சரீரமானது தாய் தந்தையர்கள் உண்ட அன்னத்தாலாகிய சோணித சுக்கிலங்களினால் தாயின் வயிற்றில் கருவாகி, அப்பால் பால் முதலிய அன்னத்தினால் விருத்தி யடைந்து, இறந்த பின் அன்னமயமாகிய பிருதிவி யில் ஒடுங்கும். தூலதேகமே அன்னமயகோசம். இதுதான் சுகதுக்கமாகிற போகாதிகளுக்கு இடந்தருகின்றது. இதுவே உண்டாதல், இருத்தல், மாறுபடுதல், அதிகரித்தல், குன்றுதல், நாசமடைதல் முதலிய அறுவகை விகாரமடைகின்றது. இவ்வகை விகாரங்கள் எந்தச் சரீரத்திற்கும் உண்டு.

பிராணமயகோசம்: — வாக்காதி கன்மேந்திரியம் ஐந் துடனே கூடிய ஐந்து பிராணன்களும் பிராணமயகோசம். அன்னகோசத்திற்கு உள்ளாகி, தேகத்திற்குக் கட்டாய் அசைதலாகிய தொழில்களைப் பெற்று விளங்குகின்றது. இது உச்சுவாச நிசுவாச முடைமையதாயிருந்து, நான் சிறந்த வன் என்று வசனித்தல் போல்வது.

மனோமய கோசம்:—செவியாதி ஞானேந்திரியம் ஐந்துடன்கூடிய மனம் மனோமய கோசமாம். இது அன்னமய கோசத்துக் குள்ளாய்க் காமக்குரோத லோபமோக மதமாச்சரிய மென்னும் ஆறு பகைவர்க்கங்களும், சரீரத்தில் நான் என்னும் புத்தியும், மனைவிமக்களாதியோரிடத்தில் எனது என்னும் புத்தியும் உடைத்தாயிருத்தல். இதுவே இதனது தர்மமாம்.

விஞ்ஞானமய கோசம்: — ஞானேந்திரியம் ஐந்துடன் கூடிய புத்தி விஞ்ஞானமய கோசமாம். இது மனோமய கோசத்திற்குள்ளாய், இகபர கருமவிஷய அறிவினை யுடைத்தாய், கர்த்திருத்துவ அபிமான முடையதாய் நான் என்னும் சொல்லிற்குப் பொருளாய், சேதனத்தின் பிரதிபிம்பத்திற்கிடமாய் இருத்தல் இதன் பொருள்.

பிராணமயகோசம் மூன்றும் போகத்திற் கிடமாகிய ஸ்தூல தேகத்தினுள்ளிருந்து போகத்தை அநுபவிப்பதற்குச் சாதனமாயுள்ள சூக்கும சரீரத்தினுள்ளிருக்கும். கன்மேந்திரியத்துடன் பிராணவாயு தேகத்திற் பூரித்து அதற்குப் பலத்தைக் கொடுத்து இந்திரியங்களை அவைகளின் காரியங்களின் பிரவர்த்திக்கும்படி செய்வதா யிருப்பதால் பிராணமய கோசம் கேவலம் ரஜோகுணத்தின் அவஸ்தையா மென்றும், ஞானேந்திரியங்களுடன் கூடிய மனம் கர்மேந்திரியங்களால் விவகாரங்களைச் செய்து இச்சை முதலிய ரஜோகுண விருத்தியுடன் கூடியிருப்பதால் மனோமயகோசம் சத்துவ ரஜோ குணங்களின் அவஸ்தையா மென்றும், ஞானேந்திரியங்க

ளுடன் கூடிய புத்தி நகத்தின் நுனிமுதல் சிகையின் நுனி வரையில் சரீரத்தில் வியாபித்துக் கர்த்தாவடிவமாக விருந்து, விஷயங்களையும் பகுத்துணர்தல் வடிவாய் இருப்பதால் விஞ் ஞானமயகோசம் கேவலம் சத்துவகுணத்தின் அவஸ்தை என்றும் அறிக.

ஆனந்தமய கோசம்:—அஞ்ஞானவடிவ காரண தேகமே ஆனந்தமய கோசமாம். பிரமத்தின் சொரூபவடிவ ஆனந்தத் தின் பிரதிபிம்பத்தோடு கூடிய பிரியமோதப் பிரமோத விருத்திகளின் லயத்திற்கு இடமாய்ப் போக்தா வடிவமாக இருத்தல்.

சாக்கிர சொப்பனங்களில் புண்ணிய கர்மத்தின் பயனை அநுபவிக்க நேர்ந்த விடத்துப் புத்தி விருத்தி உள்முகமாய்ப் பிரமஸ்வரூப வடிவமாகிய ஆனந்தத்தின் பிரதிபிம்பத்தை அடைகின்றது. அப்போது அப்புத்தி விருத்தி பிரியமோதப் பிரமோத விருத்தியாம். புண்ணிய கர்மபலயோகம் நிவிர்த்தி யாகும் காலத்தில் உண்டாகும் சுழுத்தி எதுவோ அதன்கண் அவ்விருத்தி தனது காரணமான அஞ்ஞானத்தில் ஒடுங்கு கின்றது; அவ்வஞ்ஞானமே ஆனந்தமய கோசமாகும் என்பது மேலே சொன்னதில் விவரம். இஷ்டமான வஸ்துவைப் பார்த்தவிடத் துண்டாகும் விருத்தி பிரியமாம். அவ்வஸ்து வின் லாபத்தில் உண்டாகும் விருத்தி மோதமாம். அவ் வஸ்துவின் போகத்தாலுண்டாகும் விருத்தி பிரமோதமாம்.

அன்னமயகோசம் சுகதுக்கவடிவ போகத்தை அநு பவித்தற்கு இடம். அது இந்திரிய காணுதிவடிவமாய் இருத்த

லாலே போகத்தை அநுபவித்தற்குச் சாதனமாகவுள்ள சூக்கும சரீரத்தினிடத்துள்ள பிராணமயகோசம் கிரியாசக்தியுள்ள காரியவடிவம். மனோமயகோசம் இச்சாசக்தியுள்ள கரண காரணவடிவம்.

விஞ்ஞானமய கோசம் ஞானசக்தியுள்ள கர்த்தாவடிவம், ஆனந்தமயகோசம் போக்தாவடிவமாம்.

தூலசரீரத்தில் சூக்குமசரீரம் இருக்கும் வகையைக் கூறல்

"தாங்குறு மிவ்வுலகத் துற்றுத் தசைகொளு முடல்கடானு
மீங்குறு மூவகைய தாகிப் பேரொடு பிறங்கிப்போங்
தூங்குறு தூலத்தோ டுங்கிலாச் சூக்கும மேற்றுத்
ஓங்குறு மூலகாரணமா மொழிகுவர் மொழிவல்லாரே"

ஏலும் மூவகை சரீரங்கள்:—தூலம், சூக்குமம், காரணம் என்பன. மயிர் தோல் நரம்பு தசை எலும்பு கொழுப்பு இந்த ஆறும் உடைமை பற்றியும் கண்கூடாகத் தோன்றுவதாலும் தூலமென்றதாம்.

தூலத்தைவிட்டுச் சூட்சுமசரீரஞ் சுதந்தரமாய் ஒரு காரியமும் செய்யாதபடியினால் சூட்சுமசரீர காரியமென்று அறியலாம். எங்ஙனம் அக்கினியானது கட்டையை அனுசரித்துச் சுட்டுத் தன்னுருவம் ஆக்கிக்கொண்டு தாகபாகாதி கிரியைகளைப் பண்ணினாலும், அந்தத் தாகபாகாதி காரியங்கள் கட்டையின் காரியம் அல்லாததுபோல சூட்சுமசரீரமும் தூலத்தை ஆசிரியித்துப் பதினேழு விதமான காரியங்களைப்

பண்ணினபோதும் கேவலமான தூலமான காரியங்களுக்கு அங்கியமான சூட்சுமசரீரத்தின் காரியமே ஆகையால், 'தூல மோங்கிடு மூலகாரணம்' என்றார்.

தூலசரீரத்தில் சூட்சுமசரீரம் இருக்கும் வகையைக் கூறல்

இந்தத் தூலசரீரத்துவம் ஆறினுள்ளே குடிபுக்க சூட்சும சரீரத்துவம் இருபதும் தத்துவங்களுக்கு இடமாகவுள்ள அதிதேவதைகளினால் விளங்கப்படுகின்றன வாகும். இங்கே சொல்லிய வண்ணம் இந்திரியங்களுக்கே அதிதெய்வம் என்று பெயர். இத்தேவதைகள் அதற்குரிய இடத்தினுக்குரிய விஷயங்கள் பலப்படாது. தூலசரீர தத்துவமான மயிர் தோல் நரம்பு தசை எலும்பு கொழுப்பு இவற்றில் சூக்கும சரீரதத்துவங்கள் இருபதும் குடிபுகுந்த தென்னலாம். சீவன் தத்தமது கர்மத்துக்கு உரிய சுகதுக்கங்களை அநுபவிப்பதன் நிமித்தமாகக் கடவுளின் சங்கத்தால் புகுந்ததென்று கொள்ளு தல் அமையும். அப்படிப் புகுந்து அநுபவிப்பதற்குத் துணை யாக இருப்பது பிராப்த கன்மமே யாகும். அது இருக்கும் வரையில் தான் இத்தூலமும் நிற்கும். இதுபற்றியே,

"வாக்கினொடு சிங்நுவைதான் வாயினிற்கும்
மனத்தினொடு புதானனிவைக் கண்டத்தேகாண்
தாக்குநிலே பிராணன்மதி யிருதயத் தோங்கும்
வீக்குபுகழ்ச் சமானனொடு சித்தமது கொப்புழ்ச்சாரும்
நீக்குபா யுருவ்யானன்தானுங் குதத்தினிற் போந்துலாவும்
துவக்கு வியான னகங்கார மதான மூன்றுதானுமிவ்

வோங்கு மிந்தக் காயமதில் ஓங்கியுறைந் திருக்குமென்
றுயர்மறை களூற்ற றையுங் காண்மின் மாதோ.

"ஓங்குநிலை யுச்சிதனில் ஒளியுலவுங் கருவிழிக்கட்
காட்சியுற் றிடுவதேபோல்
ஆங்குறுசொற் காதுக்குள் சுரோத்திர
ஞசியினிற்
சத்தமிடு மாக்கிராண மிரண்டுவேறாய் போந்து
வகைவகையே கண்டந்தன்னில் நின்றுவாழும்
மித்தைமிகுங் கரதலங்கள் குய்யம்பாணி யெழிலாலுற்று
சுத்தமது காந்து நிற்கும்
வித்தையுடற் றத்துவங்க ளாறினுள்ளே பொலிகின்ற
சூக்கும வுடல் இருபத் தாமே"

விசுவன்:—சாக்கிராவஸ்தையில் தூலசரீரத்தில் அபிமானியா யிருக்கிற ஜீவனுக்கு விசுவனென்று பெயர். அன்றி, சாக்கிரதாவஸ்தையில் சீவன் சூட்சும தேகத்தின் அபிமானத்தை விடாது விசுவவடிவ தூலதேகத்தில் நான் என்னும் அபிமானத்தை உடைத்தாய் இருத்தலாலே விசுவனென்று சொன்னதுமாம்.

விவகாரிகன்:—ஜாக்கிராவஸ்தையில் சிதாபாசனுன இவனே விவகாரிகன் எனப்படுகிறுன். இவன் அத்தியான்மம், அதிபூதம், அதிதெய்வம் என்னும் எல்லாத் தத்துவங்களோடுங் கூடி விவகரித்தலாலே இவ்வாறு சொல்லப்படுகிறுன். இப்பெயர்களை அல்லாமல் தூலசரீர வியஷ்டியபிமானி, புத்திபிரதிபலன், சைதன்னியன், விட்சேபரூபன், க்ஷேத்திரக்ஞன், சரீரி, பிரமாத்துரு, கர்த்துரு, போக்த்துரு, ஸம்ஸாரி, விஷயி,

விஞ்ஞானமயன், துவம்பத முக்கியார்த்தன் என்ற தொடக்கத் தனவாகிய பெயர்களும் வழங்கப்படுகின்றன.

தைசதன்: — சொப்பனுவஸ்தையில் சூட்சும சரீரத்தில் அபிமானியாக விருக்கிற ஜீவனுக்கு தைசதன் என்பர். இவனுக்குப் பிராதிபாசிக சீவனென்றும், சொப்பன கற்பித னென்றும் பெயருண்டு. சொப்பனுவஸ்தையில் ஜீவன் சோமசூரியாக்கினிகளின் சகாயமின்றித் தானே சோமசூரி யாக்கினி வடிவமாக நின்று தன்னிற் றோன்றிய பிறவற்றை யெல்லாம் விளக்கலாலே தைசதன் என்றும், தத்துவஞான மின்றியே பொய்யென்று நிச்சயிக்கத் தக்கவனுய் இருத்த லாலே பிராதிபாசிக ஜீவனென்றும், சாக்கிர வாசனையினுலே சொப்பனத்தில் கயிற்றின்கண் அரவுபோலக் கற்பிதமாய்த் தோற்றலாலே சொப்பன கற்பித னென்றும் சொல்லப் படுகிறுன். இப்பெயர்களே அல்லாமல் சூட்சுமசரீர வியஷ்டி அபிமானி என்ற தொடக்கத்தவாய பெயர்களும் வழங்கப் பெறும்.

ஈண்டு கூறியது சாக்கிராவஸ்தையில் எந்தப் பதார்த்தங் கள் அநுபவிக்கப் படுகின்றனவோ அப்பதார்த்தங்களின் ஸம்ஸ்காரம் மயிரின் நுனிப்பாகம் போன்று சூட்சுமமாய்க் கண்டத்திலுள்ள ஹிதை என்னும் நாடியில் தங்குகின்றது. அவ்வாசனையினுல் சப்தாதி பஞ்ச விஷயங்களும் அவற்றின் ஞானமும் முன்பின் தொடர்பின்றி உண்டாகும் காலம். இதனையே சொப்பனுவஸ்தை என்பதாகும்.

பிராஞ்ஞன்:—சுழுத்தி அவஸ்தையில் அபிமானம் உண்டான ஜீவனுக்குப் பிராஞ்ஞன் என்றும் பாரமார்த்திகனென்றும் பெயர். சுழுத்தியாவது=கேவல சுகமும் அஞ்ஞானமும் உள்ள காலம். இந்த அவஸ்தையில் ஜீவன் தனது உண்மையானவடிவ கூடஸ்தனோடு ஐக்கியமாய் சுகாகாரமாய் இருப்பதுடன் ஆண்டுள்ள அஞ்ஞானத்தையும் அறிந்துகொண்டிருப்பதனாலே, பிராஞ்ஞன் என்றும், அவித்யோபாதியுடன் உண்மை வடிவமாக இருத்தலாலே பாரமார்த்திக சீவன் என்றும் சொல்லப்படுகிறான். இப்பெயர்களே யன்றிக் காரணசரீர வியஷ்டி அபிமானி, அவித்தியோபாதிகள், காரியோபாதிகள் என்ற தொடக்கத்தவாய பெயர்களும் வழங்கப் பெறும். பிராஞ்ஞன்=நன்றாய் அறிந்தவன். இதனை,

"தூலமாந் தேகந்தன்னைத் தொடர்ந்திடுஞ் சீவன்றானுஞ்
சாலவே விவகாரி விசுவனுஞ் சதுரனாகும்
ஏலவே சூக்குமதேகஞ் சேர்ந்திடிற் றைசதனும்
ஞாலமே பிராதி பாதிகனோ டேற்பானந்தோ"

"பின்னுங் கற்பித சொற்பனனு மிவன்தான்
மின்னுங் காரியங் களியாவு மாற்றியே
கன்னுங் காரணத் தொன்றினிற் பிராக்ஞனோடு
மன்னுமே பாரமார்த்திக மெய்ப் பேரே"

என்று பிறர் கூறியன வறிக.

"சாற்றறிய சாக்கிரத்திற்குச் சாக்ஷிநற் சீவனே
மாற்றிய வாக்குஞ் சொப்பனத் துக்கந்த ரான்மாவாம்
தேற்றிய வாக்கிடுஞ் சுழுத்தி பரமாத்துமா தன்னைத்
தாக்கிய தாக்குநான்கிற் கூடத்தன் ஞானத்மா தானே"

இப்பாடலிற் கூறியவண்ணம், பிரமசைதன்னியம் ஜாக்கிரத்திற்குச் சாட்சியாயிருக்கும்போது ஜீவாத்துமா என்று பெயர். ஜீவாத்மா ஜாக்கிரத்திற்குச் சாட்சி என்றது; ஜீவாத்மா சாக்கிராவஸ்தை உண்டாதலையும் அறிகின்றது. அதனது இன்மையையும் சொப்பன சுழுத்திகளின் அறிகின்றது. அறிதலால் சாக்கிராவஸ்தை ஜீவாத்மாவன்று; அதனுடையது அன்று. இது தூலதேகத்தினதாம். ஆகவே இதை அறியும் ஜீவாத்மா சாக்ஷியைப்போல இதனினும் வேறாக இருக்கின்றதென்பது நிச்சயமாகிறது சித்திக்கவே ஜீவாத்மா ஜாக்கிராவஸ்தைக்குச் சாட்சியாகு மென்பது பெறப்பட்டது. சொப்பனத்திற்குச் சாட்சியாய் இருக்கும்போது அந்தராத்மா என்று பெயர். அந்தராத்மா சொப்பனாவஸ்தை உண்டாதலை அறிகின்றது. அதனது இல்லாமையையும் சாக்கிர சுழுத்திகளில் அறிகிறது. ஆகையால் சொப்பனாவஸ்தை அந்தராத்மாவன்று. இது சூட்சுமதேகத்தினதாம். இச் சொப்பனாவஸ்தையை அறியும் அந்தராத்மா கடசாட்சியைப்போலே இவ்வவஸ்தையினும் வேறாக இருத்தலால் சொப்பனாவஸ்தைக்குச் சாட்சியாயிற்று.

'சுழுத்திக்குச் சாட்சியா யிருக்கும்போது பரமாத்மாவென்றது' பரமாத்மா சுழுத்தி அவஸ்தை உண்டாதலையும் அறிகிறது. அதனின்மையையும் ஜாக்கிர சொப்பனங்களில் அறிகிறது. ஆகையால் சுழுத்தி அவஸ்தைப் பரமாத்மாவன்று. அதனை யுடையது மன்று. இது காரணதேகத்தினதாம். இச்சுழுத்தி அவஸ்தையை அறியும் பரமாத்மா கட

சாக்ஷியைப்போலே இதைக்காட்டிலும் வேருக இருத்தலினுல் சுழுத்தி அவஸ்தைக்குச் சாட்சியாமென்று அறியப்படுகிறது.

'அவஸ்தாத்திரய சாட்சியா யிருக்கும்போது ஞானுத்மா என்றும், கூடஸ்தன் என்றும் சொல்லப்படும்' என்றது. காண்பான், காட்சி, காணப்படும் பொருள்களையும் சம்பந்த மின்றிக் காண்பது சாட்சியெனப்படும். ஞானுத்மாவானது அவஸ்தாத்திரயங்கள் மாறிமாறி வந்தாலும் தான் மாத்திரம் மாருமல் ஒருபடித்தாக விருந்து, ஒருவித சம்பந்தமு மில்லா மல் அவஸ்தைகள் மூன்றினையும் அறிந்து கொண்டு இருப்ப தால் கூடஸ்தன் அவஸ்தாத்திரிய சாட்சியாம் என்பது உறுதி யாம். இதனை,

"ஜ்ஞாத்ரு ஜ்ஞாநஜ்ஞேயா தாவாவிர்பாவ திரோபாவ ஜ்ஞா தாஸ்வயம் ததாவிர்பாவ ரஹிதஃஸ்வயம் ஜ்யோதிஸ்சேத நஸ் ஸாக்ஷீ" என்ற ஸர்வஸாரோப நிஷத்திலும்,

"த்ரிதாம ஸாக்ஷீணம் ஸத்யஜ்ஞாநா நந்தாதி லக்ஷணம் த்வமஹப்ஸப்த லக்ஷயார்த்த மஸக்தம் ஸர்வதோஷதஃ" என்ற வராகோப நிஷத்திலும்,

"சீவ னன்று ... ... விரும்பலா லின்பன்" என்கிற பிரமகீதைப் பாடலாலும், "சிறிதறியப் பட்டதாய் ... ... சாட்சியென நிகழ்த்தலாமே" என்ற அத்துவிதாநு பவப் பாடலாலும், "செய்கையுஞ் செய்விக்கையு ... ... சமாதிக்குஞ் சாட்சியே நான்" என்ற பாடலாலு மறிக.

சாக்கிரம்:—சகல இந்திரியங்களிலும் கர்த்ருத்வ போக்த்ருத்வ பாகியார்த்தஞானம் எம்மட்டும் இருக்கிறதோ, அது வரையில் சாக்கிரமாகும்.

சொப்பனம்:—இந்திரியங்களினால் பாகியார்த்த ஞானம் வராமல் மனதே விஷயாகாரமாகப் பரிணமித்துக் கர்த்ருத்வாகாரமாய் எதுவரையில் தோன்றுகிறதோ அதுவரையில் சொப்பனமாகும்.

சுழுத்தி:—இந்திரியங்களினால் பாக்கியார்த்த ஞானமும் வராமல், மனது கர்த்ருத்வா காரமாய்ப் பரிணமித்து விஷயாகாரமாய்த் தோன்றாமல் புத்தி காரணாத்மகமாய் எதுவரையில் இருக்கிறதோ அதுமட்டும் சுழுத்தி.

இவ்விதமாக ஜீவனுக்கு மூன்று சரீரமும் மூன்று அவஸ்தையும் சொல்லப்பட்டன.

துரியம்:—காண்பான், காட்சி, காணப்படுபொருள் என்னும் திரிபுடி நான்காம் ஐந்தாம் பூமிகளைப் போன்று பாவவடிவமாகவும், ஆறாம் பூமியைப்போன்று இல்லாமை தோன்றாமல் தன்னாலும் பிறராலும் அறியாத சொரூபத்தில் நிலைத்த மனதின் நிலையேயாம். இதனை,

"நிறைந்த வினையாறாலும் பேதம்போக்கி
நிலைபெறுதற் சுபாவத்தே நிற்றலானே
மறைந்தபொருள் வெளியாக்குந் துரியமாகும்"

என்று வாசிட்டம் கூறுவதும்,

"மாயையிற் சேதனன் மன்னும் பகுதியோன்
மாயையின் மற்றது நீவுதன் மாயையாங்

கேவல மாகுஞ் சகலமா யோனியுட்
டோயு மனிதர் துரியத்துட் சீவனே''

என்ற திருமந்திரங் கூறுவது மறிக.

துரியாதீதம்:—பிரமானு சந்தானத்தில் விருத்தியும் நழுவி மனமானது பாலினில் கலந்த நீர்போல ஆனந்திருக்கின்றதே யாகும். இதனை,

"துரிய வதீதஞ் சொல்லுறும் பாழாம்
அரிய துரிய மதீதம் புரியில்
விரியுங் குவியும் விள்ளா மிளிருந்தன்
உருவுந் திரியு முரைப்பதெவ் வாறே''

எனத் திருமந்திரங் காண்க.

'அவத்தைகளைந்து' என்றது:—சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம் என்பனவற்றைக் குறிக்கும்.

துரிய விலக்கணத்தை அறியவேண்டின்,

"தானத் தெழுந்து தருக்குந் துரியத்தின்
வானத் தெழுந்து போய்வையம் பிறகிட்டுக்
கானத் தெழுந்த கருத்தின் றலையிலே
ஊனத் தவித்தை விட்டூமே னின்றானே''

என்னுந் திருமந்திரப் பாடலாலறிக.

நனவிற் சுழுத்தி:—இந்திரியங்கள் ஒவ்வொன்றும் தத்தம் கொள்கைகளிலே நிலைத்து இருப்பதாகும். நனவாவது = சாக்கிரம். விருத்தியாவது = இந்திரியங்கள் நினைத்தபடி மனோவிஷயத்திலே சென்று கெடாமல் சொரூப ஸாக்ஷாத்காரத்திலேயே அடங்கி யிருத்தல்.

"முத்தர்கட்கு ... ... மோருங்கால்" என்றது, கரணங்களை இயக்குந் தன்மையினைக் கூறுவதாம்.

நேத்திரம்—ஸ்தானம் சாக்கிரதாவஸ்தை.

கண்டம்—ஸ்தானம் சொப்பனுவஸ்தை.

நெஞ்சு—ஸ்தானம் சுழுத்தியவஸ்தை.

நாபி, குதம் ஆகியவையும் இடமேயாம்.

இவைகள் கேவலத்தின் காரியமாகிய கீழாவஸ்தையாம்.

இதனாலே, அவஸ்தாத்திரிய சாக்ஷியாயிருக்கிற பிரம சைதன்னியம் எல்லா வவஸ்தைகளிலுந் தானாக விளங்குகையினாலும், மற்றத் தத்துவங்கள்போலத் தனக்கன்னியமாக விளங்காதபடியினாலும், அந்தப் பிரமசைதன்னியம் ஒன்றுமே தானாகக் காணப்படுகிறது என்றதே தேர்ந்தபொருள். சமஷ்டி என்பது=வனமென்றும், வியஷ்டி யென்பது=மரமென்றுங் கொள்க.

ஈசுவரனது சரீராதிகளைக் கூறல்

"தூலம் யாவுந் தொடர விராட்டிவன்
ஏலுஞ் சூட்சத் திரணிய கர்ப்பனே
காலமூலத் தவியா கிருத னென
ரேல மாமறை யெங்கணு மோதுமே"

இதில், ஈசுவரனுக்குத் தூலசூட்சும காரணமென்னும் மூன்று சரீரமும் ஜாக்கிர சொப்பன சுழுத்தி யென்னும் மூன்றவஸ்தையும் சொல்லபடுகின்றன.

விராட் என்பது:—பஞ்சீகிருத பஞ்சமகாதூல பூதங்களினால் அண்டமும், அந்த அண்டத்தில் கீழேழுலகமும், மேலே

மூலகமும், அந்த லோகங்களுக்குத் தகுந்த நால்வகை யோனிகளும் பிறந்தன. இத்தனையுங்கூடித் தூலப்பிரபஞ்ச மென்னப்படும். இந்தப் பிரபஞ்சத்தினிடத்தில் அபிமானித்த ஈசுவரனுக்கே விராட் என்னும் பெயராம்.

இரணிய கருப்பன்:—தாமதத்தில் சத்துவம் பிரகாசிக்கும்போது அதில் பிரதிபலித்த விக்ஷேபசத்தியினால் அபஞ்சீகிருத பஞ்சதன்மாத்திரைகள் பிறக்கும். இந்த அபஞ்சீகிருத பஞ்சதன்மாத்திரைகளும் சீவர்களது வியஷ்டி சூக்ஷ்ம சரீரமுங்கூடி ஈசுவரனுக்குச் சமஷ்டி சூக்ஷ்மசரீரமாம். இதுவே ஈசுவரனுக்குச் சொப்பனவஸ்தை. இதை அபிமானித்த ஈசுவரனுக்கே இரணிய கர்ப்பன் என்று பெயர்.

அவ்வியாகிருதன்:—உருவில்லாதவன், வெளியாகாதவன், பிறராலே ஆக்கப்படாதவன்.

வைசுவாநரன்:—ஈசுவரன் தூலசரீரத்துடனே சேர்ந்து சாக்கிரதாவஸ்தையில் பொருந்தியிருக்கையில் உண்டான பேருமாம். இவரே உலகின்கண்ணுள்ள எல்லா நரஸமூகத்தினரிடத்தும் நான் என்கிற பேரபிமானத்தை மிகுதியும் உடையவன். இவ்வகையான வைசுவானரனுக்கும் நரனிடவபிமானமும் நானென்ற வபிமானமும் நீங்காமல் நிற்க அதிஷ்டான சைதன்னியமாகவிருக்கும் பிரம்மமே காரணமாம்.

சூத்திராத்மா:—இரணிய கருப்பனிடத்தில் இருக்கிற விக்ஷேப சத்தியினிடத்திலிருந்து தமப்பிரதானமான அகங்காரமென்கிற தூலசத்தி யுண்டாயிற்று. இதில் சூட்சுமசரீரத்துடன் கூடிச் சொப்பனவஸ்தையைப் பொருந்தி யிருக்கின்ற

ஈசுவரன் சூத்திராத்மா. விராட்புருஷன் அகங்காரத்திற்கு அபிமானியாகி வெளிப்படையான சரீரமுடையவனுய்ச் சகல ஸ்தூலத்தையும் ரக்ஷிக்கின்ற பிரதான புருஷனுன விஷ்ணு வாகிறுன்.

அந்தர்யாமி:—எல்லா வுயிர்களினுள்ளும் எள்ளினிடத் தெண்ணெய்போல் இருக்கிறவன். :காரண சரீரத்துடனே கூடி சுழுத்தி அவஸ்தையை அடைகின்றபோது இப்பெய ருடையவ னென்கின்றதாம்.

காரண சரீரத்துடனேகூடி சுழுத்தி அவஸ்தையைப் பொருந்தி நிற்பதற்கும், ஸமஸ்த பிராணிகளின் கர்மத்தைத் தெரிந்து பிரேரகத் தன்மையனுக விருப்பதற்கும் இடமாக விருப்பவன் சைதன்னிய ருத்திரனென்று கொள்க.

சீவன் தனது மூன்று அவஸ்தையி னிடத்திலும் தன் மூன்று சரீரமான இருபத்தேழு வகையான தத்துவங்களின் கூட்டங்களிலும், நான் என்று கலந்து நின்ற தன்மையினே யொத்து ஈசுவரனும் தான் மூன்று விதமான அவஸ்தையிலும் தன் மூன்று சரீரமாய் இருக்கிற முப்பத்திரண்டு தத்துவங்க ளுடன் ஒன்ருய்க் கலந்து பொலிவான்.

ஜீவசேதன முதலியவற்றின் வியாப கத்தைக் கூறல்

"விரிஞ்சனே முதலாஞ்சேதன மோடு வெற்பேழு
மாய சேதனமாய்ப்
பரந்துள வுலகஞ் சித்திரமென்பர் பரம்பொருளா
மொரு பிரமத்

திருஞ்சடா சடமா முலகதுதோற்ற மெவ்வண
மெனிற்பிடங் தன்னில்
வரைந்தபன் னிறமாக் குளிர்முதன் மாற்றவல்லன
வலதுகிற் போலி"

ஆகையினுல், சிதாபாசன் சரீரமாத்திரமே கலந்து நிற்பன்.

ஈசுவரன் தன்னுடைய சரீரமாகிய சகல சரீரங்களோடுஞ் சகலப் பிரபஞ்சங்களோடுங் கலந்து நிற்பன். இவ்விரண்டு வகைக்குஞ் சாக்ஷியாய் இருக்கிற பிரஹ்ம சைதன்னியம் சகல சரீரத்திலும் சலப்பிரபஞ்சத்திலும் நிறைந்து அப்பாலும் பத்துத்திக்கையும் மீறி எல்லே அற்று இருக்கும். இதனே,

"ப்ரஹ்மை வாஹமிதம் ஜகச்ச ஸகலம் சின்மாத்ர விஸ் தாரிதம் ஸர்வம் சைததவித்யயா த்ரிகுணயா ஸேஷம்மயா கல்பிதம்"

"இத்தம் யஸ்ய த்ருடாமதிঃ ஸுகதரே நித்யேபரே நிர்மலே சண்டாலோஸ்து ஸதுத்விஜொஸ்து குருரிதே த்யே ஷாம நீஷாமம" என மனீஷா பஞ்சகத்தில் கூறியதும்,

"பொய்யான வுலகத்தை மெய்யா நிறுத்தியென்
புந்திக்கு ளிந்தர ஜாலஞ் சாதிக்குதே"

"ஜகம்பொய் யெனத் தம்பட்ட மடியே"

"ஜகமனைத்தும் பொய்யெனவே"

"பொய்யா ருலகம்"

என்பனவான தாயுமானவர் பாடலாலும் அறிக.

தத்துவ வியவகாரங்களைக் கூறல்

"தன்மாத் திரைக ளைந்தினையு மோரோன்
 றிரண்டாய்ப் பகுத்தொன்றை
நன்று லாக்கித் தன்பாதி பொழிந்த
 நாலினுடன் கூட்டி
பின்னை யல்லா தவைநான்கி லியல்பிற்
 கூட்ட வானதி
பின்னை தூல பூதமெனப் பிறக்கு மெனவே
 பெயர்த் துரைத்தான்"

நிலைபெற்றுள்ளவனாகிய சீவனுக்குத் தூலசரீர வியவகாரத்திற்கு இன்றியமையாத ஷட்கோசதததுவங்கள் ஆறாகும். சூட்சுமசரீர தத்துவங்கள் இருபதாகும். சீவன், ஈசுவரன், அவித்தை, வித்தை, பிரமம் ஆகிய ஐந்தும் கூடியவைகள் முப்பத்தொன்றும்.

"தோற்றமாஞ் சத்திதன்னிற் சொல்லியவிண்ணும் விண்ணிற்
காற்றதாங் காற்றிற்றீயாங் கனலினீர் நீரின்மண்ணும்
போற்றுமிவ் வைந்து நொய்யபூதங்க ளென்றும்பேரஞ்
சாற்றுமற் றிவற்றிற் போகசாதன தனுவுண்டாகும்"

இதனுள், சீவனுக்குச் சூட்சுமசரீர விவகாரத்திற்குச் சூட்சுமசரீர தத்துவம் இருபதும், அவித்தை, வித்தை, சீவன், ஈசுரன், பிரமம் என்கிற ஐந்தும் ஒன்று சேர்ந்த இருபத்திஐந்துமாம்.

சீவனுக்குக் காரணசரீர விவகாரம் நடைபெறவேண்டியதற்குக் காரணதத்துவம் இரண்டாம். சீவன், ஈசுவரன், பிரமம் மூன்று. சீவனது விவகாரம் நடைபெறச் சீவன்,

ஈசுவரன், பிரமம் ஆகிய மூன்று. சாக்ஷி விவகாரம் நடைபெறச் சாக்ஷி ஒன்றேயாகும்.

"அகில காரணன் தனக்குத் தூலத்தசை விவகார மெல்லாஞ்
சகல போசன மயந்தா னென்றெனச் சூக்கும நாலேந்தோடு
ஈசுவரன் ஜீவன் வித்தை யேற்றமோ ரவித்தை சாக்கி
மாசிலேம் பூதஞ்சேர வறைகுவர் முப்பானாறே"

எனச் சூதசங்கிதையிற் கூறியதுபோல.

ஈசுவரனுக்குத் தூலசரீர விவகாரத்திற்குச் சமஷ்டி அன்னமயகோச தத்துவம் ஆறும். சமஷ்டி சூட்சுமசரீர தத்துவம் இருபதாம். சமஷ்டி, சீவன், அவித்தை இரண்டாம். ஈசுவரன், வித்தை, பிரமம் மூன்றும். தூலபூதமைந்துமாம். ஆக தத்துவங்கள் முப்பத்தாறும் கொள்க.

"அடர்படு சூக்ஷ்ம நாலேந்தாமீமேதா டீசற்சீவன்
விடர்படு மவித்தை மாயைவிலங்கு சூக்ஷ்மபூதமைந்
துடனுறைப் பிரமஞ்சேர வோது முப்பானென்று
திடனுறுமீசன் சூக்மத்துள்ள விவகாரங் கொள்ளே"

தத்துவிசாரத்திற் கூறியதுபோல.

சூட்சுமசரீர விவகாரத்திற்குச் சமஷ்டி சூட்சுமசரீர தத்துவம் இருபதாம். சமஷ்டி அவித்தை இரண்டாம். சூக்ஷ்மபூத மைந்தாம். ஈசுவரன், வித்தை, பிரமம் மூன்றும். ஆகிய மொத்த தத்துவங்கள் முப்பதாம்.

"காரண சரீரதத்துவம் கணித்திடு மூன்றதாகிக்
காரணவீசன் மாயைக் களந்துள பிரமமாகித்
தாங்கி மீசனுக்கீசனென் பிரமம் இரண்டேமேற்
றோங்கு பிரமத்திற் கோதுபு சாக்கியொன்றே"

அஞ்ஞானமாகிய காரணசரீர விவகாரத்துக்கு ஈசுவரன், வித்தை, பிரமம் ஆகிய தத்துவங்கள் மூன்றும். ஈசுவர விவகாரத்திற்கோ ஈசுவரன், பிரஹ்மம் என்கிற தத்துவங்கள் இரண்டாம். பிரஹ்ம விவகாரத்திற்குப் பிரம்மம் ஒன்றே யாகும்.

இந்திரிய வியவகாரத்திற்கு இந்திரியம் ஒன்று; சட்கோச தத்துவங்க ளாறும், அந்தக்கரணம் ஐந்தும், வாயுவைந்தும், சீவன், ஈசுவரன், அவித்தை, வித்தை, பிரம்மம் ஆகிய ஐந்துஞ் சேர்ந்து இருபத்திரண்டாம்.

மனோவியாபார வியவகாரத்திற்கு, உள்ளம், மனம், சுத்தி, சித்தம், அகங்கார மென்னும் அந்தக்கரண மைந்தும், சீவன், ஈசுவரன், அவித்தை, வித்தை, பிரமம் முதலிய வைந்தும் ஆக தத்துவங்கள் பத்தென்பர்.

இப்படித் தத்துவங்களின் தோற்றமும் நிலையுஞ் சொல்லப் பட்டனவாம். இதனை,

"உபாதானே கிலாதாரே ஜகந்தி பரமேஸ்வரே
ஸர்க்கஸ்திதி லயாந் யாந்தி புத்புதா நிவவாரிணி"

என ஆத்தும போதத்தில் கூறியதறிக.

இவ்விதமாகச் சொல்லியதனால், ஈசுவரன் சீவர்களுடைய கன்மத்தை அனுசரித்து உயர்ந்த தாழ்ந்த போகங்களை அவர்கள் அநுபவிக்குமாறு சிருஷ்டி பண்ணுமிடத்து மாயையின் விட்சேபசத்தியினின்று சத்த குணத்தோடுகூடிய சூக்கும ஆகாயமும், அவ்வாகாயத்தி லிருந்து பரிசகுணத்தோடுகூடிய

சூக்கும வாயும், அவ்வாயுவினின்று ரூபகுணத்தோடுகூடிய சூக்கும தேகியும், அத்தேயுவினின்று ரசகுணத்தோடுகூடிய சூக்கும அப்புவும், அவ்வப்புவினின்று கந்தகுணத்தோடு கூடிய சூக்குமப் பிருதிவியு முண்டாயின. இச் சூட்சும பூதங்களின் சத்துவகுணத்தின் சமஷ்டியிலிருந்து அந்தக் கரணங்களும், வியஷ்டியிலிருந்து ஞானேந்திரியங்களும், இராசத குணத்தின் சமஷ்டியிலிருந்து பிராணுதி வாயுக்களும், வியஷ்டியிலிருந்து கருமேந்திரியங்களும் உண்டாயின. அந்தக் கரண சதுஷ்டயம், ஞானேந்திரிய பஞ்சகம், பிராணுதி பஞ்சகம், கன்மேந்திரிய பஞ்சகம் ஆகிய இவைகளின் சமுதாயம் சூக்ஷ்ம சரீரமாம். மிஞ்சின தாமதகுணத்தினின்றும் ஸ்தூல பூத முண்டாயிற்று எனக்கொள்ளுக.

தத்துவங்களின் லயக்கிரமம்

"ஓங்கிய தத்துவங்களெல்லாம் ஒடுங்கிப்போம்
நெறியே தென்னில்
வீங்கிய விமலன் தன்னில் விரிந்துள
படியே வஃகும்
வாங்கிய வொன்றி லொன்று
வீழ்ந்திடு மிறுதியாக
தேங்கிய பிரமத்தோடு காட்சியாய்த்
தோற்ற மாமே.

இதனுல் போந்த பொருளென்னையோ வெனில், தோன்றிய தத்துவங்கள் மீண்டும் ஒடுங்கும் தத்தங் காரணங்களுள் அடங்குகின்ற வழியாவது. சகல சீவரிடத்திலும் இருக்கின்ற தூலசரீரங்கள் அனைத்தும் தமக்கு ஆதாரமான தூல

பூதங்களிலே முன்னிலைமையாக நிற்பதைவிட்டுப் பூதமாத்திர மாக ஒடுங்கும். இத்தூல பூதங்களும் கலப்புவிட்டுச் சூட்சும தமோகுண பூதங்களாக மிஞ்சி நிற்கும். அப்போது சூட்சும பூதங்களாயிருக்கும் நிலை இஃதெனச் சொல்லப்படும். அச் சூட்சுமசரீர தத்துவங்கள் இருபதும் கட்டுவிட்டு பூதங்களது சத்துவகுணம் ரஜோகுணமுமாக ஒடுங்கி விடும். சகலப் பிராணிகளிடத்திலுமுள்ள அகங்காரம் முதலிய பிருதிவியி லடங்கும். சித்தம் முதலியன அப்புவிலொடுங்கும். மனது முதலிய வாயுவி லொடுங்கும். உள்ள முதலிய ஆகாயத்தி லொடுங்கும். இவ்வண்ணம் ஒவ்வொன்றும் ஒவ்வொன்றி லொடுங்க, ஆவணசத்தி விசேட்பசத்தி மூலப்பிரகிருதி தமோகுண மாத்திரமாய் இன்னொரு படைப்பிற்கு வித்தாய் மாயையிலும் அவித்தையிலும் ஒடுங்கும். அந்த மாயையும் அவித்தையும் மிகவும் சூட்சுமமான மூலப்பகுதியான விந்து தத்துவம் பிரமசைதன்னியத்தில் ஒடுங்கும். இப்படித் தேகாதி பிரபஞ்ச மெல்லாம் பொய்யானதை மெய்ப்பொருளல்ல வெனக் காணுமல், அலைகளினுல் வரும் வருத்தத்தை நன்ருகக் கேட்டிருக்கிறவனே சிவன் முத்தன். இதுவே தத்துவாதி களின் ஒடுக்கமாம்.

தத்துவ வகையைக் கூறல்

“சாற்றரிய தத்துவங்கள் சாலமிகு பூதங்களைந்தே யாகும்
மாற்றரிய தூலமாறு சூக்குமந்தா னுலாமைந்தாம்
ஏற்றரிய வித்யாமாயை விளங்கிய வீசற்சிவன்
போற்றிய பிரமத்தோடு புகலுவர் முப்பானுறே.

இப்படித் தோன்றி ஒடுங்குகின்ற தத்துவங்கள் முப்பத்தாறு. அவை:—பூதம்-5, தூலசரீர தத்துவம்-6, சூட்சும சரீர தத்துவம்-20, காரண சரீரமான மாயை, அவித்தை-2, இவற்றிலே பிரதிபிம்பித்த ஈசுவரன் ஜீவன்-2, இவைகளுக்கெல்லாம் அதிஷ்டான சைதன்னியமாய் இருக்கிற பிரமம் ஒன்று. ஆகத் தத்துவம் முப்பத்தாறு.

பொதுவும் சிறப்பும் ஆகிய தத்துவவகை இன்னதென விளம்பல்

"சாற்றுறுஞ் சீவருக்குச் சாற்றிய தன்மைத்தானும்
போற்றுறும் பூதமைந்தும் பொருந்திய மாயைதன்னில்
தோற்றிய வீசனோடு துலங்கிய பிரமமெட்டே
மாற்றிய விருபானெட்டும் வழங்கிடுந் தனியேயம்மா"

"அறிவில்லால் பிரமமில்லை ஐம்பூத மாயையீசன்
பிறிவிதிற் றரையாதாரம் பெய்சல யானமங்கி
தறியடல் வாயுமூச்சு லவுதலா காயமாயை
முறிதரு சமயமீசன் மதங்களின் கடவுளாமால்.

இந்தத் தத்துவங்கள் முப்பத்தாறினுள் சகலப் பிராணிகளாலும் பொதுவாக அனுபவிக்கப் படுவன பூதமைந்து, மாயை யொன்று, மாயாப் பிரதிபிம்பரான ஈசுவரனொன்று, பிரமமொன்றேயாம். ஏனைய இருபத்தெட்டோ வெனில், அந்தப் பிராணிகளால் வெவ்வேறாக அநுபவிக்கப் படும். அஃது எவ்வாறென்றால், பிருதிவி தத்துவம் இறக்கில் யாவருக்கும் ஆகாரமில்லை. மழை இல்லையானால் தண்ணீரில்லை. தேயு வில்லையானால் உணவுப் பொருள்கள் உண்ணுவதற்குப்

பக்குவமாதலில்லை. வாயுவினியக்கமில்லாவிட்டால் வடகாற்றும், தென்காற்றும், உச்சுவாச நிச்சுவாசமுமில்லை. ஆகாசம் இறக்கில் ஒவ்வொருவருக்கும் இடமில்லை. மாயையும் மாயாப் பிரதிபிம்பரும் இறந்தால் சகல சமயத்திற்கும் தெய்வ மென்பதே இல்லை. பிரஹ்மம் இல்லையானால் ஒவ்வொருவருக்கும் அறிவில்லை. இவ்விதமாக ஆலோசிக்கின் இங்கே சொன்னவை எட்டும் யாவருக்கும் பொதுவேயாகும்.

முதற் பாடலில் 'பிரதக்' என்று சொன்னது யாதெனில், தனித்தனியாக அநுபவித்தற்கு உரியவை என்பதாம்.

ஈண்டு உன்னிநோக்கின், ஒவ்வொருவனுக்கும் தான் பெற்றுள்ளதான தூலசரீரம் இறக்கில், மற்றைய யாவருக்குமுள்ள தூலசரீரம் இறவாதபடியாலேயும், சூட்சும சரீரத்தில் ஒருவனுக்கு உறுப்புக்குறைவு வந்தால், அவை யாவருக்கும் வராதபடியினாலும், முத்தராய் இருக்கின்ற சுகர் வாமதேவர் முதலியோருக்கு அவித்தையும் சீவனும் இறந்துபோயிருக்க மற்றவர்களுக் கெல்லாம் அவித்தையும் ஜீவனும் இறவாமல் இருக்கிறபடியினாலும் இந்த இருபத்தெட்டுத் தத்துவங்களும் ஒவ்வொருவருக்கும் வேறு வேறு என்பதிற் சிறிதும் ஐயமே இடையா தென்பது திண்ணம். இதனையே,

"அங்கியமாந் தூலவுட லகன்றிடினு
மொருவருக்கு மற்
றுன்னியசூ க்குமவுட லெக்கானு
மொழிவுறாது நிரந்தரங்
கண்ணிய வாமதேவருட சுகராதி முத்தர்க்
கெல்லா மன்னியமாம்

பன்னியம வித்தைச் சீவனிறந்திறந் தன்னிய
தத்துவமிரு பானெட்டே" என்ருர்.

மேலேகூறியவைகளில்லாமலும், இந்தத் தத்துவங்கள் முப்பத்தாறில் எப்போதும் தாளுகவே காணப்படுகிற தத்துவம் ஒன்று. எப்போது தனக்கன்னியமாகக் காணப்படுகிற தத்துவங்கள் ஏழு. இதுவுமன்றி, தாளுகவும் தனக்கு அன்னியமாகவும் அனுபவிக்கப்படும் தத்துவங்கள் இருபத்தெட்டு என்பதாம்.

முப்பத்தாருந் தத்துவம் ஆத்மவடிவ சிவம் என்பதை விளங்க வைத்தல்

"பகருந் தத்துவங்கள் முப்பா ஞறில்
நிகருந் தத்துவ மொன்றே நிரந்தரமாம்
அன்னிய மாகவெங்கு மவிர்தரு மேழேதன்மை
பன்னியவை காண்பார் நாலேழுமென் பாரன்றே"

என்கிறபடி, அவஸ்தாத்திரிய சாக்ஷியாகிய பிரம சைதன்னிய மானது எல்லா அவஸ்தைகளிலும் தாளுக விளங்குகையினுலும், அது மற்றைய தத்துவங்களைப்போல அன்னியமாக இருந்து விளங்காமையினுலும், அப் பிரம சைதன்னியம் ஒன்றுமே தாளுக விளங்குகின்றது எனத் தெரிதல் வேண்டும்.

"முப்பா ஞறெனுந் தன்மையுளே யொன்றுதானே யோங்கும்
மூன்று அவத்தை களிநற்சாட் சியாகிவிரிந்தே தோற்றும்
மித்தையொரு தத்துவத்தில் இலக்கணமாய்ப் பொலியுமிந்த
சுத்தமாய் பிரமமென்று முனிவர்தா மொழிவா ரந்தோ"

இப்பாடலில் பஞ்சபூதம் மாயாதத்துவம் மாயா பிரதி பிம்பர் இவ்வேழினது தொழில்கள் வெவ்வேறு ஆனதினாலும் தனக்கு வேறுபட்டதாம். அந்தணன் அரசன் முதல்துறவி ஈறாகவுள்ள ஜீவர்கள் தூலசரீரத்தைத் தானாகவே நினைத்து என்னுடம்பு சிவந்தது, என்னுடம்பு பருத்தது. என்னுடல் பிறந்து இவ்வளவு நாளாக வளர்த்து வந்தேன் என்பது ஈறாகப் புறம்பாகப் பேசுவதாலும் தனக்கு வேறுபட்டது என்றதாம்.

"நிலையுற்ற தத்துவங்கள் நீங்கிடவே நாலேழுக ளானவற்றை
அலையுற்றுத் தன்னதா யன்னியமாய் அறைவ சிவராங்கே
மலையுற்ற தூலமாந் தத்துவங்களாறும் பருத்தே மாயும்
கலைகற்ற மேலோர் களிதன் விரிவுகரு திச்சொல்வார்"

"நாலைந்தாஞ் சூக்குமங்கள் நவிலக்கே
டயர்ந்தே னின்றேன்
தாமாயுந் தத்துவங்கள் தலையெடா
தொழிந்தே போகும்
வீமான சிவவித்தை கண்டுங் காணேனென்
றுக்கியது அறியாமையாமே
தாமான தன்மையு ணர்சிவன்நின் றுவுலவுமதா
யந்நியமே மாதோ"

நான் கண்டேன், நான் கேட்டேன், நான் புசித்தேன், நான் ஜீவித்தேன், நான் கொண்டேன், நான் விண்டேன், என்பவை ஈறாகச் சொல்லப்படும் ஒவ்வொன்றும் தானாக விளங்கும் சூட்சும சரீரத்துவம் இருபதும், வேறு சமயத்தில் என் வாய், என் கண், என் கை, என் தலை என்பது முதலாகவும் என்னுயிர் எனவும் வேறு வேறாக விளங்குவதாலும், நான்

அறிவேன், அறியேன் என்று தானாகவே விளங்கும் அஞ்ஞானமும், சிதாபாஸன் ஒவ்வொரு சமயத்தில் தன்னை மறந்து இவ்வேலை என்னிலும் வேறுபட்டது; இது என்ன வேலை; இது என்ன ஞானம்; என்ன சீவன் என்று தனித்து விளங்குவதாலும் இருபத்தெட்டு தத்துவங்களும் தானாகவும், தன்னிலும் வேறுபட்டதாகவும் விளங்குந் தன்மைத்தாகவும் விளங்குகின்றவையே யாகும்.

இதனாலும் இருபத்தெட்டு தத்துவமும் தானாகவும் தனக்கு வேறாகவும் வழங்கப்படுதல் நிச்சயமாயிற்று என்பது உறுதியாயிற்று.

அவைகளைக் கேட்ட சீடன், குருவை நோக்கி, சுவாமி! யான் கொண்ட ஆசங்கையினைக் களையவேண்டும். ஏனென்னில், தேவரீர் திருவாய்மலர்ந்தருளியபடி இருபத்தெட்டு தத்துவமும் தானானால் சாட்சியைப்போல ஒரு தன்மையாக அல்லவா தோன்றுதல் வேண்டும். அப்படியல்லாமல் பஞ்சபூதத்தைப் போலத் தன்னில் வேறுபட்டதாகக் காணக் காரண மில்லையே. தேவரீரது உபதேசத்தின்படி அவ்விருபத்தெட்டாகிய தத்துவங்களும் தன்னில் வேறாகுமேயானால் எப்போதும் புறம்பு பட்டே நிற்கவேண்டுமே அல்லாமல் தானாக வழங்கக் காரண மில்லை. அவைகள் தானுமாய்த் தனக்கு வேறுமாய் இருக்கும் என்பது இருட்டுவடிவ சூரியன் என்றாற்போல் விருத்தமாக வன்றோ தோன்றுகின்றது என்றான்.

குரு:—அப்பா! நான் சொல்லுவதைக் கவனித்துக் கேட்பையாக. உண்மையை ஆராய்ந்தாயானால், உண்மை

யாகத்தான் எவனே பிரம்ம தரிசனமுடைய சீவன் முத்தன் என்று சொல்லப்படும்.

அது தான் என்று அறிதல்:—தனது உண்மையான வடிவம் என்று உள்ளவாறு ஒரு விகற்பமில்லாமல் தானே தானய் நிலைத்தலாம். இதனையே, சவிகற்ப சமாதியில் கூறிய சுத்தத் திரிபுடியின் நிவிர்த்தியோடு சித்தம் அத்விதீய பிரஹ்மத்தில் நிலைத்தலாகிய நிர்விகற்ப சமாதியென்பது. மற்றும் இதனைச் சகல விருத்திகளின் நிரோதத்தோடு சித்தம் நிர்விகற்ப பிரஹ்மாகாரமாய் நிலைத்தல் என்பர். இதனை,

"கடமெனு முபாதி போனற் ககனமொன் ருனற்போல
உடலெனு முபாதி போன வுத்தாஞ் சீவன் முத்தர்
அடிமுடி நடுவு மின்றி யகம்புற மின்றிநின்ற
படிதிகழ் விதேக முத்திப் பதமடைந் திருப்பர் முத்தர்"

என கைவல்லியமும்,

"யத்ர யத்ர ம்ருதோ ஜ்ஞானீ யேந வாகேந ம்ருத்யுநா
யதா ஸர்வகதம் வ்யோம தத்ர தத்ர லயம் கதஃ
கடாகாஶ மிவாத்மாநம் விலயம் வேத்தி தத்வதஃ"

என உபநிஷத்துங் கூறும்.

சீவன் முத்தன்:—தத்துவஞானம், மனோநாசம், வாசனுக்ஷயம் என்னும் மூன்றையும் உடைமையால் பந்தரகிதராகி நனவில் சுழுப்தியைப் பெற்றிருப்பார்கள். நனவிற் சுழுத்தியாவது சாக்கிராவஸ்தையிலே சுழுத்தியவஸ்தையைப் பெற்றிருத்தலாம். அதாவது ஞானஞ்ஞான ரஞ்சிதமாக இருத்தல்.

பந்தமோட்சங்களின் காரணங் கூறல்

"அஞ்ஞா னத்தா லிராகாதி யடர்ந்து
தருமா தருமம் வளர்த்
தெஞ்ஞான் றுந்துன் புறுபிறப்பு மிறப்பு
மென்மே லுறுநிற்குஞ்
செஞ்ஞா யிறுதண் மதியழற்கட் டெய்வப்
பெருமான் றிருவருட்சேர்
மெஞ்ஞா னம்பெற் றிடினன்றி விடுமோ
கொடிய வஞ்ஞானம்"

என்ற சூதசங்கிதையின்படி,

இவ்விதம் பிரஹ்மமே தான் என்றும், ஏனைய முப்பத்தைந்து தத்துவங்களும் தனக்கு வேறுபட்ட தென்றும் பிரித்து அறியாத அவிவேகி, அகங்காரக் கிரந்தியினால் புத்திரன் மனைவி முதலானவர்கள் தவிக்கின்றதைத் தான் தவிக்கின்றேன் என்றும், மூடத்தனத்தைக் காண்பித்துக் கொள்வது போல இவ்விருபத்தெட்டுத் தத்துவத்தின் தொழிலையும் தன் தொழிலென்று மயங்குகின்றபடியால், இந்த இருபத்தெட்டினால் சம்பாதிக்கப்பட்ட புண்ணிய பாவங்களினால் கட்டுப்பட்டு |அந்தக் கன்மத்தின்படியே பிறப்பு இறப்பென்கிற தொருவகையும், மயக்கத்தாலே தான் என்கிற தொருவகையும் ஆக இரண்டுவகையான பிரிவுண்டு.

ஆலோசித்து அகக்கண் கொண்டு பார்ப்பையே யானால், சாட்சி சைதன்னியத்தைத் தான் என்கின்றது உண்மையால் உபசாரமாகச் சொல்லுவதல்ல.

இப்படித் தன்னின் வேறுபட்டிருக்கிற இந்த இருபத்தெட்டையும் 'தான் என்றது கட்டையைக் கள்ளன் என்றாற் போலவும், பழுதையைப் பாம்பு என்றாற் போலவும், புத்திர தாராதிகளைத் தான் என்றாற்போலவும் கொள்ளும் மயக்கமே அல்லாமல் பிறிதொன்றல்ல.

ஆகையால், அஞ்ஞானகாலந் தொடங்கித் தான் அல்லவென்று காணப்பட்ட தத்துவம் ஏழு. இப்போது இப்படிப் பட்ட விவேகம் பண்ணின பிற்பாடு, தானல்லவென்று காணப் பட்ட தத்துவங்கள் இருபத்தெட்டு.

7 + 28 = 35, இம் முப்பத்தைந்து தத்துவங்களையும் அதற்குச்சொன்ன சிறப்பியல் என்னும் அடையாளங்களுடனே கூடக்காணும் அறிவு கடத்தைப் பார்க்கிறவன் கடத்திற்குப் புறம்பாகவே இருந்து கடத்தைப் பார்ப்பது போல, இம் முப்பத்தைந்து தத்துவங்களையும் காண்கின்ற முப்பத்து ஆறாந் தத்துவமாகிய பேறறிவு என்று உணர்ந்து, அது தான் என்று அறிந்து, அது தானே பிரமமென்று தெளிந்த பிறப்பாகிய சம்ஸாரக்கடலிலே அடிபடுகின்றேன் என்று மயங்குகின்றான்.

"சத்திய ஞானாநந்த சொரூபமாகிச்
சந்ததமு முபசாந்த சொரூபமாகி
மெத்தவுமே வியாபகமாஞ் சொரூபமாகி
மிகப்பெரிதாஞ் சிதாகாச சொரூபமாகி
நித்தியசின் மாத்திரமாஞ் சொரூபமாகி
நிகிலபரி பூரணமாய் நிறைந்துநின்ற

சுத்தமதாம் பரப்பிரமந் தானேயாகிச்
சும்மாவே யிருந்திடுவோன் விதேகமுத்தன்"

இப்பாடலால், பிரஹ்ம சைதன்னியமே தானென்றும், மற்ற முப்பத்தைந்தும் தானல்லவென்றும் தெளிந்த விவேகியானவன் அகங்காரகிரந்தி அற்றபடியினால் இந்த இருபத்தெட்டுத் தொழில்களையும் நான் செய்யவில்லை. இந்த இருபத்தெட்டும் புசிக்கின்றதை நான் புசிக்கவில்லை என்று திடப்படத்தேறி மயக்கமற்று இருக்கின்றபடியால், இவ்விருபத்தெட்டால் ஆர்ச்சிக்கப்பட்ட புண்ணியபாவங்களி னின்றும் விடுபட்டுக் கன்மம் இல்லாதபடியினால் பிறப்பு இறப்பாதி சம்சாரம் இல்லாமல் முத்தனாகிப் பிரம்ம மாத்திரமாகவே இருப்பன்.

"பிரமமகா நந்தத்தில் வசிப்போனாகிப்
பிரமமகா நந்தமநு பவிப்போனாகிப்
பிரமமகா நந்தத்தான் மகிழ்வோனாகிப்
பிரமமகா நந்தத்தாற் பிறங்குவோனாய்ப்
பிரமமகா நந்தத்தா னிறைந்தோனாகிப்
பிரமமா நந்தத்தில் லயிப்போனாகிப்
பிரமமகா நந்தமதே தானாய்நின்றோன்
பின்னமிலாப் பரமானஜீவன் முத்தன்"

இப்பாடலால் அறியவேண்டுவது சீவன்முத்தரின் தன்மையை அறிதலாம். சீவன்முத்தர் பிராரத்தவினைக்கேற்றவாறு அவ்வக்காலத்து அடையப்படுகின்ற போகங்களிலே விருப்பு வெறுப்பு அற்றவராயும் சந்தோஷம், வியசனம், பயம், கோபம், ஆசை, சிக்கனம் முதலியவற்றால்

கலங்காதவராயும், அகங்காரவடிவாயுள்ள வாசனையையும் தியானிக்கப்படும் வஸ்துவையும் நீக்கிச் சொரூபாகாரமாக நிலைத்தவராயும், சகல துக்கங்களிலிருந்தும் விடுபட்டவராயும், பரிசுத்தமன முடையவராயும், உண்மை நோக்கில் யாதொன்றி லும் அபிமானமற்றவராயும், ஒன்றையும் அளவிற்கு மிஞ்சி விரும்பாதவராயும், இருப்பு விளங்கல் பிரியநாமரூபவடிவா யுள்ள வுலகில் மாயாகாரிய மாயநாமரூபங்களை அஸ்திபாதி பிரியத்தில் விலயமாக்கி யாவற்றையும் சச்சிதானந்த வடிவ மாய்க் காண்பவராயும், விருப்பு வெறுப்பு, சுகதுக்கம், பலா பலம் என்றற் றொடக்கத்துத் துவந்துவங்கள் உண்டாகிய விடத்தும் நடுநிலையினின்றும் பிறழாது உலகோபகாரமாகச் செய்யவேண்டிய வேலைகளை ஒழுங்காய்ச் செய்பவராகியும், கருமஞ்செய்யுமிடத்து அதனை அகங்காரமும் அபிமானமும் பொறுமையும் மனக்கலக்கமுமற்று மௌனமாய்ச் செய்பவ ராகியும், காண்பான் காட்சி காணப்படும்பொருள் என்னும் திரிபுடிக்குஞ் சாக்ஷியாய் விளங்குபவராயும், ஆடம்பரமான வஸ்துக்கள் எவ்வளவு நேரிட்டாலும் அவ்வளவிலும் அபி மானம் சிறிதும் இல்லாதவராயும், அப்பியாசகாலத்தில் மயக்கத்தை உண்டாக்குவதற்குக் காரணமாகிய பழையதும் மூசியதும் மாமிசாதிகளுமாகிய தாமத பதார்த்தங்களும், மமதையை உண்டாக்குவதற்குக் காரணமாகிய கடினமும் உறைப்பும் காரமும் புளிப்பும் உப்பும் சூடானதுமாகிய ராஜஸ பதார்த்தங்களையும், விலக்கி மயக்கத்தையும் மமதையும் நீக்கித் தத்துவஞானத்தை உண்டுபண்ணுவதற்குக் காரணமாகிய தித்திப்பாயவஸ்து அன்னம் முதலியனவுமாகிய சாத்வீக

பதார்த்தங்களை யுண்டுவந்த நியமத்தைவிட்டுத் தித்திப்பு, புளிப்பு, கார்ப்பு, காழ்ப்பு, கைப்பு, துவர்ப்பு என்னும் சட் ரஸங்களையுடைய உணவுகளுள் இது குணமானது, இது குற்றமானது, இது சுத்தமுடையது, இஃதசுத்தமுடையது, இது பத்திய பதார்த்தம், இஃதபத்திய பதார்த்தமென்று பகுத்து நோக்காது காட்டுத்தீப்போன்று கிட்டினதைப் பொறுமையுடன் உண்பவராயும், தள்ளாமை, மரணம், ஆபத்து, தரித்திரம் முதலியவைகளையும் அரசசெல்வத்தை யும் ஒருபடித்தாய் எண்ணி அநுபவிப்பவராயும், மரணத்தைச் சந்தோஷமாய் எதிர்பார்ப்பவராயும், பெற்றுளதில் வெறுப்பும் பெறுததில் விருப்பும் இன்றியவராயும், "தாமரை இலை நீர் போலும்" "புளிதந்த பழத்திஞேடு போலும்" இல்லறத் துள்ளவராயும் துறவறத் துள்ளவராயும் இருப்பர். மேலும் நினைத்தற்கும் மறத்தற்கும் மத்தியகத நிலையாய சொரூபத்தில் பிறழ்ச்சி இல்லாமல் நிற்கும் சீவன்முத்தர்கள் சென்றதைக் கருதாராகியும், இனிச்சேர்வதை நினையாராகியும், கண்முன் பிராரத்த வினையால் நேரிட்ட உணவைப் புசிப்பாராகியும், எத்தகைய அற்புதத்தைவியவாராகியும் இது நன்று, இது தீது என ஒன்றையும் குறிப்பிட்டுக் கூறுதவராயும் இருப்பார். ஜீவன்முத்தனாகியவன்,

"ப்ருஹ்மை வாஹம் சிதேவாஹ மேவம்வாபி நசிந்த்யதே
சிந்மாத்ரேணைவ யஸ்திஷ்டே த்வைதேஹீ முக்தஏவஸঃ
நிஸ்சயஞ்ச பரித்யஜ் சஅஹம் ப்ருஹ்மேதி நிஸ்சயம்
ஆநந்தபரி தஸ்யாம்தொவைதேஹீ முக்த ஏவஸঃ"

என்றபடியும்,

"ஞானமடைந்த பொழுதிலிவ னல்வீடுற்றுன் மனமிறந்தோ
னினமான வகம்பாவப் பிராந்தியன்றே விடர்பந்த
மானவீடா விதுமடமை யந்தகாரங் கெடலன்றே
மானமிகுந்த விவனெய்தின் மனிதர்பூஜை செயவேண்டும்"

என்றபடியும், இச் சீவன்முத்தன், திடப்ரக்ஞன், அதி வருணச்சிரமி, குணதீதன், பகவத்பக்தன், பிராமணன் என்று ஆறு பெயர்களுண்டு. சீவன்முத்த விலக்கணம் முன்னரே கூறப்பட்டது. ஆயின் சீவன்முத்தன் பிரபஞ்சத்தையும், அதன் விருத்திகளேயும் நன்ருக அறிந்துகொண்டும் பிரமாகார சிந்தனையாய்ச் சிரவண மனன நிதித்தியாசனத்தின் இருப் பவன்.

சிரவணம்:—சட்வித லிங்கத்தினுல் வேதாந்த வாக்கியத் தின் தாற்பரியத்தை நிச்சயஞ் செய்வது சிரவணமெனப்படும். [சிரவணமாவது சற்குருவாயிலாக வேதாந்தார்த்தத்தை அன்புடன் கேட்டல்.]

சட்விதலிங்க லக்ஷணம்:—மறைந்துள்ள அக்கினியின் ஞானத்தைக் காணப்படும் புகையுண்டு பண்ணுவதால் அக்கி னியை நிச்சயித்தற்குப் புகை லிங்கமாக இருத்தல்போல் வேதாந்த வாக்கியங்களின் பொருளாகிய அத்வைத சொரூப ஞானத்தை உபக்கிரம உபசங்காரமாதிகள் உண்டுபண்ணுவ தால் பொருளின் நிச்சயத்திற்கு அவை இலிங்கங்களாக விருக் கின்றன. அவைகள்:—உபக்கிரம உபஸம்காரம், அப்பியாசம், அபூர்வதை, பலம், அருத்தவாதம், உபபத்தி என்பன. இவை களின் விரிவைப் பெருநூலிற் கண்டுகொள்க.

மனனம்:—சிரவணத்தினாலே பரோக்ஷமாய் அறிந்திருக்கின்ற அத்வைதவடிவ ஆத்மாவை யுக்தி தருக்க அனுமான வாயிலாகச் சிந்தித்தல்.

நிதித்தியாசனம்:—அனாத்மாகார விருத்திகளைத் தடுமதல், பூர்வகமான ஆத்மாகார விருத்திகளின் பிரவாகமாம். அதாவது, சிந்தனையினால் நிச்சயிக்கப்பட்ட ஆத்மாவில் சித்தம் நிச்சலமாக விருப்பதாம். அன்றி, சாதன சதுஷ்டயத்துடன் கூடி அவதி பரியந்தம் நன்றாய் அநுஷ்டிக்கப்பட்ட சிரவண மனனங்களேயா மென்றுமாம்.

அருத்தவாதம்:—சுருதியை அல்லது நிந்தையை அறிவிக்கும் வாக்கியம். இங்கே பேதஞானத்தின் நிந்தையை அபேத ஞானத்தின் சுருதியையும் அறிவிக்கும் வாக்கியத்தினைச் சொல்லுவது இவ்வருத்தவாதம். சிருஷ்டி, திதி, பிரளயம், பிரவேசம் முதலியவை. அர்த்த விசாரம்—உண்மையை உள்ளபடி அறிவது. அஃதென்னையெனில், தத்வமஸி, என்னும் மகாவாக்கியப் பொருளை அறிதலாம். இதனை,

“மய்யேவ ஸகலம் ஜாதம் மயி ஸர்வம் ப்ரதிஷ்டிதம், மயி ஸர்வம் லயம்யாதி தத்ப்ரஹ்மாத் வயமஸ்யஹம், அணோரணீயா நஹமேவ தத்வாந்ம ஹாநஹம் விஸ்வமிதம் விசித்ரம்” என்ற கைவல்லியத்தாலறிக.

பலம்:—பிரமவித்துப் பிரம்மமாகின்றான். அது, “ப்ரஹ்மவிதாப்னோதி பரம் அம்ருதஸ்ஸமவ பவத்” என்கிற சுருதி வாக்கியங்களால் அறிக.

உபபத்தி:—சொல்லும் விஷயத்தில் அநுகூலமான யுக்தியைச் சொல்லுவது. உதாரணமாக, மண்ணிற்கும் கடாகாசத்திற்கும், பொன்னிற்கும் அதனின்றுண்டான ஆபரணாதிகளுக்கும், நூலுக்கும் அதனின்றுண்டான ஆடைக்கும் பேதமில்லாமல் இருத்தல்போன்று காரணப்பிரம்மத்திற்கும், அதன் காரியமாய ஜகத்திற்கும் பேதமில்லாமை எனக் கூறுவதே என்று அறிந்து கொள்ளுக.

"நலமுறு மோர்நல் ஞானரக்ஷைதனைத் தவத்தோடும்
புனல்விஷம வாதங்க ளெவையும் விட்டுக்
குலமுறு மோர்துன்பக் குலவிலக்கு மேலாய்ச்
சுற்றிய சுகவிற் பாவத் திேனாடும்
நிலையுறுந் துக்கப் பிரயோசனங் களைந்துந்
தோய்ந்து ஆய்ந் துண்டு நின்றோர்
தலையுறுஞ் சுகத்தைச் சார்ந்துபரி பூரண
மாந் தத்துவத்தைச் சேர்ந்த முத்தன்"

இதில், ஞானரக்ஷை என்றது—பிரமமே அநுஸந்தானம் செய்கையில் மனம் கரைந்து நிற்றல். தபசு—அங்ஙனம் கரைந்த மனமானது வேறுவிடத்திற் செல்லாமல் ஒரு நிலைப் பட்டு நிற்றல். உயர்வு தாழ்வு என்னும் வித்தியாச மில்லாமல் எல்லோரும் வந்து வணங்குதலே விஷமவாத மில்லாமை என்பர். பஞ்சவிதமான துக்கம் நீங்குதலினையே துக்க நிவிர்த்தி என்றமை. சுகாவிற் பாவம்—ஆனந்தம் இடைவிடாமல் உண்டாதலே யாகும். இத்தன்மையான ஐந்துவகையான நீக்கத்தைத் தன்னிடத்திற் பெற்றிருப்பவனே சீவன் முத்தன்.

"ஈனமிலாச் சமாதியினி லிருமையின்றி யேபரி
பூரணமா யிருப்போனுகி
யூனமிலாச் சமாதிபிரிந் திருக்குங்காலை யுலகத்தி
லுதாசீன விருத்தி மேவி
மானமவ மானமுத லெவையு மின்றி மைத்திரியே
முதலான குண நிறைந்து
தீனமுறுக் கெம்பீர சுபாவமாகித் திகழ்சீவன்முத்தனு
நானுனே னையா"

இதில் சொல்லியபடி, அவித்தை, அசிமிதை, ராகம், துவேஷம், அபிநிவேசம் என ஐந்து. இவற்றுள்; அவித்தை யாவது, ஆத்மாகாரத்தை அனுத்மாகார மாக்குதலாம். அசிமிதையாவது—புத்தியே ஆத்மா வென்றும், ஆத்மா ஏகன் அநேகன் என்றும் சாக்கியமத சித்தாந்தத்தினது கோட்பா டாகும். இவற்றின் விரிவை மோக்ஷஸாதன விளக்கத்திலும், விருத்திப் பிரபாகரத்திலும் அறிக. இராகமென்பதற்கு—பற்றுதலெனவும், துவேஷமென்பதற்கு, விடுதல், கோபம் எனவும், அபிநிவேச மென்பதற்கு, மரணபயம் இச்சை எனவும் பொருளாம். இவைகளை யெல்லாம் முன்னே விளக் கப்பட்டனவாயினும் ஈண்டு கூறியது கூறல் என்னுங் குற்ற மாக்காமல், விதிவழி விளக்கியதாம். இப்பஞ்சக் கிலேசங்களை விட்டவனே ஜீவன்முத்தனும்.

முன்னங் கூறிய சீவன்முத்தர்களின் தன்மையாவது.

சீவன்முத்தியாவது யாதெனில், கர்த்ருத்துவம், போக்த் ருத்துவம் ஆகிய இரண்டும் நீங்கியிருப்பதுவேயாம். மற்றும் பிரபஞ்சத்தோற்றத்தோடு பிரமஸ்வரூபமாகநிற்றல்எனவுமாம்.

சொரூபமாவது:—ஆத்மாவிற்கும் அனாத்மாவிற்கு அத்தியாச ஐக்கியத்தை வேறு செய்து ஆத்மா தானென்றும், அனாத்மா தானல்லவென்றும் அறிவதேயாம்.

குணாதீதன்:—சாத்துவீக ராஜஸ தாமஸாதி முக்குணங்களின் தன்மைகளைக் கடந்து அவஸ்தாத்திரயங்களுக்கு வேறுபட்டவனாக விருப்பவன்.

பகவத்பக்தன்:—ஸகலவிதமான உலகப்பொருள்களிலும் ஓரேமாதிரியாய் மயக்கத்தைக்காணும் தியானயோக மனதையுடைத்தான யோகி. அவ்யோகிதானே அவ்வஸ்துக்களில் ஊனாகப் பார்ப்பவன்.

பிராமணன்:—ஞானயோகத்தால் பிரமத்தை அறிந்து, அவ்வடிவமாக நிலைத்தவன்.

திடப்ராஞ்ஞன்:—போதகாசிரியன் கிருபையால் சீவபிரமங்களின் ஒருமையினை நன்கு அறிந்து சமாதிகூடிக் கலங்காது அறிவே தனது ஆகாரமாக இருப்பவன்.

அதிவர்ணாச்சிரமி:—வருணம் நான்கையும், ஆச்சிரமம் நான்கையும் கடந்து இவைகள் ஸ்தூல தேகத்தின் கற்பனையே என்று விலக்கியதற்குச் சாக்ஷியாக நிற்கும் வடிவத்துடனே நிற்கப்பட்டவன்.

விதேக முத்தன்:—நிருவிகற்ப சமாதியில் இருப்பவன். விதேகமுத்தி—தேகாதிப் பிரபஞ்சம் பொய்யாகவேனும் தோற்றுதலின்றிப் பிரஹ்ம சொரூபமாக நிலைத்தலாம். அதாவது, தூலசூக்கும காரண மென்னும் மூன்று தேகமும் நீங்கிப்போதலாகும்.

விதேகமுத்தியின் கிரமம்

"காலமே காரணமாய்க் குடும்ப வாழ்விற்
காதலொழித் தறச்செறிந்த காயந்தன்னைச்
சாலமிகு தொழிற்பறவைக் கிடமாங் கூட்டைச்
சானவியின் கரைவரையிற் றுனே தீர்ந்தான்
கோலியொரு சுமைசுமப்பான் குறித்த வெல்லைக்
கொண்போய்ப் போடுவபோற் குரம்பை போட்டு
மாலுறுபற் றென்றின்றிப் பூவினூற்றம்
வானுறல்போற் பரமபதவாழ்வு பெற்றான்"

இதன் பொருள். மேல் எக்காலத்திலும், எத்தேசத்தினும் யாதென்றும் அடையாமல் சச்சிதானந்த பிரமசொரூபத்தில் ஒன்றாக இருப்பதனையே விதேகமுத்தி யென்பர். ஆயின், சீவன்முத்தியும் விதேகமுத்தியும் உண்டெனத் தெரிகின்றமையால், விதேகமுத்திக் கிரமத்தில் சீவன்முத்தியும் அறிதலும் சாலச் சிறந்ததெனக் கொள்ளுதலே சிறப்புடைத்து. கிளிஞ்சலில் வெள்ளியைப் போலவும், கயிற்றில் பாம்பைப்போலவும், கட்டையில் புருஷனைப் போலவும், இருக்கின்ற விபரீத ஞானம் நீங்கியதன் பின்னர் சிறிதுநேரம் அம்மயக்கத்தின் காரியமான பழக்கத்தாலுண்டாகும் நடுக்கம் முதலிய இருத்தல் போன்று தத்துவ ஞானத்தால் அஞ்ஞானம் கெட்டதன் பின்னரும் அதன் காரியமான தேகாதிப் பிரபஞ்சம் பிராரத்த கன்மம் இருக்கும் வரையில் தோற்றிக்கொண் டிருக்கிறது. அப்படித் தோற்றிக்கொண்டிருக்கும் நிலைதான் சீவன்முத்தி என்பது. அப்படி யல்லாமல் தத்துவஞான உற்பத்தி காலத்திலேயே அஞ்ஞானமே அல்லாமல் அதன் காரியமுங் கெடுமாயின்

பிரவித்யாசம் பிரதாயம் இல்லாமல் போய்விடும். அங்ஙனம் போனல், பரமேசுவரனல் பிரமனும், பிரமனல் பிரஜாபதியும், பிரஜாபதியால் மனுவும், மனுவினல் சகலரும் தத்துவத்தை அறிந்தார்கள் என்று பிரம்மவித்தியா ஸம்பிரதாயத்தைக் கூறுவதான சாந்தோக்கியத்திற்கு விரோதம் வரும். அஞ்ஞானததின் ஆவரணம்சம் தத்துவஞானத்தினலும், விட்சேபாம்சம் பிராரப்தம் ஒழிவதாலும் நிவர்த்தியாவனவாய் இருத்தலின், சீவன்முத்தியும் விதேகமுத்தியும் கிரமமாக உண்டென அறிதற்பாற்றும்.

உபாதி என்பது சிறிதும் இல்லாமல் பிரம வடிவமாகவே நிலைத்தல் விதேகமுத்தியா யிருத்தலின், விதேகமுகத்தின் பின்னர் அடையததக்கது ஒன்றுமில்லையாம். தெளிந்த நீர் உள்ள குளத்தின்கரையில் இருப்பவன்தான் அக்குளத்தில் அதோமுகமாகத் தோன்றுவது பொய் என்று உணர்ந்த காலத்தும் அவனுக்கு அம்முகப் பிரதிபிம்பம் தோன்றுவது போன்று, தத்துஞானத்தினல் அவித்யா சம்பந்தமான சீவத்துவம் யாவும் பொய். தான் பிரத்தியபின்ன பிம்பமென்று விவேகி அறிந்தகாலத்தும் அவனுக்கு அவை கானனீர்ப[illegible] தோன்றிக்கொண் டிருக்கின்றன. அதனல் அவனுக்கொரு கெடுதியுமில்லை. இங்ஙனம் தோன்றிக்கொண் டிருக்கும் நிலையே சீவன்முத்தியாகும். நீர்வற்றிய காலத்து அவ்வதோமுகம் தோன்றுமை போன்று விட்சேபம் நீங்கிய காலத்துத் தேகாதிப் பிரபஞ்சம் தோன்று தொழிவது விதேகமுத்தியாகும். இதுவே ஆனந்தம்.

நாநாசிவவாதக்கட்டளை விருத்தியுரை முற்றிற்று.

ஔவைக்குறள்

மூலமும் உரையும்

இதன் விலை ரூ 1

இந்நூல் வரகவிகளில் சிறந்த ஔவையாரருளிய ஆன்ம ஞான நூல். இது திருக்குறளைப்போல் பண்டிதர்களும் பாவலர்களும் உரை எழுதக்கூடியதன்று. இது ஆன்ம ஞான சாதனைகளைப் புகட்டு நூல். ஆன்மஞான இன்பத்தை அவாவி அம்மெய்ச் சுகத்தில் ஈடுபடும் மெய்யன்பர்களுக்கே இது பெரிதும் பயன் அளிக்கும். இத்தகைய சிறப்புவாய்ந்த நூலுக்கு சென்னை பிரம்ம வித்தியாசங்க ஸ்தாபகரும் அச்சங்கத்தின் குருவுமாகிய ஸ்ரீலஸ்ரீ. ஈ சுந்தரமாணிக்க யோகீஸ்வரர் அவர்கள் தாம் ஐம்பது ஆண்டுகளாய் உழைத்துப் பெற்ற சிறந்த ஆன்மஞான அனுபவத்தைக் கொண்டு உரையெழுதியது. இதில் வ்யோமசக்கரம் அல்லது குண்டலி என்னும் படமும் விநாயகசொரூபம் என்னும் படமும் ஆகிய இரண்டு படங்களுடன் உரையாசிரியர் படமும் சேர்த்து அழகாய் அச்சிட்டு பயிண்டு செய்யப் பெற்றுளது.

விலாசம்:—

அ. இரங்கசாமி முதலியார் ஸன்ஸ்

24, தாண்டவராயப்பிள்ளை வீதி,

சென்னை.

கந்தரனுபூதி

மூலமும் உரையும்

இதன் விலை அணா 12

நாதர் என்பது இவரது தீக்ஷாநாமம். இவர் குமரக் கடவுளையே குருவாகவுந் தெய்வமாகவுங் கொண்டவர். இவர் இளமையிற் சிற்றின்பத்தி லுழன்று பின்னர்த் துறவுபூண்டு சண்முகோபாசனை செய்து அதனிற் சித்தியுற்ற நாதரென்னும் பெயரெய்தி முருகக்கடவுள்மீது மணிப்பிரவாளம் என்று கூறுமாறு தமிழும் ஆரியமுங் கலந்த மொழிகளால் பல சந்தப் பாக்களையும் விருத்தங்களையும் பாடி முருகவேளின் முழுத திருவருளையும் பெற்றவர். இவர் பாடிய நூல்களில் கந்தரனுபூதிக்கு ஓர் உரை எழுதி அச்சிட வேண்டுமென்று எண்ணி 100-பாடல்களுக்கு திரிசிரபுரம் செயின்ட் ஜோசப்ஸ் காலேஜ் தமிழாசிரியர் வித்துவான் - R. மீனாக்ஷி சுந்தரம் பிள்ளை அவர்களால் சிலவிடங்களில் தக்க மேற்கோள்களை எடுத்துக் காட்டியும் சொல்நயம் பொருள்நயங்களை விளக்கியும் எழுதப் பெற்று சுத்தப் பிரதியாய் வெளியிட்டிருக்கிறது.

விலாசம்:—

அ. இரங்கசாமி முதலியார் ஸன்ஸ்

24, தாண்டவராயப்பிள்ளை வீதி,

சென்னை.